


கல்கி
KALKI 20.9.1959
30 காசு



# ரோஜா மலர் போன்ற வதனம்



பட்டுப் போன்ற மென்மையான
வினோலியா ரோஸ் டாய்லெட் பவுடர் உங்கள் சருமத்தைப்
பூவிதழ் போன்ற மழமழப்புடன் வைத்திருக்கும்.
இணைபிரியாத அதன் ரோஜா மணம் கமகமவென்று
மணிக்கணக்காக உங்கள் மீது கமழ்ந்திருக்கும்.

## வினோலியா ரோஸ் டாய்லெட் பவுடர்

வசீகரிக்கும் ரோஜா மணமுள்ள, வெண்மையான பவுடர்

லண்டனிலுள்ள வினோலியா கம்பெனி சார்பாக, இந்துஸ்தான்
லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

VRTP.3-50 TM

# கல்கி

## பொருளடக்கம்

**செப்டம்பர் 20, 1959**



"கல்கி" யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




| | | |
|---|---|---|
| மலர் 19<br>இதழ் 8 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற<br>தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | விகாரி௵<br>புரட்டாசிமீ 4௳ |


# சீனப் பிரச்னை

இன்றுள்ள சூழ்நிலையில் சீனாவை, ஐ. நா. ஸ்தாபனத்துக்குள் அனுமதிக்காதது போன்ற அறிவீனம் வேறு கிடையாது. அமெரிக்கா சீனாவை உள்ளேவிட முடியாது என்று பிடிவாதமாக இருக்கிறது. இப்படி மறுத்தால்தான் சீனாவுக்குக் கடுமையான தண்டனை விதித்ததாகும் என்று சிலர் நினைக்கிறார்கள். அனுமதித்து விட்டால் சீனா செய்த தவறுகளை மன்னித்து விட்டதாகவோ, அல்லது அங்கீகரித்து விட்டதாகவோ ஆகிவிடக் கூடுமே என்று பயப்படுகிறார்கள்.

மேற்கத்திய நாடுகளுக்கும், கம்யூனிஸ்ட் நாடுகளுக்குமிடையேயுள்ள பகைமை ஓயாமல் வளர்த்துக் கொண்டிருப்பதற்காகத்தான் ஐ. நா. சபை ஏற்பட்டிருப்பது போல் நடந்து கொள்வது சற்றும் சரியல்ல. ருஷ்யா ஐ. நா. சபையில் சந்தர்ப்ப விசேஷத்தினால்தான் ஒரு ஸ்தானம் பெற்று விட்டது. அதாவது சென்ற யுத்தத்தில் ருஷ்யா, மேற்கத்திய நாடுகளுடன் சேர்ந்து கொண்டு, ஹிட்லருடன் சண்டையிட்டதால் யுத்தம் முடிந்தவுடன் ஏற்படுத்தப்பட்ட ஐ. நா. சபையில் ருஷ்யாவுக்கு இடம் கொடுக்க வேண்டியதாகி விட்டது. இல்லையேல் கம்யூனிஸ்ட் ருஷ்யாவுக்கு யார் இடம் தருவார்கள்? ருஷ்யா விஷயத்தில் செய்த தவற்றைச் சீனா விஷயத்தில் செய்யக் கூடாது என்று சிலர் நினைக்கிறார்கள்.

ஐ. நா. சபை ஏற்படுத்தியதன் நோக்கம் என்னவென்பதைச் சரியாக மனதில் கொண்டால் மேற்கண்ட எண்ணங்களும் நடவடிக்கைகளும் முற்றிலும் தவறு என்று புரியும். உலகில் யுத்தங்களையும் பூசல்களையும் ஒழித்து, சமாதானம் நிலைநாட்ட வேண்டும் என்று இந்த ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இப்பொழுது ஐ. நா. வையே சீதள யுத்தத்துக்கு ஒரு ஆயுதமாக அமைத்துவிடப் பார்க்கிறார்கள்.

ஐ. நா. சபையினால் உலக நாடுகளிடையேயுள்ள அடிப்படை பகை உணர்ச்சியை நீக்க முடியவில்லை என்பது உண்மையே. ஆனால் ஆங்காங்கு ஏற்படும் சிறு சிறு சண்டைகளையும் பூசல்களையும் தடுக்க உபயோகப்பட்டிருக்கிறது.

ஐ. நா. சபை விவாதத்துக்காக ஏற்பட்டது. ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் பகை முற்றினால் அந்தப் பகையைப் பீரங்கிகளைக் கொண்டு தீர்த்துக் கொள்வதற்கும் பதிலாக வாத விவாதத்தின் மூலம் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வது எவ்வளவோ மேல் அல்லவா? அதற்காகத்தான் ஐ. நா. சபை ஏற்பட்டது.

ஒரு சர்க்கார் கட்டுப்பாட்டுடன் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அந்தச் சர்க்காரை ஐ. நா. சபையில் அனுமதித்து, நல்லபடியாக நடத்தினால் அல்லவா அந்த நாடும் நல்ல முறையில் நடந்து கொள்ள முயலும். எடுத்த எடுப்பிலேயே "உள்ளே வராதே!" என்று முரட்டுத்தனமாக நாமே நடந்து கொண்டால், அது எப்படி ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அடையும்? இந்த உண்மையை இந்தியா ஓயாமல் சொல்லி வந்திருக்கிறது. ஆனால் சியாங் கே ஷேக்குக்குத் தஞ்சம் அளித்ததன் காரணமாக இந்த உண்மை அமெரிக்காவின் கண்களுக்குப் புலப்படாமல்

இருந்து வருகிறது. ஆயினும் இந்தத் திரையை நீக்குவது அப்படியொன்றும் சிரம சாத்தியமான காரியமல்ல!

'சியாங்கே ஷேக்தான் சீனாவின் பிரதிநிதி' என்ற கட்டுக் கதையை அவிழ்த்து விட்டு ரொம்ப நாட்களாகி விட்டன. போதும் இந்தப் பொய்ம்மை! இன்னும் இந்தக் கட்டுக் கதையை வைத்துக் கொண்டு அலைய வேண்டாம். சியாங் கே ஷேக்கினாலோ, அவருடைய ராணுவத்தாலோ சீனா நாட்டை மறுபடியும் பிடிக்க முடியாது! ஆயினும் இந்தக் கட்டுக் கதைக் காலட்சேபத்தை நடத்தித்தான் ஆகவேண்டுமென்றால் அதைப் பார்மோஸா தீவுக்கு மட்டும் வைத்துக் கொள்ளலாம். சியாங் கே ஷேக் பார்மோஸாவின் அதிகாரி என்று மட்டும் கொள்ளலாம். சீனா முழுவதற்கும் அவர் பிரதிநிதி என்ற வீண் வாதத்தை அகற்றிவிட வேண்டும். ருஷ்யா ஐ. நா. சபையில் இருப்பதுபோல், செஞ்சீனாவும் ஐ. நா. சபையில் உட்கார்ந்தால் சீனாவுக்குப் புத்திமதி சொல்லி அடக்க முடியும்.

ஆகவே சீனாவுக்கு அழைப்பு அனுப்ப வேண்டும். சீனா அப்போது ஐ. நா. சபைக்கு வர மறுத்தால், உலக நாடுகளின் கண்டனம் முழுதும் சீனாவுக்குத்தானே வந்து சேரும். இதனால் அமெரிக்காவுக்கு ஒரு நஷ்டமுமில்லையே!

சீனா இப்படியொரு காரியம் செய்யாது என்று நிச்சயமாக நம்பலாம். தற்கொலைக்கொப்பான ஒரு செயலை எந்த நாடுதான் செய்யும்? சீனா ஐ. நா. சபைக்குள் வந்து விட்டால், சீனாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் ஏற்படும் தகராறுகள் பற்றிப் பகிரங்கமாகப் பேசவும் கண்டிக்கவும் வாய்ப்பு ஏற்படும். இந்தியா இவ்விஷயத்தை வெகு நாட்களாகச் சொல்லி வருகிறது. 'சீனாவை அனுமதியுங்கள்' என்பது ஒரு புது வேண்டுகோள் அல்ல!

இந்தியாவின் எல்லையில் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், சீனாவை ஐ. நா.வுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று சொல்லி வந்தது எவ்வளவு முக்கியமான விஷயம் என்பதை எல்லாருக்கும் இப்போது தெளிவுபடுத்தி விட்டன. ஆகவே, இந்த நிமிஷம் அமெரிக்கா இந்தியாவுக்குச் செய்யக் கூடிய பெரிய உபகாரம் ஐ. நா. சபையில் சீனாவைச் சேர்க்க அங்கீகரிப்பதுதான். மற்ற ''உதவி''களைவிட இது மிக அவசியமான உதவியாகும். இப்படிச் செய்தால் திபெத்துக்கும் செய்த பேருபகாரமாகும்.

உலக சமாதானத்தை நிலைநாட்ட ஏற்பட்ட ஸ்தாபனத்தில் சீனாவைச் சேர்க்க இன்னும் தாமதித்தால், உலக சமாதானத்துக்கும் முக்கியமாக, இந்தியாவுக்கும் இழைத்த அநீதியாகும்.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் மனவேற்றுமையும் தகராறுகளும் ஏற்பட்டிருப்பதைக் கண்டு அமெரிக்காவில் குதூகலம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குதூகலம் பயனற்ற மடமை.

இன்றைய சூழ்நிலையில் எடுத்துக் கொள்ளக்கூடிய சரியான ஒரே ஒரு நடவடிக்கை சீனாவை ஐ. நா.வில் அனுமதிப்பதுதான்.

# சுதந்திரக் கட்சிக்கு உதவுங்கள்!

ராஜாஜி எழுதுகிறார்:

சுதந்திரக் கட்சிக்கு நிதி உதவி அளிக்குமாறு வேண்டுகிறேன். சுதந்திரக் கட்சியின் கொள்கைகள், பம்பாய் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டவை, பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கின்றன. அவை என்னென்ன என்பது இப்போது எல்லாருக்குமே தெரியும்.

சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளித்து, தனி மனிதனுக்குப் பூரண சுதந்திரம் இருக்க வேண்டும், அரசாங்கம் இதைக் குறைத்து அட்டூழியம் செய்யக் கூடாது என்பது இந்தக் கட்சியின் லட்சியம்.

இக்கட்சி பணக்காரர் கட்சி என்று ஒரு கதை கட்டி விடப்பட்டிருக்கிறது. இது உண்மையே அல்ல; பணக்காரர்கள் எல்லாரும் ஆளும் கட்சியின் வலையில் சிக்கித் திணறுகிறார்கள்.

ஆகவே இக்கட்சி சாதாரண மக்களிடமிருந்து எல்லாவித உதவியும் எதிர்பார்க்கிறது. நிதி உதவியும், அதேக்காற்போல் ஏராளமான பேர்கள் இந்தக் கட்சியில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து கட்சியைப் பலப்படுத்தவும் வேண்டும்.

நிதி சம்பந்தமாக ஒரு வார்த்தை. சிறிய தொகை, பெரிய தொகை எந்தத் தொகையாயினும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அவரவர்கள் ஊர்களில் ஏற்பாடு செய்யப்படும் சுதந்திரக் கட்சிக் கிளைகளுக்கு நிதி உதவி அளிப்பதோடு, மத்திய சுதந்திரக் கட்சிக்கும் நிதி உதவி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய சுதந்திரக் கட்சிக்கு அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட விலாசங்களில் ஏதாவதும் ஒன்றுக்கு அனுப்பலாம்.

B. V. நாராயண ரெட்டி
19, ரேஸ் கோர்ஸ் ரோடு (Race Course Road), பெங்களூர் - 1

H. P. மோடி
பாம்பே ஹவுஸ், ஸர் பிரோஸ்ஷா மேத்தா ரோடு, பம்பாய் - 1

# யார் இந்தப் பௌராணிகர்?

கல்கி நேயர்கள் பாக்கியசாலிகள். வியாச பகவான் இயற்றிய மகாபாரதத்தையும் வால்மீகி முனிவர் இயற்றிய ராமாயணத்தையும் நமது அருமைத் தலைவர் ராஜாஜி எழுத அவற்றை முதன் முதலில் வாரந்தோறும் படிக்கும் வாய்ப்பு கல்கி நேயர்களுக்கே யல்லவா கிடைத்தது! பாரத நாட்டின் அந்த இரு பெரும் செல்வங்களை ராஜாஜி அளிக்க, படிக்கும் வாய்ப்புப் பெற்ற தமிழர்கள் கண்ணனின் வரலாறு அடங்கிய பாகவதத்தையும் ராஜாஜியை அளிக்குமாறு கோரினார்கள். ராஜாஜி அதைச் செய்யத் தமக்கு வசதியோ, நேரமோ இல்லை என்று கூறி வந்தார். நேயர்கள் தங்கள் வேண்டுகோள்களை நிறுத்தியபாடாக இல்லை. கடைசியில் தக்க அன்பர் ஒருவரைப் பிடித்து அவரிடம் இப்பணியை ஒப்புவித்தார். அவரும் ராஜாஜியின் பூரண ஆசியிருக்குமானால் தாம் அந்தப் புனிதப் பணியை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றார். ராஜாஜியும் மனம் நெகிழ்ந்து ஆசி நல்கினார். ராஜாஜியின் ஆசியுடன் பக்தி வயல் கல்கியில் வெளியாகியது.




ராஜாஜியின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட எப்பணியும் குறைப்படுவதில்லை. அந்த இலக்கணத்துக்கு ஏற்ப, பாகவதமாகிய பக்தி வயல் எவ்வித இடையூறுமின்றித் தொடர்ந்து வெளியாகி இந்த இதழுடன் முடிவடைகிறது.

கண்ணபிரானுடைய அவதாரங்களையும், லீலைகளையும், பக்தர்களின் வரலாறுகளையும் வாரந்தோறும் சித்திரித்து நேயர்கள் மனம் மகிழ்ந்து உள்ளம் தூய்மையுறும் வண்ணம் 55 வாரங்களாகத் தொடர்ந்து இந்தப் பகுதியை இவ்வளவு சிறப்பாக எழுதி வந்த பௌராணிகருக்குக் கல்கி நேயர்களின் சார்பில் நன்றி தெரிவிக்கிறோம்.

பௌராணிகர் என்ற புனை பெயரில் பக்தி வயல் வெளியாகியிருந்து, "யார் இந்தப் பௌராணிகர்?" என்று நேயர்கள் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல; கல்கி ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டிருந்த ஒரு சிலர் இப்படிப் புராணக் கதைகள் சொல்பவர்களாக இருந்து விட்டால் அவர்களை, "ஏன் சுவாமி! நீர்தான் பௌராணிகரோ?" என்று கேட்பது சகஜமாகி விட்டது.

---

## நட்பு கொள்ளுவோம், வாரீர்!



"நடந்துவிட்டதை எல்லாம் மறந்துவிடுவோம், பண்டிட்ஜி! இப்போது சிநேகமாகவே இருக்கலாம், வாருங்கள்!" — சூ என் லாய்

இப்படி இந்தப் பகுதிக்குச் சம்பந்தமில்லாத வர்களையெல்லாம் பௌராணிகர் என்று சொல்வதும், அதன்மேல் காரசாரமாக வாதாடுவதும் தமிழ்நாட்டில் வழக்கமாகி விட்டன. ஆகவே, இனியும் இந்த ரகசியத்தை மூடி வைக்கக் கூடாது என்று தீர்மானித்து ஸ்ரீமான் எஸ். ஒய். கிருஷ்ணசுவாமி ஐ. ஸி. எஸ். (ரிடையர்டு) அவர்கள் தான் பௌராணிகர் என்ற புனைபெயரில் இத்தனை நாட்களும் பாகவதக் கதைகளைச் சொல்லி வந்தார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

ஸ்ரீ எஸ். ஒய். கிருஷ்ணசுவாமி அவர்கள் தமிழ் ஜில்லாக்களில் கலெக்டராகவும் மத்திய சர்க்காரில் உணவு இலாகா காரியதரிசியாகவும் இருந்திருக்கிறார் என்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம். நல்ல சங்கீத ரஸிகர் என்றும், நகைச்சுவை ததும்பப் பேசக் கூடியவர் என்றும், தமிழிலும் ஆங்கிலத்திலும் நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதக் கூடியவர் என்றும் அறிந்திருக்கலாம். இவை யெல்லாவற்றையும் விட அவர் சிறந்த முறையில் ஸம்ஸ்க்ருதம் படித்தவர் என்பது எல்லோருக்கும் தெரிந்திராது. அவர் தந்தை காலஞ் சென்ற ஸ்ரீ யக்ஞநாராயணய்யர் அவர்கள் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் ஒரு மகா பண்டிதர்.


ஆகவே பௌராணிகருடைய வடமொழி அறிவு ரத்தத்தில் ஊறிப் போன விஷயம், பரம்பரைச் சொத்து. அது மட்டுமல்ல; பாகவதம் எழுத வேண்டும் என்று சொன்ன போது, உடனே ஒரு ஸம்ஸ்கிருதப் பண்டிதரையும் அமர்த்திக் கொண்டு அவருடன் கூட, ஒழுங்காக, சிரத்தையோடு பாகவதத்தை முதலிலிருந்து படித்து எழுதத் தொடங்கினார். பாகவத காவியத்தை எழுதச் சிரத்தைமட்டும் இருந்தால் போதுமா? பக்தியும் வேண்டுமல்லவா? இந்த இதழில் வெளியாயுள்ள பக்திவயலின் கடைசி அத்தியாயத்தைக் குருவாயூர் கோவிலில் கண்ணன் சந்நிதியில் அமர்ந்து ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி எழுதி அனுப்பியுள்ளார். இது ஒன்றுபோதும், அவருடைய பக்தியை எடுத்துக் காட்டுவதற்கு.

இப்படி வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய எல்லாவற்றிலும் நல்ல பாண்டித்தியமும், ரஸானுபவமும் பெற்ற ஒரு கல்விமானால் பக்தி வயல் எழுதப் பெற்றது கல்கி நேயர்கள் செய்த பாக்கியம்தான்.

பக்திவயல் எழுதிய பௌராணிகருக்கும் படித்து வந்த நேயர்களுக்கும் கண்ணன் திருவருள் என்றென்றும் கிட்டுவதாக.

---

பாரதி சங்கத்தின் ஆதரவில் சென்னை வாணி மகாலில் பாரதியார் விழா இம்மாதம் 11, 12 தேதிகளில் நடைபெற்றது. ராஜாஜி அவர்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார். கூட்டத்துக்குத் திரு பாஸ்கரத் தொண்டைமான் தலைமை வகித்தார். திரு ம. பொ. சிவஞானம், திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரி, பேராசிரியர் அ. சீநிவாசராகவன், ஸ்ரீமதி இந்திரா முதலிய பல அறிஞர்களும் பாரதி அன்பர்களும் சொற்பொழிவாற்றினர்கள். திரு சிவாஜி கணேசன் அவர்கள் தலைமையில் திரைப்பட நடிகர்கள் குழு அமைத்து, சென்னை மவுண்ட் ரோடு, 'ஆபட்ஸ்பரி'யில் பாரதி விழா கொண்டாடினார்கள். இந்த விழாவில் நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் துவக்க உரை நிகழ்த்துவதையும், வாணி மகாலில் நடந்த பாரதி விழாக் காட்சிகளையும் படங்களில் காணலாம்.



# நிற்கட்டுமா? போகட்டுமா?

காதலன் வரவை அறிந்தும் காரிகை தன் பார்வையைத் திருப்பாமல் நிற்கிறாள். பாவையின் பார்வை தன் பக்கம் திரும்பா விட்டாலும், அவள் உள்ளம் எப்பொழுதோ தன் வசமாகி விட்டதை அவன் நன்கு அறிவான். காதலன் வரவுக்காகக் காத்திருக்கும் காதலிக்கு ஒரு தனிக்கவர்ச்சி; அதைப்பார்த்து நிற்கும் காதலனுக்கும் ஒரு தனி அழகு.

ஆனால் அந்த அழகிலேயே ஈடுபட்டு நாள் முழுவதும் அப்படியே நின்று கொண்டிருக்க முடியுமா? ஆணுக்குத்தான் எதிலும் அவசரமாயிற்றே! எத்தனை நேரம்தான் அப்படிக் காத்துக் கொண்டு நிற்பான்! அவளையே உத்தரவு கேட்டு விட்டான்.

“நீலக் கருங்குயிலே
நிக்கட்டுமா போகட்டுமா?”

கிராமச் சூழ்நிலையில் விளைந்த காதலனுக்கு, ஏட்டில் எழுதாக் கவிதையான நாட்டுப் பாடல் எவ்வளவு அழகாய்ப் பொருந்துகிறது! இந்த இயற்கைக் காதல் காட்சியை இவ்விதம் அட்டைப் படமாக வரைந்திருக்கிறார் ஓவியர் ரமணி.

சுதந்திரக் கட்சி - கொள்கை விளக்கம்:

# கம்யூனிஸ்ட் சிவப்பு; காங்கிரஸ் ஊதா!

“சுதந்திரக் கட்சி போட்டிக்கு வந்தால் காங்கிரஸ் வோட்டு இருவருக்குமாகப் பிரிந்துவிடும். கம்யூனிஸ்ட் கட்சிக்கு இதுவும் ஒரு பலம்” என்று சிலர் ஓலமிடுகின்றனர். இதைச் சற்று ஆராய்வோம்.

முதலாவது, இன்றைய காங்கிரஸ் திட்டங்களுக்கும், கம்யூனிஸ்ட் திட்டங்களுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்பதை நாம் அறிய வேண்டும். நில உச்சவரம்பு காங்கிரஸ் வேண்டுமென்கிறது. அதைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆமோதிக்கிறது. கூட்டுறவுச் சாகுபடி வேண்டுமென்று காங்கிரஸ் கதறுகிறது. சரி என்று கம்யூனிஸ்ட் கட்சி தலை அசைக்கிறது. இன்ஷ்யூரன்ஸ் முதலான ஸ்தாபனங்கள் தனிப் பகுதியில் இருக்கக் கூடாது என்பது கம்யூனிஸ்ட் கொள்கை. அவைகளைக் காங்கிரஸ் நடத்தியே காண்பித்து விட்டது—லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனின் ஊழல்கள் இன்றைக்கும் முடிந்தபாடில்லை!

நாகபுரி காங்கிரஸ் திட்டங்களை ஆதரித்தது நேற்றுவரையில் கேரளத்தில் ஆண்டு வந்த கம்யூனிஸ்ட் சர்க்காரே. திரு நம்பூதிரிப்பாடவர்கள் சில நாட்களுக்கு முன் பேசுகையில், “நாகபுரியிலும் ஆவடியிலும் போட்ட திட்டங்களைத்தானே நான் அமுலுக்குக் கொண்டுவரப் பார்க்கிறேன். ஏன் குற்றம் கூறுகிறீர்கள்?” என்று காங்கிரஸ் தலைவரைக் கேட்டார். அந்தக் கேள்விக்குப் பதில் இல்லை.

ஆலைகளும் வியாபாரமும் பொதுப் பகுதியில் இருக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியினர் நம்புகின்றனர். ஒன்றன்பின் ஒன்றாகக் காங்கிரஸ் பொதுப் பகுதியை விஸ்தரித்துக் கொண்டே வருகிறது. காங்கிரஸ் சர்க்காரின் “ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்” சிமெண்ட் ஆலைகளுக்கு அறுபது ரூபாய் கொடுத்துப் பெற்றதை நூற்றி இருபது ரூபாய்க்கு வெளியில் பொது மக்களுக்கு விற்பனை செய்கிறது! உணவுத் தான்யங்களையும் பொதுப் பகுதியாக்க வேண்டுமென்பது காங்கிரஸ் கொள்கை. இந்தியாவில் சுரங்கம் வைத்து எடுக்கப்போகும் பெட்ரோல் முதலிய எண்ணெய்களைப் பொதுப் பகுதியில் அரசாங்கம் விற்கப் போகிறதாம். இன்றைய வரிகளோ உச்ச நிலையில் நிற்கின்றன. ‘கம்யூனிஸ்ட் கடையைவிட எங்கள் கடையில் சரக்கு நயம். இங்கே வாருங்கள்’ என்று வோட்டர்களைக் காங்கிரஸ் அழைத்து வருகிறது.

“நிலம் உள்ளவர்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கிப் பங்கிடுவோம்; ஆனால் அவர்களுக்கு நிலத்தின் முழு விலையைக் கொடுக்கமாட்டோம்” என்கிறது காங்கிரஸ். “ஒரு விலையும் கொடுக்க வேண்டாம்” என்கிறது கம்யூனிஸ்ட் கட்சி. ஒருவன் ஓடுகிறான். மற்றொருவன் வேகமாக நடக்கிறான். இருவர் செல்வதும் ஒரே பாதையில்தான்.

ஆகவே காங்கிரஸை எதிர்ப்பதற்கும் கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பதற்கும் அதிக பேதம் இல்லை. இரு கட்சிகளும் ஒரே வழியில் செல்கின்றன. இருவரையும் ஒருங்கே எதிர்க்க, இருவருடைய கொள்கைகளையும் தவறு என்று நிரூபிப்பதற்கு வேறு வழியில் செல்லும் கட்சி வேண்டும். அந்தக் கட்சிதான் சுதந்திரக் கட்சி.

# சிறந்த சாதனை

மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் புத்தகங்களும் பிரசுரங்களும் எவ்வளவு இன்றியமையாத சாதனங்களோ அவ்வாறே அவற்றை விநியோகிக்கும் ஸ்தாபனங்களும் இன்றியமையாதனவை. புத்தகக் கடைக்குச் சென்று வேண்டிய புத்தகங்களை வாங்குவது சாதாரண முறை. ஆனால் படிப்பவர்களைத் தேடிப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் எடுத்துச் செல்வது அதைவிடச் சிறந்தது. பிரயாணம் செய்து கொண்டிருக்கும் மக்களுக்கு, அவர்கள் செல்லுமிடங்களுக்கெல்லாம் புத்தகங்களை எடுத்துச் சென்று விநியோகம் செய்வது எல்லாவற்றையும்விட உன்னதமானது. கஷ்டமான செயல். திறமையுடனும் வெற்றிகரமாகவும் இதைத்தொழில் முறையில் நடத்த வெகு சாமர்த்தியம் வேண்டும். அப்படி ஒரு ஸ்தாபனம் இச்செயலை ஒருவருஷம் அல்ல, சில வருஷங்கள் அல்ல, முக்கால் நூற்றாண்டு—தொடர்ந்து செய்து வந்தால் அவர்களைப் பற்றி எவ்வளவு பாராட்டினாலும் தகும்.



ஆர். என். பானர்ஜி

அப்படிப்பட்ட ஸ்தாபனம் ஏ. எச். வீலர் அண்டு கம்பெனி. 1885-ம் ஆண்டில் திரு இ. இ. மேரோ என்ற பிரஞ்சுக்காரரால் அலஹாபாத் ரயில் பிளாட்பாரத்தில் ஒரு சிறிய பெட்டிமீது சில புத்தகங்களைப் பரப்பி வைத்துக் கொண்டு ஆரம்பித்த வியாபாரம் தான் இப்போது ஏ. எச். வீலர் அண்டு கம்பெனி என்று பிரும்மாண்ட ஸ்தாபனமாக வளர்ந்து வட இந்தியாவில் பெரிய ரயில்வே ஸ்டேஷன்கள் உள்ள இடங்களிலெல்லாம் ஒரு புத்தகக் கடையை நவீன முறையில் வைத்து, அரிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் பிரயாணிகளுக்கு விற்பனை செய்கின்றனர். காந்திஜி நூல்கள், சர்வோதய நூல்கள், நாவல்கள், பொழுது போக்குக் கென்றே உள்ள புத்தகங்கள், பத்திரிகைகள், தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் மற்ற எந்த பாஷையிலும் சரி, ஒரு நூல் நிலையத்தைப் போல் பல தரப்பட்ட பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றில் கல்கியும், ஸ்வராஜ்யாவும்கூட உண்டா என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? சந்தேகம் ஏன், நிச்சயமாக உண்டு. இக்கம்பெனியின் பெயரைக் கேட்டுமிருக்கவேண்டாம். பெயர் ஆங்கிலப் பெயர். 1937-ம் ஆண்டு வரையில் இது ஆங்கிலேயக் கம்பெனியாக இருந்தது. அதன் பிறகு இது முழு இந்தியக் கம்பெனி. திரு இஸ்கோர் முகர்ஜி என்பவர் இந்த ஸ்தாபனத்தின் முழுச் சொந்தக்காரராக இதை அல்லும் பகலும் வளர்த்திருக்கிறார். அவருடைய இரு புதல்வர்கள் திரு ஏ. வி. பானர்ஜியும், திரு ஆர். என். பானர்ஜியும் இதைப் பிரமிக்கத்தக்க திறமையுடனும் நாணயத்துடனும் எல்லோருடைய பாராட்டுதலுக்கும் உரித்தான முறையில் நடத்தி வருகின்றனர். அவர்கள் பணி மேலும் மேலும் வளரட்டும்.



ஏ. வி. பானர்ஜி

# பிரிந்தவர் கூடுவார்களா?

—கொழும்பு, செப்டம்பர் 9உ

கொழும்பில் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சென்ற இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்னும் சக்திமிக்க மத்திய ஸ்தாபனம் ஒன்றை நிறுவிக் கொண்டு கட்டுப்பாடாக இருந்தார்கள். அப்பொழுது அவர்களது சகல பிரச்னைகளையும் ஸ்தாபன ரீதியில் சமாளித்துக் கொள்ள வசதியிருந்தது. யுத்த காலத்திலும் யுத்தத்துக்குப் பின்னரும் அவர்களது ஸ்தாபனம் நலிந்து போய்விட்டது. பர்மா, மலாயா, இந்தோ சீனு முதலான நாடுகளில் செட்டியார்கள் வர்த்தகச் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகையில் இலங்கையில் மாத்திரம் செட்டியார்கள் சங்கம் கும்பகர்ண விரதத்தைக் கைக்கொண்டிருந்தது. இவ்வாரம் நகரத்தார்கள் கொழும்பில் ஒரு கூட்டம் நடத்தி, செட்டிநாடு பாங்க் மானேஜர் திரு பழனியப்பச் செட்டியார் தலைமையில் செட்டியார்கள் வர்த்தகச் சங்கத்தைப் புத்துயிர் கொடுத்து எழுப்பியிருப்பதுடன் தங்களது பொதுவான பிரச்னைகளை ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும் ஸ்தாபன ரீதியாக இனி சமாளிப்பதெனவும் சங்கற்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். இடையர் இடையென்று பல சட்டங்கள் தோன்றும் இந்தக் காலத்தில் செட்டியார்கள் சமூகம் தங்களது பொது நலனைப் பாதுகாத்துக் கொள்ள ஸ்தாபன ரீதியாக ஒற்றுமைப்பட வேண்டிய அவசியத்தைக் கூட்டத்தில் பலரும் வற்புறுத்திப் பேசினார்கள்.

## காங்கிரஸ் மகாநாடு

ஸ்ரீ தொண்டைமான் தலைமையிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது 18-வது வருடாந்திர மகாநாட்டை இம்மாதம் 10-ந் தேதியிலிருந்து 20-ம் தேதிவரை ஐந்து தினங்களுக்கு நாவலப்பிட்டி நகரில் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது. காங்கிரஸ் ஸ்தாபனம் தனது மகாநாட்டைச் சேர்ந்தாற் போல் ஐந்து தினங்களுக்கு நடத்துவது இதுவே முதன்முறையாகும். சுமார் இருபதினாயிரம் தொழிலாளர்கள் வசதியாக உட்கார்ந்து மகாநாட்டில் கலந்துகொள்ள ஒரு பிரும்மாண்டமான பந்தலை இப்பொழுது முதற்கொண்டே அமைத்து வருகிறார்கள். தென் கிழக்கு ஆசியா நாடுகளிலுள்ள பல பிரபல தொழிற்சங்கவாதிகள் மகாநாட்டில் கலந்து கொள்ள வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தியப் பிரச்னை சம்பந்தமாக அனேகம் முக்கியமான தீர்மானங்கள் இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் காங்கிரஸ் அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார். காங்கிரஸ் ஸ்தாபனம் இருகூறுகளாகத் தொண்டைமான் கோஷ்டியென்றும் அஸீஸ் கோஷ்டி யென்றும் பிரிவதற்கு முன்னும் 1956-ம் ஆண்டில் இதே நாவலப்பிட்டி நகரில் தான் காங்கிரஸ் மகாநாடு கூடியது. அடுத்தபடியாக இப்பொழுது நாவலப்பிட்டியில் கூடும் மகாநாடு பிரிந்தவர்களை மறுபடியும் ஒன்று சேர்க்கும் சரித்திர முக்கியத்துவம் பெறுமென்று பலரும் எதிர்பார்க்கிறார்கள். இரு ஸ்தாபனங்களுக்குமிடையில் தென்பட்ட மனக்கசப்பு பெருமளவு மறைந்துவிட்டதாக ஜனாப் அஸீஸ் சமீபத்தில் குறிப்பிட்டது இந்தச் சந்தர்ப்பத்தில் கவனிக்கத் தகுந்தது.

## புதிய காங்கிரஸ் தலைவர்

காங்கிரஸுக்கு திரு எஸ். சோமசுந்தரம் என்பவர் புதுவருடத் தலைவராக ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். திரு சோமசுந்தரத்துக்குப் போட்டியாக எவரும் அபேட்சா பத்திரத்தைத் தாக்கல் செய்யவில்லை. சென்ற நான்கு வருடங்களாக திரு எஸ். தொண்டைமான் தலைவரா யிருந்து வந்தார். அவர் காங்கிரஸுக்கு அளப்பரிய சேவைகள் செய்து வருவதை முன்னிட்டு, பன்முறையும் அவரையே தலைவராகத் தெரிவு செய்து வந்தபொழுதிலும் மற்றவர்களுக்கும் தலைமைப் பதவி கிடைக்க வேண்டுமென்று அவரே அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார். திரு சோமசுந்தரம் காங்கிரஸின் ஆரம்பக் காலத்திலிருந்து அதி தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டு வந்திருப்பவர். காங்கிரஸ் சார்பாக, அவர் அனேக சந்தர்ப்பங்களில் வெளிதேச மகாநாடுகளில் கலந்து கொண்டிருக்கிறார். தோட்டத் தொழிலாளரின் நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் பாத்திரமான தலைவர்களில் திரு சோமசுந்தரமும் ஒருவர்.

## இந்து சமூக நல ஸ்தாபனம்

கொழும்பைப் போலொத்த ஒரு சர்வதேசத் துறைமுக நகரில் ஐரோப்பியர்கள் வந்தால் அவர்கள் வசதியாகத் தங்கிப் போகப் பல பெரிய ஓட்டல்கள் இருக்கின்றன. ஐரோப்பியச் சங்கத்தின் ஆதரவில் அவர்களுக்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் இந்துக்கள் கொழும்புக்கு வந்தால் அவர்கள் பிறர் தயவின்றி வசதியாகத் தங்கிவிட்டுப் போக இதுவரையில் ஒரு இடமாவது இல்லை. அதிலும் தொழில் நிமித்தம் வட இந்தியாவிலிருந்து வருகின்றவர்களுக்குப் பெயரளவில் சொல்லிக் கொள்ளக்கூடச் சிறு இடமுமில்லை. இந்தக் குறையைப் போக்குவதற்காகப் பிரபல குஜராத்தி வர்த்தகரான திரு வி.பி. மோடி என்பவர் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கி ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தினார். அத்துடன் இலங்கையிலுள்ள குஜராத்தி சமூகத்தினர் நன்கொடைகள் வழங்கிக் கொழும்பில் மேட்டுத் தெருவில் விவேகானந்தச் சங்கத்தின் அருகில் வி. பி. மோடி கலாக்ஷேத்திரம் என்ற பெயருடன் ஒரு அழகான கட்டடத்தைக் கட்டி முடித்திருக்கிறார்கள். அதில் இந்தியாவிலிருந்து வரும் இந்துக்கள் எவ்விதமான கட்டணமும் செலுத்தாமல் தங்கியிருக்கச் சகல நவீன வசதிகளும் அடங்கிய பல அறைகளை அமைத்திருக்கிறார்கள்: வட இந்தியர், தென் இந்தியர் என்ற பாகுபாடு இல்லாமல் இந்துக்கள் யாராயிருப்பினும் அதில் தங்கியிருக்கலாம்.

—ரஜனி

[ இந்தக் கட்டுரை ஆசிரியர் திரு எம். ஏ. சீனிவாசன் முன்னாள் மைசூர் சமஸ்தானத்தில் அமைச்சராகப் பணியாற்றியவர். பிறகு கோலார் தங்கவயல் கம்பெனியின் டைரக்டராகச் சில காலம் சேவை செய்துள்ளார். தொழில் நுட்பம் தெரிந்ததுடன் நிர்வாகத் திறனுமுள்ளவர். தமது கருத்துக்களை ஆணித்தரமாக அச்சமின்றி அவர் அழகாக எடுத்துச் சொல்லுகிறார். —ஆசிரியர் ]

# புரியாத புதிர்

### எம். ஏ. ஸ்ரீனிவாசன்

நாட்டில் விபத்துக்கள் அல்லது உத்பாதங்கள் நேர்ந்தால் அவைகளுக்குப் பரிகாரமாகச் சில கிராமங்களில் ஒரு விசித்திரமான பழக்கத்தை மேற்கொள்ளுவார்கள். அதில் அவர்களுக்கு நம்பிக்கை. பிளேக், காலரா, வைசூரி அல்லது பஞ்சம் ஏற்பட்டால் கிராம மக்கள் நேராக அந்த ஊர் கோயிலுக்குச் சென்று, கிராம தேவதையின் உருவச்சிலையை அடியோடு பெயர்த்து, தாரை, தப்பட்டை வாத்தியங்களுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று கிராம எல்லைக்கு அப்பால் ஒருவரும் போகாத தனி இடத்தில் "சில நாட்கள் இங்கேயே இடு" என்று போட்டு விடுவார்கள். இதைச் செய்து முடித்ததும், இனி ஊரெல்லாம் சுபிட்சம் நிலவும் என்று திருப்தியுடன் எல்லோரும் வீடு திரும்புவார்கள்.

மத்திய சர்க்கார் உணவு விவசாய மந்திரியின் சமீப கால ராஜிநாமாவும், அவருக்கு முன்னால் அதே பதவியிலிருந்து விலகிய உணவு மந்திரி, நிதி மந்திரி முதலியவர்களது ராஜிநாமாக்களும் இந்தக் கிராமப்புற விசித்திர சம்பிரதாயத்தை நினைவூட்டுகின்றன. இந்தச் செய்கையினால் விளைந்த பலனும் ஒரே மாதிரிதான். கிராம தேவதையின் சிலையைத் தூர எறிந்துவிட்டதனால் கிராம மக்களுக்கு என்ன பலன் கிடைத்ததோ, அதே பலன்தான் உணவு மந்திரியை அகற்றிவிட்டதனால் கிடைத்திருக்கிறது. எனினும், உணவு மந்திரியையோ, நிதி மந்திரியையோ அகற்றிவிட்டால் நாட்டில் உணவுப் பிரச்னையும் நிதிப் பிரச்னையும் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை மட்டும் நீடித்து நிற்கிறது. இந்த நம்பிக்கை நீடிக்கும் வரையில், அவ்வப்போது கழுதைக்கேற்ற (கோமுட்டி)வர்கள் யாராவது கிடைத்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

பார்லிமெண்டில் திரு ஏ. பி. ஜெயினின் ராஜிநாமாவுடன் முடிவடைந்த விவாதம் மக்கள் மனத்தில் புரியாத புதிராக இருந்து வந்த நிலைமையைத்தான் குறிப்பாக எடுத்துக் காட்டியுள்ளது. பெருவாரியான விவசாய மக்கள் வாழும் நமது நாட்டில் அதிகார பூர்வமாகவும், புள்ளிவிவரங்களுடனும் உணவு உற்பத்தி பெருகி யிருக்கிறது என்று சொன்னாலும் உணவுதான்யங்கள் போதிய அளவுக்குக் கிடைக்காமல் விலைகளும் உயர்ந்து கொண்டே செல்லுவது ஏன் என்று ஒருவருக்குமே புரியவில்லை. இதுதான் இன்றைய நிலைமையில் தோன்றியுள்ள புதிர்.

இந்நிலை எப்படி உண்டாயிற்று? ஏன் தோன்றியது? நம்முடைய அரசாங்கம் தானே நம் நாட்டில் ஆட்சி செலுத்துகிறது? வறுமையிலும் அரைப் பட்டினியிலும் வாடும் மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்து உறுதி பூண்ட அரசாங்கம்தானே இப்போது நம்மை ஆளுவது. பதினொரு ஆண்டுகளாகத் தொடர்ந்து அரசு புரிவது இதே அரசு தானே? வரம்பில்லாத அதிகாரம் படைத்தவர்களல்லவா நமது சர்க்கார்? நமது பிரதமர் நேருவே ஏழு ஆண்டுகளுக்கு முன் கோடிக்கணக்கில் பணம் செலவுசெய்து அயல் நாடுகளிலிருந்து உணவுத் தானியங்கள் இறக்குமதி செய்வது குறித்து நாம் அவமானப்பட வேண்டும் என்று இடித்துக் கூறவில்லையா? உணவு விஷயத்தில் நாம் எப்படியும் தன்னிறைவு அடைந்தே ஆக வேண்டும், பட்டினி கிடப்பதானாலும் தானியங்களை இறக்குமதி செய்து தருவிப்பதில்லை என்றெல்லாம் ஆவேசமாகப் பேசினாரே! அப்படியிருந்தும் நாம் சுதந்திரம் அடைந்த பிறகு இதுவரையில் 1000 கோடி ரூபாய்க்குமேல் அயல்நாட்டிலிருந்து உணவுத் தானியங்கள் இறக்குமதி செய்யச் செலவழித்திருக்கிறோமே. இப்போதும் இந்தப் போக்கு நிற்கவில்லையே. ஆண்டுதோறும் சுமார் 150 கோடி ரூபாய் அளவில் இறக்குமதி செய்து கொண்டுதானே இருக்கிறோம். இதன் விளைவாக, நாட்டின் பொருளாதார நிலையே சீர்கெட்டுப் போகவில்லையா?

இம்மாதிரி கேள்விகளைத்தான் மக்கள் கேட்கின்றனர். இவைகளுக்கெல்லாம் சுருக்கமாக, தெளிவாக, ஒரே வார்த்தையில் பதில் அளித்து விடலாம். அதுதான் "அரசியல்."

## ஆவடித் தேர்

தங்களுடைய சொந்தக் கருத்துக்களுக்கேற்ற ஒரு ஸோஷலிஸ்டான சமுதாயத்தை நாட்டு மக்கள்மீது திணிப்பதென்று ஆவடியில் காங்கிரஸ் நிச்சயித்தது. இதை ஆவடித் தேர் என்று அழைக்கலாம். திருவாரூர் தேரை விடப் பிரும்மாண்டமானதொரு தேர் - இந்த ஸோஷலிஸத் தேர். இதை நிறைவேற்றி வைக்க மொகலாய சக்கரவர்த்திகளும் சமஸ்தானத்து மகாராஜாக்களுங்கூட அனுபவிக்காத அவ்வளவு அதிகாரத்தையும் பலத்தையும் ஆளும் கட்சியினர் தங்களுக்கும் தாங்கள் நடத்தும் அரசுக்கும் தாங்களே மேற்கொண்டு விட்டனர். இதன் விளைவாக, எங்கு பார்த்தாலும் அரசியல் வாடையும் சூழ்நிலையுமே நிலவுகின்றன. நாம் நிமிஷத்துக்கு நிமிஷம் மூச்சுவிடும் காற்றே அரசியலாக இருக்கிறது! பத்திரிகைகளி லெல்லாம் அரசியல் கரை புரண்டு ஓடுகின்றது. நிர்வாகம், பொருளாதாரம், விவசாயம், தொழில் இப்படி எல்

லாத் துறைகளிலும் அரசியலே மேலோங்கி நிற்கிறது.

நாம் சுதந்திரப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினோமே, அதனுடைய அனர்த்தமான விளைவுதான் இது என்பது என்னுடைய அபிப்பிராயம். அஹிம்சைப் போராட்டத்தை முக்கியமாக முன்நின்று நடத்தியவர்கள் காங்கிரஸ்காரர்கள். ஆயுதம் தாங்கி ராணுவ ரீதியில் சுதந்திரப் போராட்டம் நடந்திருந்தால் அதன் சின்னங்களாக ராணுவத்தினர் பலபேர்களைக் காணநேர்ந்திருக்கும். புதிதாகக் கட்டப்பட்ட பாலங்கள், அணைகள் முதலிய இடங்களில் உடைந்த செங்கற்கள் இங்கு மங்குமாகச் சிதறிக் காணப்படுவது போல் சுதந்திரப்போராட்டத்தின் சின்னங்களாக, அறிகுறிகளாகக் காங்கிரஸ்காரர்கள் காட்சியளிக்கின்றனர்.

இப்படிச் சொல்வதால் நாட்டின் சுதந்திரத்துக்குப் போராடி வெற்றி பெற்ற இந்தத் தீரர்களைக் குறைவாகவோ, அவர்களிடம் நன்றியில்லாமலோ பேசுவதாகக் கொள்ள வேண்டாம். வெள்ளம் வடிந்தபிறகும் அதன் சின்னங்கள் அகற்றப்படாமல் திட்டுகள் தேங்கிக் கிடப்பது போல், இன்னமும் அரசியல் நமது சமூகத்தில் பழங்கால நினைவுச் சின்னங்களாகத் தங்கி விட்டது என்பதை எடுத்துக்காட்டவே இதைச் சொல்லுகிறேன்.



திரு எம். ஏ. ஸ்ரீனிவாசன்

தவிரவும், நமது ஒப்பற்ற தலைவரிடத்திலும் அவருடன் துணைநின்ற இதர தேசியத் தலைவர்களிடத்திலும் மக்களுக்கிருந்த பக்தியும் அன்பும் இன்னமும் காங்கிரஸ் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு உலவும் தலைவர்களிடத்தும் காட்டப்படுகிறது. ஊர்வலத்தில் நடுநாயகமாகச் செல்லும் மஹா புருஷனுடைய ரோஜாமாலையின் இதழ்கள் பக்கத்தில் செல்லும் சாதாரண மனிதர்கள் உடையிலும் ஒட்டிக்கொண்டிருப்பதுபோல் இப்போதையக் காங்கிரஸ்காரர்களிடத்தும் மக்களின் அன்பு ஒட்டிக் கொண்டிருக்கிறது.

இதை அவ்வப்போது நமது காங்கிரஸ்காரர்களே உணருவதுமுண்டு. மந்திரிகளுக்குத் தங்கள் தங்கள் இலாக்காக்கள் தலைவலி அளிக்கும்போது, குறிப்பிட்ட விஷயங்களை அரசியல் சம்பந்தத்திலிருந்து விலக்கிப் பார்க்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லுவார்கள்; அந்தச் சமயங்களில் அவர்களுடைய சித்தம் தெளிவுற்றிருக்கும். ஆனால் அம்மாதிரி சந்தர்ப்பங்கள் நீடித்து நிற்பதில்லை. பதவி மோகமும், அதிகார ஆசையும் மறுபடியும் தலைதூக்கும்போது பழைய வழக்கத்தின் வன்மை அவர்களை ஆட்கொண்டு விடும். அரசியலிலிருந்து தனித்து இருக்க வேண்டிய

ஆனால் அரசியல் உட்புகுந்து சமீப சில ஆண்டுகளாகக் குட்டையாகக் குழப்பிக் கொண்டிருக்கும் விஷயம் ஒன்று உண்டென்றால் அது தான் விவசாய நிலம்.

தங்களைப் பதவியில் நிலைக்கச் செய்யும் வோட்டுகளில் பெருவாரியானவை கிராமங்களில்தான் இருக்கின்றன என்பதை நன்கு உணர்ந்த நமது ஆளும் கட்சியினர் கிராமவாசிகளின் ஓட்டுகளைக் கவருவதற்காகப் பல கோஷங்களைத் தயாரித்திருக்கின்றனர். ''நிலம் மக்களுக்குச் சொந்தம்; நிலமில்லாதவனுக்கு நிலம்; நிலத்துக்கு உச்ச வரம்பு; கூட்டுப் பண்ணை விவசாயம்'' — முதலிய கோஷங்கள் வோட்டுச் சேகரிக்கும் கோஷங்கள்.

## ஒன்றுக்கு ஒன்பது பொய்

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்கள் சொல்லியாக வேண்டும். இது முற்றிலும் உண்மை. அதே போல், ஒரு தவறை மறைக்க ஒன்பது தவறுகள் செய்ய வேண்டும் என்பது என்ன, தொண்ணூறு தவறுகள் செய்ய நேரலாம். நிலத்துக்கு உச்சவரம்பு, கூட்டுப் பண்ணை விவசாயம், உணவுத் தானியத்தில் அரசாங்க வர்த்தகம் — இவை ஒன்றிலிருந்து ஒன்று சங்கிலித் தொடர் போலத் தோன்றித் தனது இரும்புத் தளைகளால் ஆளுவோர் ஆளப்படுவோர் இரு சாராரையும் இறுக்குகிறது.

இந்தக் கொள்கைகள் தவறானவை என்பதை நமது நாட்டின் நலனுக்குப் பொறுப்பேற்று நடத்தும் அமைச்சர்கள் உணர்ந்தவர்கள் என்று தள்ளிவிட முடியாது. இதைக் கூறும்போது நான் பொதுவாகவே சொல்லுகிறேன், மைசூர் மாநில விவசாய மந்திரி, சமூக க்ஷேமநல மந்திரி முதலிய அறிமேதாவிகளைப் பற்றிச் சொல்லவில்லை. மைசூர் ராஜ்யத்தில் காணப்பட்ட உணவு நெருக்கடியை இந்த மேதாவிகள் சடுதியில் வெகு சுலபமாகத் தீர்த்துவிட்டனர். அரிசி கிடைக்கவில்லை, கேழ்வரகு கிடைக்கவில்லையென்று மக்கள் கூக்குரலிடும் போதெல்லாம் அவர்களைப் பார்த்து, ''முட்டை சாப்பிடுங்கள்; மீனும், இறைச்சியும் தாராளமாக உண்ணுங்கள்; பழ வகைகளைத் தின்னுங்கள்'' என்று சோர்வடையாது உபதேசிக்கின்றனர். ஆனால் இப்படிப்பட்டவர்கள் தனிப்பிறவிகள். அவர்களைப்பற்றி நான் சொல்லவில்லை; சாதாரண அறிவுள்ள அமைச்சர்களையே குறிப்பிட்டேன். உதாரணமாக, ராஜிநாமா செய்த மத்திய உணவு மந்திரி உண்மை நிலைமையைப் புரிந்துகொண்டதாகவே கூறினார். அவரால் அதற்குப் பரிகாரம் ஒன்றும் செய்ய முடிய

வில்லை. ஐயோ, பாவம்! அவருக்குப் பின்னால் அந்தப் பதவிக்கு வந்திருக்கும் திரு எஸ். கே. பாட்டீல் நடைமுறையில் நாட்டம் கொண்டு நிலைமையை நன்கு புரிந்து கொண்டதுடன் அதைச் சமாளிக்க நடவடிக்கை எடுக்கப் போவதாயும் சொல்லுகிறார். அரசாங்க வர்த்தகத்தைப் பற்றி அவர் தம்முடைய கருத்தைச் சொன்னதுடன் கட்டுப்பாடற்ற வர்த்தகத்தில் தமக்குள்ள நம்பிக்கையைப்பற்றித் தைரியமாகவே குறிப்பிட்டார்.

கூட்டுப் பண்ணையில் சேருவதற்கு ஒருவரும் நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள்; முழு சுதந்திரத்துடனே சேரலாம் என்றெல்லாம் காங்கிரஸ் மேலிடத்தில் அடிக்கடி வலியுறுத்தப் படுகிறது. நாட்டில் பரவலாக உள்ள அதிருப்தியைப் போக்கவும், கூட்டுப் பண்ணை விவசாயம் பற்றி அரசாங்கம் தீர்மானித்து விட்டதால் கிராமங்களில் காணப்படும் வெறுப்பை நீக்கவும், கூட்டுறவு விவசாயம் காலப் போக்கில் கூட்டுப் பண்ணையிலும் அடிமை வாழ்க்கையிலுமே கொண்டுவிடும் என்று அநுபவம் முதிர்ந்த விவேகிகள் சொல்லும் கூற்றை எதிர்க்கவும் இந்தப் பிரசாரம் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் அடிக்கடி சொன்னாலும், உயர் அந்தஸ்திலுள்ளவர் சொன்னாலும் மக்கள் மனத்தில் என்னவோ நம்பிக்கை வளரவில்லை. மாறாக, திருப்பித் திருப்பிச் சர்க்கார் சொல்லுகிறார்களென்பதனாலேயே இதுவும் ஒரு ஏமாற்று வித்தை என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

நான் மேலே சொல்லி விருப்பதுபோல் அரசியல் சண்டையில் விளை நிலங்கள் இப்போது யுத்த பூமியாக மாறிவிட்டன. யுத்த பூமியில் அங்கங்கே கண்ணிகள் வைத்திருப்பது போல் விளை நிலங்களிலும் கண்ணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நிலத்தின் அருகில் செல்லவும் மக்கள் அஞ்சுகின்றனர்.

மிகப் பழைமையான காலத்திலிருந்து நிலத்தை "ஸ்திர" சொத்தாக நாம் கருதி வருகிறோம். நிரந்தரமானது, நிச்சயமானது, அசையாப் பொருள் - என்றெல்லாம் நிலத்தைக் கருதி வருகிறோம். நில விற்பனைப் பத்திரங்களில் நிலத்தைக் கிரயம் வாங்கிக் கொள்ளுகிறவர் "அஷ்டபோக தேஜஸ்வாமியம்" என்று எட்டுவித சுக போகங்களை அவரும் அவர் சந்ததியாரும் சந்திர சூரியர்கள் உள்ளவரையில் (ஆசந்திரார்க்கம்) அநுபவிக்க வேண்டியது என்று நீண்ட வாசகங்கள் பக்தி சிரத்தையுடன் எழுதப்படுவதை இன்றும் நாம் காணலாம்.

ஆனால் தற்கால நிலைமையில் நிலத்துக்கு ஸ்திரத்தன்மை எந்த அளவில் இருக்கிறது? இதுதான் உண்மையான சொத்து என்று சொல்ல முடியுமா?

ஆவடித் தேரின் சக்கரங்கள் தயை தாக்ஷிண்யமின்றி உருண்டோடுகின்றன. தத்துவங்கள் பொதிந்த புனிதமான பொருளாதலால் இந்த ரதத்துக்கு "பிரேக்" "விசைத் திருப்பம்" போன்ற சில்லறை விஷயங்கள் பற்றி அக்கறையே இல்லை. ஆவடி நாகபுரி போன்ற ஆரவாரக் கோலாகலங்களில் எத்தனையோ உயிர்களைப் பலி வாங்கியாகிவிட்டது. எத்தனையோ பேர்கள் இடிபட்டு நசுங்கி வெளிவந்தனர். இப்போது இந்தத் தேர் நாகபுரியிலிருந்து சரிவான பாதையில் ஓடப் போகிறது. மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடப் போகிறது. இதன் வேகத்தில் இன்னும் பலபேர்கள் அகப்பட்டு நசுங்கிப் போகலாம் என்று பயப்பட வேண்டியிருக்கிறது. பூசாரிகள் ஜபம் செய்யும் மந்திரங்களையும், உச்சாடனங்களையும் பார்த்தால் ஒப்பந்தங்களுக்குள்ள மதிப்பு, சொத்துடைமை, எல்லாம் அடுத்தபடியாக அழிந்து போகும் என்றே தோன்றுகிறது. இப்போதே நிலம் ஸ்திரமில்லாத சொத்தாக ஆகிவிட்டது. உடைமைகளுக்குள் நிச்சயமில்லாததாகிவிட்டது. உரிமைப் பத்திரங்கள் வெற்றுக் காகிதங்களாக மாறிக்கொண்டு வருகின்றன. அரசியல் அலைக் காற்று எப்போது அடித்துக்கொண்டு போய்விடுமோ என்ற நிலையில் படபடத்துக் கொண்டிருக்கின்றது.

## உழவனுக்குப் பணம் எங்கே?

இந்திய மக்களில் 80 சதவிகிதத்தினர் விவசாயத்தை நம்பிப் பிழைப்பவர்களென்பதும், நமது தேசிய வருமானத்தில் பெரும் பகுதி விவசாய விளைபொருள்களாலானது என்பதும் யாவரும் அறிந்ததே. நமது நாட்டுத் தொழில்களில் மிகவும் பெரிய தொழில் விவசாயம். பெருவாரியான மக்களுக்கு வேலையளிப்பதும் விவசாயம்தான். ஆனால் இவ்வளவு முக்கியமான ஜீவாதாரமான ஒரு தொழில் அதற்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவம் கொடுத்து நடத்தப்படுகின்றதா? அல்லது அரசியல் சதுரங்கத்தில் வெறியர்களது சூதாட்டம்போன்று கருதப்படுகின்றதா?

உதாரணத்துக்காக ஒரு அம்சத்தை மட்டும் கவனிக்கலாம். எந்தத் தொழிலுக்கும் நிதி வசதிகள் இன்றியமையாதது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கங்கையும் காவேரியும் பாயும் பிரதேசத்தை எப்படி வளமிக்க நிலங்களாக ஆக்குகின்றனவோ; அப்படியே தான் நிதிநிலைமை சீராக ஊடுருவிச் செல்லும் எந்தத் தொழிலும் வேகமாக முன்னேற்றமடையும். பாய்ச்சல் நின்று போனால் பயிர்கள் கருகிப் போகும். கருகிப் போகும் அந்தப் பிரதேசமே பஞ்சத்தால் அடிபட்ட நிலம்போல் காட்சியளிக்கும்.

ஜீவாதாரமான விவசாயத் தொழிலுக்கு நிதிவசதி தடைப்படாது பெருகும் வகையில், அரசாங்கத்தின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் இருக்கின்றனவா?

நிலத்தில் முதலீடு செய்வது மிகவும் சிறந்தது. மற்றெந்த வகை முதலீட்டைக் காட்டிலும் நிலத்தில் பணம் போட்டு வைப்பது மேலானதென்று தொன்றுதொட்டுப் பழக்கம் இருந்து வருகிறது. சென்னையில் வசிக்கும் வக்கீலானாலும், பம்பாயிலுள்ள பாங்கரானாலும், கல்கத்தாவில் தொழில் நடத்தும் வியாபாரியானாலும், டில்லியில் டாக்டரானாலும், வாரிசு உரிமை மூலமாவது தங்கள் சொந்த சேமிப்பைக் கொண்டாவது நிலம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் செய்த முதலீட்டுக்காகவோ அல்லது சம்பாத்தியத்தி

விருந்து சேமித்து வைத்து ஒரு புதுக்கிணறு தோண்டுவதற்கும், உழவு மாடு வாங்கவும், பம்புசெட் அமைக்கவும் செலவு செய்த பணத்துக்காகவோ வருமானமாக நிலத்திலிருந்து கிடைக்கும் மகசூலில் ஒரு பாகத்தை உழவர்கள் அவர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். இப்போது அவர்கள் எல்லோரும் மறைவிலிருக்கும் நிலச்சுவான்தார்களாகி விட்டார்கள். அரசியல் நோக்கிலும் தேர்தல் பிரசாரங்களிலும் ''மறைவில் இருக்கும் நிலச்சுவான்தார்கள்'' என்பது ஒரு இழிசொல்லாகக் கருதப்படுகிறது. குற்றமிழைத்தவர், சமூகத் துரோகி முதலியவர்களைக் குறிப்பது போலவே இந்த மறைவிலிருக்கும் நிலச்சுவான்தார்களும் கருதப்படுகின்றனர். பீஹாரிலுள்ள எஃகுத் தொழிற்சாலையில் ஒருவனுக்குப் பங்கு இருக்கலாம். உத்தரப் பிரதேசத்திலுள்ள சர்க்கரை ஆலையில் அல்லது கல்கத்தாவிலுள்ள ஒரு ரசாயனத் தொழிலில் அல்லது அகமதாபாத்திலுள்ள ஜவுளி ஆலையில் பங்குகள் வைத்திருக்கலாம். அதிலிருந்து அவனுக்கு வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கலாம். அவனை யாரும் மறைந்து நிற்கும் ஆலைச் சொந்தக்காரனென்றோ, மறைந்து நிற்கும் சர்க்கரை அதிபர் என்றோ, ஜவுளி முதலாளி என்றோ பழிப்பதில்லை. ஒருவனுக்கு ஆக்ராவில் ஒரு வீடும் அகமதாபாத்தில் ஒரு பங்களாவும் இருக்கலாம்; அவைகளிலிருந்து குடியிருப்பவர்கள் கொடுக்கும் வாடகை கிடைத்துக் கொண்டிருக்கலாம். அவனை மறைந்து வாழும் வீட்டுக்காரன் என்று இழிவாகக் கருதுவதில்லை. நிலம் வைத்திருப்பவனுக்கு மட்டுமே இந்த இழிபெயர் சூட்டப்பட்டு, அதனால் அவனுக்குக் கிடைத்துக் கொண்டிருந்த வருமானமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, முதலுக்கே மோசம் வரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் நிலத்தை அபிவிருத்தி செய்யப் பணம் செலவழிக்க அவனுக்கு என்ன உற்சாகம் இருக்கும்? மாறாக, நிலத்தை விற்றுவிடவே தோன்றுகிறது. சமீப காலத்தில் நிலங்களின் மதிப்பு பல இடங்களில் குறைந்து விட்டது. உழவனோ, இதுவரையில் பண்ணை வேலைகளுக்கும் தன் குடும்பச் செலவுக்கும் சொந்தக்காரனிடமிருந்து கிடைத்துக் கொண்டிருந்த பணம் இல்லாமல் தவிக்கிறான். விளைநிலம் கேட்பாரற்றுக் கிடக்கிறது. உற்பத்தி குறைகிறது. உணவுப் பற்றாக்குறை தாண்டவமாடுகிறது. விவசாயம் ஒரு தொழில். இதை ஒரு தொழில் போலவே நடத்தினால் செழிப்பாக விருத்தியடையும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள அயல் நாடுகளுக்கு ஆராய்ச்சிக் கோஷ்டிகள் அனுப்பவேண்டாம். ஆலோசனைக் குழுக்களை அயல்நாடுகளிலிருந்து தருவிக்கவும் வேண்டாம். நம் நாட்டிலேயே தேயிலை, காப்பித் தோட்டங்களைப் பார்த்தால் நாம் என்ன சாதிக்க முடியுமென்று தெரிய வரும். இவையெல்லாம் தோட்டத் தொழில் என்று அழைக்கப்பட்டாலும், அவைகளும் விளைநிலங்கள்தாம். அவர்கள் செய்வதும் விவசாயம்தான். தோட்டத் தொழில் என்ற பெயர் அரசியல் கொந்தளிப்பிலிருந்து அவர்களை இதுவரையில் சிறிது பாதுகாத்து வந்திருக்கிறது. அவ்வளவுதான்.

## தோட்டத் தொழிலைப் பார்

கடந்த பத்து ஆண்டு காலத்தில் காப்பிக்கொட்டை உற்பத்தி 110 சதமும் தேயிலை உற்பத்தி 77 சதமும் அதிகரித்திருக்கின்றன. இங்கு வேலை செய்வோருக்குக் குடியிருப்பு, குடி தண்ணீர், வைத்தியம், சாப்பாட்டு வசதி, சில இடங்களில் கல்வி வசதி முதலிய சௌகரியங்கள் செய்து தரப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, நாட்டுக்கு அவசியமான அந்நியச் செலாவணியையும்கூடக் கணிசமாகச் சம்பாதித்துத் தருகிறது. இப்படி வந்த செலாவணிதான் உணவு தானிய இறக்குமதி வகையில் கரியாக அடிக்கப்படுகிறது.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பாடம் ஒன்றுமில்லையா? தீண்டாமையை ஒழிப்பதற்குக் காந்திஜி அரும்பாடு பட்டார். கற்காமை என்னும் பிடிவாதத்தை அகற்ற மற்றொரு மகாத்மா தோன்றும் வரையில் நாம் காத்திருக்க வேண்டுமா?

இங்குமங்கும் இரக்கமற்ற நிலச்சுவான்தார்கள் சிலர் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். விரும்பத் தகாத அமைச்சர்கள் நாணயமற்ற பாங்கர்கள் சமூகத்தினரிடையே காணப்படுவது இல்லையா?

கிராமங்களில் வறுமையும் அமைதியின்மையும், அதிருப்தியும், கம்யூனிஸ்டுகள் பிரசாரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் ஏற்ற சூழ்நிலை என்பது உண்மைதான். ஆனால் பொறுப்பு சிறிதுமில்லாத சுயநலக்காரர்களிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்து விட்டபின்னரும் ஜனநாயகம் தழைத்தோங்கியது என்று யாரும் கண்டதில்லை; கேட்டதுமில்லை. ஊக்கத்துக்கும் உற்சாகத்துக்கும் பதிலாகத் தாக்கீதுகள், உத்தரவுகள் மூலமாகவே சமூகத்தில் சுபிட்சத்தை உண்டாக்கலாம் என்று செயல்படும் எந்த நாட்டிலும் சுதந்திரம் நிலைத்து நிற்காது. பொருளாதாரத் துறையில் தாட்சண்யமின்றிச் செயல்புரியும் ''தேவை-விநியோகம்'' நியதியையும் ''செலவுக்கேற்ற உற்பத்தி'' நியதியையும் எந்தச் சட்டசபை தீர்மானத்தாலும் அரசாங்க உத்தரவாலும் மாற்றியமைக்க முடியாது. தனக்கு ஆபத்து ஏற்படும் காலத்தில் நெருப்புக் கோழி மண்ணில் தலையைப் புதைத்துக் கொள்ளுமாம். அதையே நிரந்தர நடவடிக்கையாக மேற்கொண்டு அது ஜீவிக்கிறது என்று யாரும் கேட்டதில்லை; அவசர கால முறைகள் அமைதிக் காலத்துக்குச் சிறிதும் ஏற்றதல்ல.

கண்மூடித்தனமாக நோட்டுகள் அச்சடித்து நிதிப்பற்றாக்குறையைப் பூர்த்தி செய்து நிர்வாகம் நடத்துவதன் அபாயகரமான விளைவுகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. பண வீக்கத்தின் நெருக்கல்களும் விலைவாசிகளின் உயர்வும் நம் முன்னே நிற்கின்றன.

நம்மிடையே கூர்ந்து கவனித்தால் ரூபாய் ஒன்றுக்குளும் மூன்று வகை நாணயங்கள் உலவுவது தெரிய வரும். தனித் தனியாக அவற்றைப் பிரித்துக் காட்ட உண்மையான பணம், கறுப்புப் பணம், செயற்கைப் பணம் என்று பெயர் சூட்டலாம். உண்மைப் பணம்

தான் வெகு நாட்களாக நமக்குத் தெரிந்தது–ரூபாய் நாணயமும் அலுக்கனும் (இப்போது நயே பைசேவும்). கறுப்புப் பணம் என்பது தாங்க முடியாத வரி விதிப்பினுலும், பதுக்கலினுலும் உருவாகியபணம். கணக்கில் வராதது, கைக்கு அகப்படாதது. வெட்ட வெளிச்சத்தில் நடமாடாதது. இருட்டில்தான் உலவும். வரிகளின் கொடுமை அதிகரித்தால் இதன் உருவமும் வளரும். இருட்டு அதிகரித்தால் இதன் வளர்ச்சி அதிகம். மூன்ருவது வரம்புக்கு மீறி அடிக்கப்பட்ட நாசிக் நோட்டு–பற்ருக்குறை நிர்வாகம் (Deficit financing) என்று இதற்குப் பகட்டான பட்டப் பெயர். சர்க்காரின் சாமர்த்தியமும் நிர்வாகத் திறமையும் நாட்டை அதள பாதாளத்தில் அழுத்தாமல் இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை வேண்டுமானுல் செய்யலாம். தப்பித்தால் பிழைப்போம். தவறினுல் நமக்குக் கிடைப்பது நான்காவது ரகப் பணம். "மதிப்பிழந்த ரூபாய்." இதைப் பற்றி மற்ற நாடுகளுக்கு ரொம்ப அனுபவமுண்டு.

## சுதந்திர உணர்ச்சி தேவை

சுதந்திரத்தை விரும்புபவர்களெல்லாம் சர்க்கார் கொள்கைகளைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதை விட்டு, பயத்தையும் துதி பாடுவதையும் உதறித் தள்ளி, எந்த அம்சங்கள் சுதந்திர உணர்ச்சிகளை நசுக்குகின்றனவோ, காந்திஜி கூறிய மாதிரி எந்தெந்த வகையில் அரசாட்சியின் பலாத்காரம் பிரவேசிக்கிறதோ, அவற்றையெல்லாம் கண்டித்துத் தடுத்து நிறுத்த முற்பட வேண்டும்.

உண்மை என்னவென்ருல், காந்திஜி மறைந்த பிறகு தனக்கு அரசியலில் எதிரியாக உள்ள ஒரே கட்சியான கம்யூனிஸ்டு கட்சியை நசுக்குவதற்காக, அவர்கள் பதவிக்கு வந்தால் என்ன செய்வார்களோ, அதை முன்னுடியே தாங்கள் செய்து விடுவது என்ற வருந்தத்தக்க நடவடிக்கைகளைக் காங்கிரஸ் கட்சி மேற்கொண்டிருக்கிறது. இதில் வித்தியாசம் என்னவென்ருல் காங்கிரஸ் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மயக்கம் கொடுத்து 'ஆபரேஷன்' செய்வது போல் வலி தெரியாமல் செய்யப்படுகின்றன. கம்யூனிஸ்டுகள் செய்வதானுல் கெடுபிடி அதிகமாக இருக்கும்.

இன்ஷ்யூரன்ஸைத் தேசியமயமாக்கியது, பாங்குகளைத் தேசியமாக்க விரும்புவது, கூட்டுப் பண்ணை விவசாயம், அரசாங்க வர்த்தகம் எல்லாமே தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆதரவில்லாமல் செய்வதற்காக ஏற்பட்டவைதான் என்பதை எல்லாரும் இப்போது உணர்ந்துகொண்டு விட்டனர்.

சமீப காலத்தில் கூட்டுப் பண்ணைகளிலும் "சுயேச்சை உண்டு" என்று வலியுறுத்துவதும் அரசாங்க வர்த்தகம் அவசியமானுல் மாற்றிக் கொள்ளப்படும் என்று சொல்லப்படுவதும் கூடச் சுதந்திரக் கட்சியின் பலத்தைக் குன்றச் செய்வதற்காகத்தான் என்ருலும் நடைமுறையில் இது பலித்தால் வரவேற்கத் தக்கதே. இப்போதாவது நமது ஆட்சியாளர்களுக்கு அறிவு பிறந்ததே என்று நாடு நன்றி செலுத்தும். அதற்காக, 'சுதந்திரக் கட்சியின் கூட்டாளி' என்று பிரதமர் நேருவே பதவியளித்துள்ள ஆண்டவனுக்கு நாடு நன்றி செலுத்தும்.

# ஆகாச வெடி

"கோவில் விக்கிரக மூட்டையைத் தலையில் சுமந்து சென்ற திருடன் போலீஸாரிடம் சிக்கினுன்!" —திருநெல்வேலிச் செய்தி

தலைக்கு மேல் சுவாமி இருக்கிருர் என்பதை அவன் இப்போதாவது உணர்ந்து கொண்டாஞு?

★

"கழுதைகள்மீது வரி விதிப்பதை எதிர்த்து, டெல்லி நகரசபை முன் ஆர்ப்பாட்டம்."
—டெல்லிச் செய்தி

"வரிப்பளுவை மனிதன் மீது சுமத்துவது போல் கழுதை மீது சுமத்த நினைக்க வேண்டாம்!" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியிருக்க வேண்டும்.

★

"என்னை வரவேற்க வேலைகளை விட்டு விட்டு எல்லா மந்திரிகளும் வரவேண்டாம். ஒருவர் வந்தாலே போதும்."
— ராஜ்யங்களுக்கு நேருவின் கடிதம்

"வரவேற்புகளில் ஈடுபடுவதைவிட எங்களுக்கு வேறு வேலை என்ன இருக்கிறது?" என்று மந்திரிகள் வியப்படைந்திருக்கலாம்.

"சென்ற மாதம் இந்தியாவிலிருந்து அதிகமாக மீனை வாங்கிய நாடு ரஷ்யவாகும்."
— ரஷ்யச் செய்தி

ரஷ்யா அனுப்பிய இந்த ரசமான செய்திக்குப் பாராட்டுதல்கள்.

★

"மனைவிக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் பார்க்கக் கணவனுக்கு உரிமை உண்டு!"
— ரோமாபுரி கோர்ட்டு தீர்ப்பு

இந்த உரிமையைப் பெற்றபின் விட்டிலிருக்க உரிமை உண்டா என்பதும் கணவனுக்குத் தெரிந்து விடும்.

★


"ஸ்தல ஸ்தாபன மந்திரியிடமிருந்து மீன் இலாகாவை முதன் மந்திரி எடுத்துக் கொண்டார்." —சென்னைச் செய்தி

இதை மீன்களுக்குத் தெரிவித்தார்களா?

★

"ஒரு கடையில் யாரோ விளப்பிய புரளியைக் கேட்டு எல்லாக் கடைகளையும் மூடி விட்டார்கள்." —பெல்லாரி செய்தி

புரளியைக் கிளப்பிய கடையில் அதை விற்கிருர்களோ?



பிரசித்திபெற்ற திருவாரூர் - விஜயபுரம் K. T. R. வாசனுதி திரவியசாலையின் உரிமையாளர் உயர்திரு K.T.R. கோபாலகிருஷ்ண ராஜு அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி ஜெயராமனுக்கும் "பொருள்" பத்திரிகை ஆசிரியர் மன்னார்குடி உயர்திரு R. பத்மநாப ராஜு அவர்களின் புதல்வி சௌ. செங்கம்மாளுக்கும் 30 - 8 - 59 அன்று விஜயபுரம் மணமகன் இல்லத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. தஞ்சை மாவட்டம் கண்டிராத அளவில் கோலாகலத்துடன் நடைபெற்ற இந்த வைபவத்திற்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வியாபாரப் பெருமக்களும், பிரமுகர்களும் வந்திருந்து நல்லாசி நல்கினார்கள். வாழ்த்துக்களும் பரிசுகளும் வந்து குவிந்தவண்ணமிருந்தன. வாழ்க மணமக்கள்!

[ஸ்வராஜ்யா ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் திரு காஸா சுப்பாராவை அனைவரும் அறிவார்கள். கடந்த முப்பத்தைந்தாண்டுகளாகப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர். பழுத்த தேசபக்தர். காங்கிரஸ்வாதி. எனினும் பல உண்மை தேச பக்தர்கள் தற்போதுள்ள காங்கிரஸின் போக்கைக் கண்டு துயருறுவதைப் போல் திரு காஸாவும் வருந்தவே செய்கிறார். இக் கட்டுரை அதற்குச் சான்று. -ஆசிரியர்]

# மக்களை ஏன் ஏமாற்றவேண்டும்?

காஸா சுப்பாராவ்

காங்கிரஸ் தலைமைப் பீடம் நில உடைமைக்கு உச்சவரம்பு விதிக்க வேண்டுமென்று தீர்மானித்தபோது இரண்டு நோக்கங்களைத் தான் கருத்தில் கொண்டிருந்தது. நிலமில்லாதவர்களுக்கு நிலப் பசியைத் தீர்க்க நிலம் வாக்களிப்பது ஒன்று; சொத்துடைமையில் சமூகத்தினரிடையேயுள்ள தாரதம்யத்தைக் குறைத்து சோஷலிஸ கருத்துக்கேற்ப சமனப் படுத்துவது இரண்டு.

இந்த இரண்டு கோஷங்களும் மேடைப் பிரசங்கத்தில் கற்றுவதற்கு மிக மிகப் பொருத்தமானவை. செவிக்கு இனிமை; மனத்துக்கு ஆறுதல்; தலைவர்களுக்குச் செல்வாக்கு; மக்களுக்கு ஆவேசம்—இவையெல்லாம் கிடைக்கும். ஆனால் செயல் முறையில் இவைகளினும் விளையும் பலன் பூஜ்யம்.

உச்சவரம்புக்கு அதிகமாகக் கிடைக்கும் உபரி நிலங்களை யெல்லாம் ஒன்றாகக் கூட்டினாலும், நிலமில்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்க அவை போதாது. நிலமில்லாதவர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். அவர்களில் மிகச் சிலருக்கு மட்டுமே சிறிது நிலம் கிடைக்கக் கூடும். பெரும்பான்மையோருக்கு ஒன்றுமே கிடைக்காது. நடைமுறையில் நிறைவேற்றிவைக்க முடியாத இந்த அம்சத்தை அடிக்கடி வற்புறுத்துவதால் ஒரே ஒரு பலன் தான் கிடைக்கிறது — செய்ய முடியாத, அல்லது பெரும்பாலும் செய்ய முடியாத ஒன்றைச் செய்துவிடுவதாக மக்களுக்கு ஆசை வார்த்தைகள் காட்டி மோசம் செய்வதுதான்.

சொத்துடைமையில் சமத்துவம் என்ற கொள்கையே கண்கட்டு வித்தை. விளை நிலம் ஒன்றுதான் சொத்து என்பதல்ல. சொத்தில்லாதவர்களிடையே இருக்கும் சொத்துப் பசி நில உடைமையினும் மட்டும் தீருவதன்று.

நிலத்தைவிட வீடுகளுக்கும் பணத்துக்கும் மக்கள் பறக்கின்றனர். வீட்டுப் பசியும், பணப் பசியும் நிலப் பசியை விட அதிகமாக இருக்கின்றன. இவற்றை அப்படியே விட்டு விட்டு, நிலத்துக்கு மட்டும் வரம்பு கட்டினால் நிலங்களுக்குள்ள மதிப்பு குறைந்து, இதர சொத்துக்களைக் கவருவதில் மக்கள் மனம் செல்லும்—அதாவது விளை நிலங்களின் மதிப்பைக் குறைத்து விவசாய வர்க்கத்தினர்களின் அந்தஸ்தையும் சுதந்திரத்தையும் சிதைக்கத்தான் இது உதவும். இந்த நிலைமை இப்போதே ஏற்பட்டு விட்டது. விவசாயம் செய்வதற்காக ஒருவரும் நிலத்தை இப்போதெல்லாம் விரும்புவதில்லை. இருக்கும் நிலத்தை விற்கவே ஆசைப்படுகின்றனர். நிலத்தையே சொத்தாக மதித்து வந்த விவசாயிகளுக்கு இது ஒரு பெருத்த அடி. விவசாயப் பண்டங்கள் உற்பத்திக்கும் பலமான தடை.

வர்த்தகர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், அரசியல்வாதிகள் மற்றும் இவர்களைப் போன்றவர்கள் சம்பாதிக்கும் அளவுக்கு எவ்வித வரம்பும் இல்லாமல் இருக்கும்போது உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்து சமூகத்துக்கு மகத்தான பணியைச் செய்துகொண்டு வரும் ஒரு வர்க்கத்தாரை மட்டும் வருஷத்துக்கு 3600 ரூபாய் வருமானத்துக்கு மேல் சம்பாதிக்கக் கூடாது என்று சட்டம் மூலம் தடை விதிப்பதைப்போல் அர்த்தமற்ற செயல் வேறு இருக்க முடியாது. இது சமத்துவமல்ல; ஏற்றத் தாழ்வை அதிகரிக்கும் விஷமம். காங்கிரஸ் கட்சியின் மாபெருந்தலைவர் முதன் முதலாகத் தம்முடைய வருமானத்துக்கு ரூ.3600 என்று ஒரு வரம்பு கட்டிக்கொள்ளட்டும். அப்போதுதான் மற்ற எந்த இந்தியப் பிரஜையின் வருமானத்துக்கும் இதே மாதிரி வரம்பு கட்டும்படி சொல்ல அவர் அருகதையுள்ளவராவார்.

காங்கிரஸின் செல்வக் கொள்கையில் மற்றொரு அம்சம் அரசாங்க வர்த்தகம். நமது நாட்டின் பண்பில், நமது சம்பிரதாயத்தில் அரசாங்கத்தின் ஆட்சி புரியும் தொழிலுக்கும் வர்த்தகம் செய்யும் தொழிலுக்கும் முரண்பாடு எப்போதும் இருந்துவந்திருக்கிறது. ஆட்சிபுரிவதற்கு வேண்டிய குணங்களும் சாமர்த்தியங்களும் வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு வேண்டிய குணங்களும் சாமர்த்தியங்களும் வெவ்வேறானவை; மாறு



திரு காஸா சுப்பாராவ்

பட்டவை. லாபம் எதிர்பார்ப்பதும் பொருள் சேர்ப்பதும் வியாபாரிகளின் கடமை. மக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை. இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்ப்பது ஒட்டாத இரண்டு பொருள்களை ஒட்டவைப்பதுபோல. இதனால் ஜன சமூகத்தைத் தங்கு தடையின்றிச் சுரண்ட அரசாங்கமே கருவியாக அமைந்துள்ளது. செங்கோல் மறைந்து கொடுங்கோல் உருவாகும். இது முதல் விளைவு. தனி மனிதனின் சுதந்திரமும், அவன் குடும்ப ரகசியங்களும், குடும்ப வரவு செலவுகளும் படிப்படியாகச் சிதைவுறும். இது இறுதி விளைவு.

ஒரு வியாபாரிக்கு அரசாங்கத்துக்குள்ள எல்லா அதிகாரங்களும் வரம்பின்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறதாக வைத்துக் கொள்வோம். அத்தகைய வியாபாரி சமூகத்தினிடையே ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தால், என்ன ஆகும் என்று சிறிது சிந்தித்துப்பாருங்கள். அவனுடைய கொடுமைகளுக்கு இலக்காகாமல் எந்த மனிதனாவது தப்பிக்க முடியுமா ? இதே நிலைமைக்கு இப்போது வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் நமது அரசாங்கம் வந்துவிடும். மக்களின் நிலைமையும் மேலே சொன்னபடிதான் மாறிக்கொண்டு வருகிறது. சில தொழில்கள் இணைக்கக் கூடாதவை. வெவ்வேறாகவே இருக்க வேண்டும். நீதிபதியும், வக்கீலும், குற்றம் சாட்டுபவனும் ஒரே மனிதனாக இருந்தால் நீதி, நியாயம் கிடைக்குமா? உண்மையாகவே நீதி வழங்கப்பட வேண்டுமானால் இம் மூன்று செயல்களையும் தனித்தனி நபர்கள் மேற்கொள்ள வேண்டும். அரசாங்க வர்த்தகமும் ஆட்சித் தொழிலும் அவ்வாறே. அரசாங்க வர்த்தகத்தின் மூலம் நியாயத்துக்குப் பதில் பேராசை ஆட்சி செலுத்த ஆரம்பிக்கிறது. சட்டமென்ற போர்வைக்குள் இந்தப் பேராசை மறைந்து செயல்படுவதால், மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் இது நல்ல வழிகாட்டியல்ல. அரசாங்கத்துக்கும் நல்லதல்ல. அதனுடையநேர்மைக்குப்பங்கம்ஏற்படுத்தும்.

அடுத்தபடி கூட்டுப் பண்ணைகள். நாகபுரி காங்கிரசுக்குப் பின் இது காங்கிரஸின் கொள்கையில் முக்கிய இடம் பெற்றுவிட்டது. கருத்தளவில் இது சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. பல பேர்களுக்குப் பொதுவாக உள்ள வேலையைஅவர்கள் தனித்தனியே செய்யாமல், சேர்ந்து செய்தால் நல்லது என்பது சரிதான். ஆனால் சில இனங்களில் தனிப்பட்டே காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. அப்போதுதான் காரியங்களும் செவ்வனே நடைபெறும்; பூரண பலனும் கிடைக்கும். கூட்டுறவுத் தத்துவம் அங்கே பயன்படாது. உதாரணமாக குடும்ப வாழ்க்கை, குடும்ப நிர்வாகம், கூட்டுறவு முறையை இங்கே புகுத்தினால் கலவரம்தான் நிகழும். விவசாயமும் இதுபோலவே. தனிச் சொந்தக்கார முறைதான் விவசாயத்துக்கு நல்லது; பல சொந்தக்காரர்கள் இருப்பது பல சமையல்காரர்கள் சேர்ந்து ஒரே சமயத்தில் ஒரே உணவைத் தயாரிப்பது போலத்தான்.

இந்த மூன்று முக்கியமான புதுமைகள்தான் காங்கிரஸ் திட்டத்தில் இணைந்திருக்கின்றன. இவை தத்துவ நோக்கில் ஆதாரமற்றவை; சாதாரணப் பகுத்தறிவுக்கு ஒத்துவராதவை. நடைமுறையில் ஆபத்து நிறைந்தவை. இவை விவேகத்தினால் விளைந்த கருத்துக்கள் அல்ல; வக்கர புத்தியினால் உண்டானவை. இவற்றைக் கைவிடாமல் பிடிவாதமாக நிறைவேற்ற முற்பட்டால் நாட்டில் சொல்லொணாத் துயரம் உண்டாகும். முடிவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியையும் அதிகாரத்தையும் துறக்க வேண்டி வரும்.

## உண்மை சோஷலிஸமா ?

சோஷலிஸம் வேண்டும் என்று நாம் ஏன் சொல்லுகிறோம்? பல்வகைப்பட்ட சுரண்டல் முறைகளிலிருந்து தங்களைப் படிப்படியாக விடுவித்துக்கொண்டு எல்லாத் துறைகளிலும் சுதந்திர உற்பத்தியாளர்களாக வாழும் மக்களின் சுதந்திரத்தை இழப்பதற்காக அல்ல. அந்தச் சுதந்திரத்தைப் பெருக்கிக் கொள்ளவே. பிறர் நிர்ப்பந்தமின்றி, அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கவாறு ஒவ்வொருவரும் தன்னுடைய வேலையைச் செய்து கொண்டு தனது சுகத்தையும் சமூக நலனையும் பெருக்கிக் கொண்டு மற்றவர்களுடன் சுதந்திரமாக வாழவே, சோஷலிஸம் வேண்டும் என்கிறோம். உலகத்தில் எந்தப் பாகத்திலும் எந்தக் காலத்திலும் சோஷலிஸம் வேண்டும் என்று வற்புறுத்திய பெரியார்கள் சமூகநலனுக்கு உதவிக்கொண்டிருக்கும் எந்த வர்க்கத்தாரையும், சமூக இல்வாழ்க்கைக்கும் சுதந்திரத்துக்கும் பங்கம் விளைவிக்காமல் செயல் புரிந்து கொண்டிருக்கும் எந்தப் பகுதியினரையும் கட்டுப்பாடுகள் மேற்பார்வை, தணிக்கை முறை, அதிகார நிர்ப்பந்தங்கள்—முதலியவற்றின் மூலம் அலைக்கழிப்பதற்காக விரும்பவில்லை. எந்தப் பகுதியினரிடமிருந்து சமூகத்தின் மற்றப் பகுதிக்கு எவ்வகையிலும் துன்பம் விளையாதோ, மாறாக நன்மையே உண்டோ அந்தப் பகுதியினராகிய விவசாயிகளின் சுதந்திரத்தையும் சொத்துரிமையையும் பறிப்பதற்காக ஏற்பட்டதல்ல சோஷலிசம். நமது திட்டங்களின் விளைவு இதற்கு நேர்மாறானது. நகர்ப்புறங்களில் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்துக்கும் சொத்துக்களுக்கும் வரம்பு கட்டக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லும் நமது ஆட்சியாளர்கள் சீன சம்பிரதாயத்தைப் பின்பற்றிக் கிராம நிலங்களை யெல்லாம் சமூக நிலமாக்கி, நிலமுள்ள விவசாயி, நிலமில்லாத விவசாயி எல்லோரையும் கூலியாட்களாக மாற்றும் அடிமை முறையைத்தான் உண்டாக்க முற்பட்டிருக்கின்றனர். இதற்குக் கூட்டுப் பண்ணைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் கருவிகளாக உதவுவார்கள். இதை உண்மை சோஷலிஸம் என்று எப்படிக் கூறலாம்?

பேராசிரியர் என். ஜி. ரங்கா

[இவ்வாராய்ச்சி அரங்கத்தில் விவாதிக்கப்பட்ட கூட்டுப்பண்ணை, நிலவுடைமைக்கு உச்சவரம்பு, அரசாங்க வர்த்தகம் என்றும் விஷயங்களைப் பற்றித் தலைவர் ராஜாஜி பல மேடைகளில் சென்ற பல மாதங்களாகப் பேசி வந்தார். அவருடைய கருத்துக்களில் முக்கியமான சிலவற்றைத் தொகுத்துக் கீழே தருகிறோம். — ஆசிரியர்]

# "வோட்டுப் பந்தயம்"

ராஜாஜி

நிலத்துக்கு உச்சவரம்பு; நில உடைமைக்கு வரம்பு; சொத்த விவசாயத்துக்கு வரம்பு; இன்னும் இவை போன்ற இதர கோஷங்கள் இப்போதெல்லாம் காதைப் பிளக்கின்றன. இவையனைத்தும் பொறாமையினாலும் அசூயையினாலும் உண்டானவை. உண்மை சமதர்மத்தை ஏற்படுத்த உதவாது. உணவு உற்பத்தியை அதிகரிக்க இவை நிச்சயமாக உபயோகப்படாது. வெறுப்பு, துவேஷம், பொறாமை, பேராசை - இவைபோன்ற துர்க்குணங்களை வளர்க்கவே இவை உதவுகின்றன. இவற்றால் அரசியல் கட்சிக்கு வோட்டுகளை உற்பத்தி செய்யலாம். இந்த வோட்டு சேகரிக்கும் பந்தயத்தில் போட்டியிடுபவர்கள் ஆளும் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சியும், இதர சோஷலிஸ்டுக் கட்சிகளும். குதிரைப் பந்தயத்தில் குதிரைகளெல்லாம் அதற்கென்று ஒதுக்கப்பட்ட பாதையில் மட்டும் ஓடும். ஆனால் இந்த வோட்டுப் பந்தயத்தில் இந்தக் கட்சிக் குதிரைகள் நாட்டின் விலைமதிப்பில்லாத விளை நிலங்கள் மீதெல்லாம் கண்டபடியல்லவா ஓடுகின்றன! இக்குதிரைகளின் குளம்புகளில் மிதிபட்டு, தலைமுறை தலைமுறையாகக் கண்ணியமான வாழ்க்கை முறை என்று கருதப்பட்ட விவசாயத் தொழிலில் ஊக்கமும் உற்சாகமும் மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன. தொழில் முன்னேற்றம் வேகமாக ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், நாட்டில் விவசாயம் இன்னமும் முதன்மையான தொழிலாக இருக்கிறது. இதை மறுக்க முடியாது. இந்தத் துறையில் சீர்திருத்தம் செய்ய முற்படும் போது அறிவும் ஆற்றலும் மிகவும் அவசியம். அதற்குப் பதில் அசூயையும் பொறாமையும் செயல் புரிந்தால், ஜனநாயகமுறை நிலவும் நாட்டில் ஆபத்துதான் ஏற்படும். வயதுவந்தோர்களின் மெஜாரிட்டி வோட்டுகள் மூலம் பிரதிநிதிகள் ஆட்சி புரிவது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நாணயத்துக்கும் நடத்தைக்கும் மேலும் நன்மையாகவும் ஆகலாம்; தீமையாகவும் ஆகலாம். தீமையாக முடியக் கூடாதென்பதனாலேயே எச்சரிக்கை விடுக்க வேண்டியிருக்கிறது.

பாமர மக்களிடையே பொறாமையை வளர்ப்பது வோட்டுகள் சேகரிப்பது- இவ்விரண்டும் நமது அரசாங்கத்தின் உண்மை நோக்கமில்லையென்று தள்ளிவிட்டால் உடைமைக்கு வரம்பு கட்ட வேண்டுமென்று சட்டமியற்றுவதின் கருத்து என்ன? விவசாயத்தைத் தொழிலாக மேற்கொள்ள விரும்பும் இதர மக்களுக்கும் இந்தத் துறையில் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பது சர்க்காரின் லட்சியமாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால், இந்த லட்சியத்தை நிறைவேற்ற நிலத்துக்கு வரம்பு கட்டினால் எப்படிக் கைகூடும்? உச்சவரம்புக்கு அதிகமாக உள்ள நிலத்தை என்ன செய்யப் போகிறார்கள்? இதற்கென்று ஒரு தனி அரசாங்க இலாகா நியமிக்கப்பட்டு அதிகாரிகள் மூலம் நிர்வாகம் நடத்தப் போகிறார்களா? அல்லது குத்தகைக்கு விட்டு நிலத்தை அதிக குத்தகை கேட்பவனுக்கு ஏலம் விடப் போகிறார்களா? அப்படியென்றால் நம்மை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். லஞ்சமும் ஊழலும் நாடு முழுவதும் பலப்பல புதிய உருக்கொண்டு தலைவிரித்தாட ஆரம்பித்து, லட்சியம் நிறைவேறாமல் போய் விடாதா? இதைப் பற்றி எவ்வித உருப்படியான திட்டமும் இல்லாமல், தற்போதுள்ள நிலத்துக்கு வரம்பு கட்டுவது, அரசியல் சூழ்ச்சியைத் தவிர வேறு என்ன? விளை நிலங்கள் மதிப்பு குறைந்து மற்ற எல்லாப் பொருள்களின் விலைவாசிகளும் உயருவதுதான் ஏற்படும். மேலும் குத்தகைக்காரர்கள் எல்லோரும் சலுகை பெற்றுத் தனி வர்க்கத்தினர்களாகக் கருதப்படும்போது நிலச் சொந்தக்காரர்கள் மட்டும் ஏன் சர்க்காரின் நடவடிக்கைகளுக்குப் பிரத்தியேகமாக இலக்காக வேண்டும்?



## கூட்டுறவு விவசாயம்

கூட்டுறவு நல்லதுதான். இதில் சந்தேகமில்லை. ஆனால் குடும்ப வாழ்க்கையில் நீங்கள் கூட்டுறவை விரும்புவீர்களா? கூட்டாகச் சேர்ந்து செய்யக் கூடாத பல விஷயங்கள் இருக்கின்றன. குடும்ப வாழ்வில் சில புனிதமான அம்சங்கள் இருக்கின்றன. அவற்றில் கூட்டுறவைப் புகுத்தக் கூடாது. எந்த மனிதனும் தனக்கு இரண்டு தகப்பன்மார்கள் இருப்பதை விரும்பமாட்டான். எந்த மனைவியும் தனக்கு இரண்டு கணவன்மார்கள் இருப்

பதை விரும்பமாட்டாள். எவனுக்கும் இரண்டு மனைவிகளை வைத்துக் கொள்ளுவது விவேகமான செயல் அல்ல. சில காரியங்களில் கூட்டு முறை நல்லதல்ல. சில காரியங்களில் முடியவே முடியாது. நிலத்தைப் பயிர் செய்வது ஒரு சிக்கலான காரியம். நம் முன்னோர்கள் நிலத்தை ஒரு தேவதையாகவே வர்ணித்தார்கள். அது தவறல்ல; மனைவியை நடத்துவது போலவே நிலத்தை நடத்த வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். அப்படிச் சொல்லுவதில் ஆழ்ந்த அர்த்தம் இருக்கிறது. தனது மனைவியையும் நிலத்தையும் கவனியாமல் விட்டால் இருவரும் அவனுக்கு எதிராகவே திரும்பி விடுவார்கள் என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். நிலத்துக்குப் பராமரிப்பு வேண்டும். பார்த்தாவின் கவனிப்பு வேண்டும். இவ்விஷயங்களைப் பற்றி எல்லாராலும் தெரிந்து கொள்ள முடிவதில்லை என்பதற்காகவே இதையெல்லாம் சொல்லுகிறேன்.

## ''சர்வரோக நிவாரணி''

இப்போது கூட்டுறவு ஒரு சர்வரோக நிவாரணியாக நமக்கு அளிக்கப்படுகிறது. நமது சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு முக்கியமாக, கிராம மக்களுக்கு, இது தான் கைகண்ட மருந்து என்று சிபாரிசு செய்யப்படுகிறது. இந்த மருந்து நமக்குப் புதியதல்ல. பல துறைகளில் சென்ற ஐம்பதாண்டுகளாக உபயோகப்படுத்திப் பார்த்த மருந்து. விரும்பத்தக்க பலன் எதையும் இதனால் அளிக்க முடியவில்லை. கூட்டுறவு என்ற திரைக்குள் எத்தனை விதமான பொய், பித்தலாட்டங்கள் உலவுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனாலும் விவசாயிகளுக்கு இந்த மருந்துதான் சிறந்தது என்று சொல்லப்படுகிறது. கூட்டுப் பொறுப்பு சில விஷயங்களுக்கு நன்மையாக இருக்கலாம். ஆனால் பண்ணைத் தொழிலுக்கு இது ஏற்றதல்ல. இது முடியாத காரியம். பரீட்சித்துப் பார்த்தால் செய்த செலவும் பின்னால் வருத்தமும்தான் மிச்சப்படும். முடிந்தவரையில் பறிமுதல் செய்வதே கொள்கையாக உள்ள சர்க்கார் நடவடிக்கைகளால், விளைநிலங்கள் துண்டாடப்படுவதும் நிலங்களைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களுக்கும் விலை உயர்வதும் தான் ஏற்படும்.

## என்ன மடமை!

அரசாங்கம் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டுமாம்! இதைக் காட்டிலும் முட்டாள்தனம் வேறு இருக்க முடியுமா? கடுமையான வார்த்தைதான் சொல்கிறேன். ஏன்? சொல்ல வேண்டியிருக்கிறது. குஜராத்தி மொழியில் இது சம்பந்தமாக ஒரு பழமொழி வழக்கில் இருக்கிறது. உங்களில் பலருக்கு இது தெரியாது. ''அரசாங்கம் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தால், மக்கள் பிச்சை எடுக்க ஆரம்பிப்பார்கள்'' என்பதுதான் அந்தப் பழமொழி. எவ்வளவு உண்மை!

பதுக்கல் செய்யப்படுகிறது என்று வேண்டுமென்றே ஒரு பயத்தை உண்டு பண்ணி அதைப் பிரசாரம் செய்து மக்களிடையே பரப்புகிறார்கள். இந்த நிலைமையைச் சிறிது கவனிப்போம். உணவு தான்ய வியாபாரத்தில் ஈடுபட்டு அதில் கிடைக்கும் லாபத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்று கணக்கற்ற வியாபாரிகள் போட்டியிட்டுக் கொண்டு தயாராக இருக்கின்றனர். மொத்த வியாபாரம் செய்வதற்குத் தயாராக அநேகம் பேர்கள் இருக்கின்றனர். சில்லறை வியாபாரம் செய்ய அதேமாதிரி பலபேர்கள் இருக்கின்றனர். இவர்களுக்குள் கடுமையான போட்டி இருக்கிறது. இந்தப் போட்டிதான் சாமான்ய ஜனங்களுக்குச் சிறந்த பாதுகாப்பு. இதில் அரசாங்கம் புகுந்து போட்டியை ஒழித்துவிட்டு, வியாபாரத்தைத் தானே ஏற்றுக் கொண்டால் சாதாரண மக்களுக்கு என்ன சுதந்திரம் இருக்கும்? வியாபாரம் செய்யும் பொருள் எந்தமாதிரி என்று பாருங்கள். பெரிய பெரிய மூட்டைகள். பதுக்கி வைப்பது சுலபமல்ல. நீண்ட நாட்கள் வைத்திருந்தால் சேதமடைந்து போகும். எலிகளால் நாசம் உண்டாகும். பூச்சி அடிக்கும். இந்த நிலையில், அதிக பணக்காரர்களல்லாத பல வியாபாரிகள் இந்த வர்த்தகத்தில் போட்டி போட்டு, நடத்தி அதிலிருந்து கிடைக்கும் சிறிது லாபத்தை அடைவதனால் சாதாரண மக்கள் ஏமாற்றப்படுவார்களா? உணவுப் பண்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பதுக்கல், பதுக்கல் என்று சொல்லுவதெல்லாம் ஒரு ''பூச்சாண்டி'' மாதிரிதான். எந்த மூலையிலாவது தேவைக்கு அதிகமாகச் சிறிது தானியம் யாராவது வைத்திருந்தால் அதை எடுத்துக் காட்டி மிகைப்படுத்திப் பீதி உண்டாக்கப்படுகிறது. உணவு விஷயத்தில் பதுக்கலுக்காக நாம் பயப்படவே தேவையில்லை. ஆகையால் இவ்வியாபாரத்தில் அரசாங்கம் தலையிட எவ்வித நியாயமும் இல்லை.

இதனால் விளையும் மற்றொரு விபரீதத்தைப் பாருங்கள். வினியோகத் துறையில் பல வியாபாரிகள், மிகச் சிக்கனமாக வியாபாரம்செய்து கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் வேலை இல்லாமற் போய் அவர்கள் திண்டாட நேரிடும். அவர்கள் வாழ்க்கையை ஒரு சர்க்கார் சிப்பந்தியின் - மிகக் கீழ்த்தரத்திலுள்ள கடைநிலை குமாஸ்தாவின் - வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கடைக்காரர்கள் அவர்கள் வேலையை மிகத் திறமையுடன் செய்கிறார்கள்; சிக்கனமாக வாழ்கிறார்கள். வெகு கவனத்துடன் தொழில் நடத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்களை வேலை இழக்கும்படி செய்வதற்கு முன் பல தொழில்களை ஏற்படுத்தி அவர்களுக்கெல்லாம் முதலில் மாற்று வேலை கொடுக்க வேண்டும். கிடைக்கும் லாபத்தைப் பல பேர் நியாயமான முறையில் பங்கு கொள்ளுவதன் மூலம் அவர்களை அறியாமலே சட்டம் மூலம் எந்தமாதிரி சோஷலிஸத்தை ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறதோ அதே சோஷலிஸத்தை அவர்கள் நடைமுறையில் காட்டுகின்றனர். நியாயமாகப் பலர் பங்கு கொள்ளும் லாபத்தை இதர வேலை வாய்ப்புகளில்லாதவரையில் தடுப்பது நியாயமாகாது. குதிரைக்கு முன்னால் வண்டியை நிறுத்துவது கூடாது. அதைத்தான் இந்த அரசாங்க வர்த்தகம் செய்யப் பார்க்கிறது.


விரைவில் வருகிறது!
சிவாஜி கணேசன்
அளிக்கும்
சரவணா பிலிம்ஸ்
பாகப்பிரிவினை
டைரக்ஷன்...A.பீம்சிங்
கதை வசனம்...M.S.சோலைமலை
இசை...விஸ்வநாதன்-ராமமூர்த்தி
கேமரா...G.விட்டல்ராவ்
ELEGANT
தயாரிப்பு...G.N.வேலுமணி
உலக உரிமையாளர் அஜந்தா அருணாசலம் & எம்.கிருபாபதி

பாகவதமோதிய

# பக்தி வயல்

பௌராணிகர்

## 55 சுகர் பரீக்ஷித்துக்குக் கூறினார்

பால சந்நியாசி யது மன்னனுக்குத் தொடர்ந்து உபதேசம் செய்யலானார்:

நாக்கை அடக்க வேண்டும். இல்லையேல் தூண்டிலில் தொங்கும் புழுவுக்கு ஆசைப்பட்டு அகப்பட்டுக் கொள்ளும் மீனைப் போல் ஆவான் முனியும். மற்ற ஆசைகளை அனுபவிக்காமலிருந்து அகற்றி விடலாம். ஆனால் ருசி மட்டும் அருந்தாவிட்டாலும் தன்னை விட்டு அகலாது.

விதேஹ நாட்டில் பிங்களா என்று ஒரு வேசி இருந்தாள். ஆடை அணிந்து நகை பூண்டு யார் வருவார் என்று வாயில் அருகில் காத்திருந்தாள். ஆனால் வந்தவருடன் பேரம் பேசி அனுப்பிவிட்டாள். இவள் கேட்ட பணம் ஒருவரும் கொடுக்க விரும்பவில்லை. வந்தவர் அனைவரும் சென்று விடவே, திடீரென்று அவள் மனத்தில் வைராக்கியம் வந்தது. நல்வழியை நாடி இறைவனைக் கடைப் பிடித்தாள். அரசே! வைராக்கியமின்றி முக்தி இல்லை. பிங்களா என்ற வேசியிடமிருந்து விழுந்தவரையும் கடவுள் கைதூக்குவார் என அறிந்தேன்.

ஒரு காக்கையைக் கண்டேன். அது ஒரு மாமிசத் துண்டைக் கொத்திச் சென்றது. அதற்கு ஆசைப்பட்டு மற்றக் காக்கைகள் அதைக் குத்திக் கொன்றன. தனக்கென்று காப்பாற்றிய பொருள் தன்னையே கொன்று விடும்.

ஒரு கன்னிப் பெண் இருந்தாள். அவளுடைய பெற்றோர் அவளுக்கு வரன் தேட வெளிச்சென்றிருந்தனர். அச்சமயம் ஒருவன் அதே காரியமாக அவள் வீட்டுக்கு வந்தான். வந்தவருக்கு விருந்தளிக்க அந்தப் பெண் தானாகவே நெல்லைக் குத்தச் சென்றாள். அச்சமயம் அவளுடைய கை வளைகள் 'கலீர் கலீர்' என்று ஒலித்தன. வந்தவர் தம்மை நெல்லுக் குத்துவதற்குக்கூட வேலையாள் வைக்க விதியற்ற ஏழைக் குடும்பம் என்று எண்ணுவரே என்று அஞ்சி இரண்டைத் தவிர மற்ற எல்லா வளையல்களையும் உடைத்து விட்டாள். அவ்விரண்டும் ஒலித்தன. அவைகளையும் உடைத்து ஓசையற்று நெல்லைக் குத்தினாள். இந்தப் பெண்ணிடமிருந்து நான் ஒரு பாடம் கற்றுக் கொண்டேன். கூடி வாழ்ந்தால் சண்டையும் சச்சரவும் வளரும். இரண்டு பேர் மிஞ்சினாலும் அவருக்குள் சண்டை வரும். தனித்திருந்தால் கவலையில்லை.

வேடன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு விலங்கின்மீது அம்பை விடுவதற்கு மனத்தை வேறெங்கும் திரியாது அடக்கி ஒரே இடத்தில் நோக்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது பேரிகை முதலிய ஆரவாரத்துடன் அந்நாட்டு அரசன் அங்கு வந்தான். அதைக்கூட அந்த வேடன் அறிந்தானில்லை. அதுபோலவே முனியும் மனத்தை அடக்கி, கடவுளிடம் செலுத்தி வெளியே நடப்பது ஒன்றையுமே கவனியாது வாழ வேண்டும்.

சர்ப்பம் ஊர்ந்து செல்வதைக் கண்டால் அது படம் எடுக்கும் பாம்பா இல்லையா என்று தெரிய வராது. முனியும் தன் பெருமையைத் தனக்குள்ளே வைத்துக் கொள்ள வேண்டும். வெளியே காண்பிக்கக் கூடாது. தனிமையில் வாழ வேண்டும். கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது.

சிலந்தியைப் பாருங்கள். தன்னிடமிருந்து வலையை வீசுகிறது. தன்னுள்ளே திரும்பவும் வலையை வாங்கிக் கொள்ளுகிறது. இறைவன் ஒன்றே உண்மை. மாயையால் படைக்கிறார். காலம் என்ற பேருடன் படைத்ததைத் தன்னுள் வாங்கிக் கொள்கிறார்.

குளவியையும் புழுவையும் பார்த்துப் பார்த்து ஒரு உண்மையை அறிந்து கொண்டேன். ஒரு மனிதன் எதை எப்பொழுதும் எண்ணுகிறானோ, அத்தன்மையை அடைகிறான். குளவிக் கூட்டில் அகப்பட்ட புழு குளவி வந்து கொட்டும் என்று பயந்து பயந்து அதையே நினைந்து, தானும் குளவியாக மாறி விடுகிறது.

என்னுடைய உடலை அறிந்தும் சில பாடங்களைப் படித்தேன். உடல் மாறி வருகிறது. அதற்கு வேண்டியதைக் கொடுக்கவும் அழுக்கின்றித் தூய்மையாய்க் காப்பாற்றவும் எவ்வளவோ பாடுபடுகிறோம். இத்தனை பாடுபட்டு இறுதியில் அது நம்மை விட்டு விடுகிறது. ஆகவே, இந்த உடலோடு எனக்குத்

தொடர்பு இல்லை என்று தெரிந்து கொண்டேன். ஆயினும் உடல் படைத்தோருக்கே முக்தியும் உண்டு. அவ்வழிக்குப் புலன்களைத் திருப்ப வேண்டும்.''

இந்த உபதேசங்களைக் கண்ணன் உத்தவருக்கு விரிவாக எடுத்துரைத்தான். மேலும் பாகவதத்தில் ஆங்காங்கு தனியாகக் கூறியிருக்கும் அனேக நல்விஷயங்களையும் உத்தவருக்கு உபதேசம் செய்தான். உபதேசம் முடிந்ததும் கைகூப்பிக் கண்ணீர் ததும்பப் பேச முடியாத நிலையில் உத்தவர் கண்ணன் முன் நின்றார். பிறகு தண்டனிட்டு மெதுவாகப் பேசலானார்: ''எனது உள்ளத்திலிருந்து இருள் அகன்றது. உனது அருளைப் பெற்றேன். கதிரவனை அணுகியவர்களுக்கு இருளும் குளிரும் ஏது?

''நான்' என்ற எண்ணத்தை இழந்தேன். பற்றை அகற்றி விட்டேன். இனி மேல் நான் செய்ய வேண்டியது என்னவென்று உரைப்பீர்'' என்றார். அதற்குக் கண்ணன், ''உத்தவரே! பத்ரிகாச்ரமம் செல்வீர். அங்கு என்னையே எண்ணிக் கொண்டு அமைதியாய் வாழ்வீர். கங்கையில் நீராடிப் பாபங்களைப் போக்குவீர். துறவறம் பூண்டு காய்கனிகளைப் புசித்துக்கொண்டு, மரவுரி தரித்து, இச்சையென்பதை விலக்கி வாழ்வீர். என்னைத் தவிர வேறொன்றும் இல்லை என்று அறிந்து என்னிடம் மனத்தைச் செலுத்துவீர்'' என்றான்.

உத்தவர் கண்ணனை வலம் வந்தார். பிறகு கண்ணனுடைய கட்டளைக்கு இணங்கிப் பத்ரிகாச்ரமம் சென்றார்.

* * *

கண்ணனும் பலராமனும் அரக்கரைக் கொன்று, புவிவேந்தர்களுக்குள் கலகத்தைப் பெருக்கி, பூமியின் பாரத்தைக் குறைத்தார்கள். அதற்குப் பாண்டவர்களும் ஆண்டவனுக்குக் கருவியாயினர். ஆயினும் வளர்ந்து வரும் யதுகுலம் இருக்கும் வரை பூமியின் பாரம் குறைந்ததாகக் கண்ணன் எண்ணவில்லை. ''யதுக்கள் என் குலத்தோர். அவர்களை மற்றவர் வெல்ல முடியாது. அவர்கள் ஒருவரையொருவர் மாய்த்துக் கொள்வதற்கு வழிதேட வேண்டும்'' என்று கண்ணன் கருதினார். அந்தணர் சாபம் என்ற ஒரு யுக்தியினால் யதுக்களை அழித்தான். பிறகு தானும் வைகுண்டம் சென்றான்.

மூவுலகின் எழில் திரண்டு வந்ததெனத் தோன்றிய தம் உருவால் அன்பர்களின் கண்ணைப் பறித்துச் சென்றார்; இன்மொழியால் உள்ளத்தைக் கவர்ந்து சென்றார்; தாளை நினைக்கும் தொண்டர்கள் செயலற்றுப் போகும்படி செய்தார்; இவ்வாறு தம்மை நினைப்பவருக்கெல்லாம் பின்னர் பிறவி இல்லை என்ற உண்மையை விளக்கிவிட்டு வைகுண்டம் ஏகினார்.

பரீக்ஷித்துக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ''யதுகுலத்தோர் பெரியோரிடமும் அந்தணரிடமும் மரியாதை உள்ளவர் ஆயிற்றே. அவர்கள் ஒற்றுமையுடன் ஒரே மனதாய்க் கண்ணனை அண்டி வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு அந்தணர் சாபமும் சச்சரவும் எவ்வாறு நேர்ந்தன?'' என்று வினவினார்.

அப்பொழுது சுகர் பாகவதத்தின் இறுதி வரலாற்றை எடுத்துரைத்தார். ''சுந்தரவடிவுடன் மாதவன் அவதாரம் செய்தது தன் பொருட்டல்ல. அவருக்கு இச்சையென்பதில்லை. உலகத்தின் நன்மைக்காகவே அவர் மானிட உருவுடன் தோன்றினார். வந்த காரியம் முடிந்தது. போவதற்கு முன்னால் அதை முற்றிலும் முடிக்கத் திண்ணம் கொண்டார்.

விசுவாமித்திரர், அஸிதர், கர்ணர், துர்வாஸர், பிருகு, அங்கிரஸர், கச்யபர், வாமதேவர், அத்ரி, வஸிஷ்டர், நாரதர் முதலிய முனிவர்கள் ஒரு யாகத்தின் பொருட்டுத் துவாரகை வந்து விட்டு அருகில் இருந்த ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். அச்சமயம் யதுகுலத்துச் சிறுவர்கள் ஜாம்பவதியின் மகனான ஸாம்பனுக்குப் பெண் வேஷமிட்டு, முனிவர் முன்னிலையில் அழைத்துச் சென்று பணிவுடன் பேசுவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு, ''முனிவர்களே! இக் கருவிழி வாய்ந்த பெண் உங்களிடம் நேராகக் கேட்க வெட்கப்படுகிறாள். இவள் கருத்தரித்திருக்கிறாள். இவளுக்கு ஆண் குழந்தை பிறக்குமா, இல்லை, பெண் குழந்தை பிறக்குமா?'' என்று வினவினார்கள். இதைக் கேட்ட முனிவர்கள் சினம்மேலிட்டு, ''மதிகெட்ட பையன்களே! இவள் இரும்புலக்கையைப் பெறுவாள். அது உங்கள் குலத்தையே அழித்து விடும்'' என்றனர். இதைக் கேட்டதும் பையன்கள் பயந்து விட்டனர். ஸாம்பனுடைய ஆடையை உருவிப் பார்த்ததும், அவன் வயிற்றில் ஒரு இரும்பு உலக்கை இருந்தது. ''விளையாட்டு வினையானதே. நம் நடத்தையைக் கேட்டால் பெரியோர் என்ன சொல்வார்களோ?'' என்று கலங்கி, உலக்கையை உக்ரசேன மன்னனிடம் எடுத்துச் சென்று நடந்ததையும் கூறினார்கள். உலக்கையைப் பார்த்துப் பெரியோர் மனம் கலங்கினர்.

அரசன் உலக்கையைத் தூள் தூளாகப் பொடியாக்கும்படி கட்டளை விட்-

டான். ஒரு சிறிய துண்டு பொடியாகவில்லை. எல்லாவற்றையும் கடலில் எறிந்து விடும்படி உரைத்தான். அவ்வாறே சேவகர்கள் பொடிகளையும் துண்டையும் கடலில் எறிந்தனர். பொடிகள் எல்லாம் அலையடித்துக் கடற்கரையில் ஒதுக்கப்பட்டன. அவை கூரிய நாணலாக மாறின. இரும்புத் துண்டை ஒரு மீன் விழுங்கியது. அம்மீனை ஒரு செம்படவன் பிடித்தான். மீன் விழுங்கிய இரும்பை ஒரு வேடன் எடுத்துத் தனது அம்பின் நுனியில் வைத்துக் கட்டினான்.

கால ரூபியான கண்ணன் இந் நிகழ்ச்சிகளை அறிந்து சும்மா இருந்தான். துவாரகையில் பெரியோர்கள் அனேக அபசகுனங்களைக் கண்டு, கண்ணனிடம் சென்றனர். கண்ணன் "எங்கும் அபசகுனங்கள் தெரிகின்றன. நமது குலத்தின் மீது முனிவரும் சாபமிட்டிருக்கின்றனர். இனிமேல் நாம் இங்கு இருக்கலாகாது. கடற்கரையிலிருக்கும் பிரபாஸம் என்ற இடத்துக்குச் செல்வோம். பெண்டிரும் பிள்ளைகளும் ஸாங்கியதாம் என்ற இடத்துக்குச் செல்லட்டும். அங்கு ஸரஸ்வதி நதி கடலுடன் கலக்கிறது. அவ்விடத்துக்குச் சென்று ஆற்றில் நீராடி தேவருக்கு வழிபாடு செய்வோம். பல தானங்களையும் செய்வோம்" என்று அவர்களிடம் மொழிந்தான்.

அவர்களும் கண்ணன் சொல்லுக்கு இணங்கித் தேர்களில் ஏறிக்கொண்டு பிரபாஸம் சென்றார்கள். விதி யாரைவிட்டது? அங்கு சென்ற பிறகு பூஜைகளை முடித்தனர். மதுபானம் செய்து மதி இழந்தார்கள். சண்டையை மூட்டி ஒருவரோடொருவர் போர் புரிந்தார்கள். ஒருவரை யொருவர் கொன்று விடவும் எண்ணம் கொண்டனர். அம்பையும் வில்லையும் வாளையும் ஈட்டியையும் எடுத்துக் கொண்டனர். மதங் கொண்ட யானைகளைப் போல் ஒருவரையொருவர் புடைத்தனர். கண்ணனுடைய மாயையால் தன்னறிவற்றுத் தந்தை மகனையும், அண்ணன் தம்பியையும், மருமகன் மாமனையும் கொல்லத் துணிந்தனர்.

இவ்வாறு போர்புரிந்து அம்பெல்லாம் தீர்ந்து, வில்லெல்லாம் முறிந்து மற்ற ஆயுதங்களெல்லாம் காணமற் போகவே யாதவர்கள் கடற்கரையில் வளர்ந்திருந்த நாணலைப் பிடுங்கி யுத்தம் செய்தார்கள். அரசே! அந்த நாணல் தண்டுகள் வஜ்ராயுதம் போல் இருந்தன. இவ்விதம் யாதவ குலம் அழிந்து போயிற்று.

மிஞ்சியது கண்ணனே! பலராமன் கடற்கரையில் அமர்ந்து பரம்பொருளை உள்ளத்தில் தியானம் செய்யலானார். இவ்வுடலைத் தாமாகத் துறந்தார்.

பலராமன் முக்தி அடைந்ததும் கண்ணன் ஓர் அச்வத்த மரத்தின் அடியில் சென்று உட்கார்ந்து கொண்டார். புகையற்ற சுடரென அவருடைய ஒளி திக்கெல்லாம் திகழ்ந்தது. மார்பில் மறுவும், கார்முகில் மேனியும், உருக்கிய பொன்னழகும், மஞ்சள் பட்டாடையும், செந்தாமரை வதனமும், கருங்குழலும், மகர குண்டலமும், புது மலர் மாலையும், மேகலையும், முப்பிரி நூலும், தங்கக் காப்பும், கேடயமும், முத்துமாலையும், மார்பில் மணியும் அவருடைய பேரழகைப் பன்மடங்கு பெருக்கின. இடது காலை வலது தொடையின்மீது வைத்து அமர்ந்தார். அப்பொழுது ஜரன் என்ற வேடன் தூரத்தில் நின்று கொண்டு கண்ணன் வீற்றிருந்த இடத்தை நோக்கினான். கண்ணனுடைய செந்தாளைக் கண்ணுற்றதும் அவனுக்கு அது மானின் முகமெனத் தோன்றியது. அவ்விடத்தை நோக்கி அம்பைவிட்டான். ஆனால் அருகில் சென்றதும் நான்கு கைகளுடன் விளங்கும் கண்ணனைக் கண்ணுற்றான். காலில் விழுந்து, "என்ன பாபம் செய்து விட்டேன்?" என்று கதறினான் "என்னைக் கொன்று விடுங்கள்" என வேண்டிக் கொண்டான். அதற்குக் கண்ணன் அவனைத் தேற்றி, "இதை என் மாயையினால் நானே வருவித்துக் கொண்டேன். நீ அஞ்ச வேண்டாம். உன்மீது தவறொன்றும் இல்லை" என்றார்.

அச்சமயம் தாருகன் என்ற தேர்ப்பாகன் கண்ணனைக் காணாது தேடிக் கொண்டு துளசியின் நறுமணத்தைப் பற்றிக் கண்ணன் இருக்கும் இடத்தை அடைந்தான். திடீரென்று ஆகாயமெல்லாம் விமானங்களால் நிறைந்தது. பிரமனும் இந்திரனும் ஏனைய தேவர்களும், யக்ஷ கின்னர சாரணர்களும் விமானங்களில் வந்து கூடினார்கள். திருமால் மெய்யுடன் கூடிய வைகுண்டம் ஏகினார். சென்றவரை வந்தவர் எல்லோரும் காணவில்லை. ஆச்சரியம் மிகுந்து நின்றனர்.

அரசனே! ஆண்டவன் அவதாரமும் செயல்களும் மறைவும் எல்லாம் அவருடைய ஓயாத மாயையின் விரிவென்று அறிவாய். கருவிலிருக்கும் உன்னைக் காத்தருளிய கண்ணனைச் சரண் புகுவாய். தன்னை நினைப்பவரிடம் மாதவன் எப்பொழுதும் குடிகொண்டிருக்கிறான். கண்ணனுடைய சரிதையைச் சொல்பவனும், கேட்பவனும் பாபத்தை அகற்றிப் புண்ணியத்தைப் பெறுகின்றனர். கண்ணனே கதியென்றிருப்போர்க்குக் குறையேதுமில்லை."

(முற்றிற்று)







Johnson's
BABY
POWDER
Johnson's
BABY
SOAP
Johnson's
Baby Soap


கலப்பில்லாத
வைரங்கள்
உத்தரவாதமான
நகைகள்
பாபாலால் அண்டு கோ
ரட்டன் பஜார் சென்னை - 3


நோவை சமிப்பிக்க
இன்பமான வழி
எப்பொழுதும்
ஒரு டியூப்
நோபின்
கையிருப்
பாக வைத்
திருங்கள்.
NOPIN
நோபின்
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்,
கல்கத்தா-29.
1916 லிருந்து நாட்டு மக்களுக்கு
சேவை செய்கிறது.
தென்னிந்திய ஆபீஸ்: 5/149 பிராட்வே சென்னை - 1



இருபத்திமூன்றாம் அத்தியாயம்

## வளை எறி முறிந்தது

பெரும்பிடுகு முத்தரையரின் பரட்டைத் தலை, கோழி முட்டைக் கண்கள், மண்டையோட்டு முகம் இவற்றைச் சாதாரண நிலையில் பார்த்தாலே, பார்ப்பவர்களின் மனம் நடுங்கும். இப்போதோ அவர் சிறுத்தையெனச் சீறிக்கொண்டு நின்றார். அந்த நிலையில் அவரைப் பார்த்த இளம் வணிகனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

முத்தரையர் தமது மகள் திலகவதி கொண்டு வந்து கொடுத்த வாளை வணிகனிடம் நீட்டி விட்டுத் தமது வாளை உயர்த்தப் போனார்.

“ஐயா! தயவுசெய்து சற்றுப் பொறுத்து நான் சொல்வதைக் கேட்டு விட்டுப் பிறகு உங்கள் சித்தப்படி செய்யுங்கள். நான் உங்கள் வீடு தேடிக் கொள்ளையிட வரவில்லை; கன்னம் வைக்க வரவில்லை. தெரு வழியே பொருள் கூவி விற்றுக் கொண்டிருந்த என்னை இந்த அம்மணிதான் கூப்பிட்டார்கள்” என்றான் வணிகன்.

“ஆமாம், அப்பா! அத்தையாரும் நானும்தான் இவனை அழைத்தோம்” என்றாள் திலகவதி. அவளுடைய அத்தையார் தம் தம்பியின் சினத்தைக் கண்டவுடனேயே வீட்டின் பின்கட்டுக்குள் சென்று பதுங்கி விட்டார்.


திலகவதி இப்படிச் சொல்லி விட்டு, அந்த வணிகன் கொண்டு வந்த பட்டாடைகளில் தன் மனத்தைப் பறி கொடுக்கலானாள். ஒவ்வொரு சேலையாக எடுத்துத் தன் வண்ண மேனியுடன் இணைத்து வைத்து, முதலில் உதட்டைப் பிதுக்குவதும், பிறகு ஆனந்தப்படுவதுமாக அவள் செய்து கொண்டிருந்தாள். “அப்பா! இப்படிச் சற்றுப் பாருங்களேன்! இந்தக் கலிங்கத்தை நான் கட்டிக் கொண்டால் நன்றாக இருக்குமா?”

அவர் தமது மகளின் கலைச்சுவையை ரசிக்காமல், தான் விழுங்கப் போகும் கன்றுக்குட்டியை மோப்பம் பிடிக்கும் சிறுத்தையைப் போல், வணிகனை மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தார்.

“அம்மணி! உங்கள் தந்தையார் பொன் கொடுத்துப் பொருள் வாங்குவதற்குப் பதிலாக, என்னைக் கொன்று விட்டு இவைகளைக் கவர்ந்து கொள்ள நினைக்கிறார் போலும்! உங்கள் கலைச் சுவை இவரிடம் கொலைச் சுவையைத் தூண்டிவிடுகிறது, தாயே!”

“யார் நீ?” என்று உறுமினார் பெரும்பிடுகு முத்தரையர்.

“நான் கொண்டு வந்திருக்கும் பொருளைப் பார்த்தால் தெரியவில்



லையா? ஆடை அங்காடிக்கார மெய்யப்பரிடம் வேலை பார்க்கிறவன் நான். ஐயா! நான் உங்கள் கையால் சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால் மெய்யப்பர் அவருடைய பொருள்களை எடுத்துக் கொண்டு நான் எங்கோ ஓடிப் போய் விட்டதாக நினைப்பாரே என்று அஞ்சுகிறேன்."

சரேலென முத்தரையரின் வாள்முனை அவன் மூக்கு நுனியைப் பதம் பார்க்கத் தொடங்கியது. தற்காப்புக்காக அவனும் பளிரென்று தன் வாளை ஓங்கினான். அவ்வளவுதான்! இருவரும் தங்கள் தங்கள் கைவரிசைகளைக் காட்ட முனைந்து விட்டனர்.

வணிகனின் வாட்கலையுணர்ச்சி அவனையறியாது அவனை ஆட்கொண்டு விட்டது. அலட்சியமாக வாள் வீசப் புகுந்த முத்தரையர் இவ்வளவு கடுமையான எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லை. ஆகவே, முழுமூச்சுடன் தமது வல்லமையைக் காட்டலானார். வணிகனும் சளைக்கவில்லை. தன் உயிரை அவன் காத்துக் கொள்ள வேண்டாமா? அந்த ஆவேசப் பரபரப்பில் அவன் அவரைப் பம்பரம் போல் ஆட்டி வைக்கலானான்.

வணிகன் உடையில் வந்திருக்கும் வாள் வீரனு அவன்!

திலகவதி முதலில் அவனுக்காக அனுதாபப்பட்டாள். அப்போது அவள் தந்தையின் கை ஓங்கியிருந்தது. அடுத்தாற் போல் அவன் திறமையைக் கண்டு வியந்தாள். இருவரும் சரிசமமாக நின்றனர். பிறகு அவன் ஆவேசத்தைக் கண்டு துணுக்குற்றாள். இப்போது தன் தந்தையாரின் உயிருக்காக அஞ்சி நடுங்க வேண்டிய கட்டம் அவளை விரைந்து நெருங்கிக் கொண்டிருந்தது.


பதறிக் குடல் நடுங்கிப் போனாள்

"அம்மணி! ஆபத்து என் பக்கத்திலிருந்த போது தாங்கள் ஆத்திரப்பட்டுக்கொண்டு தடுக்க வரக்காணோமே? என்னையும் என் தாயார் பத்து மாதம் சுமந்து தானே பெற்றிருப்பார்கள்?" என்று கேட்டான்.

அவனுடைய சொற்கள் அவளைச் 'சுருக்'கெனத் தைத்திருக்க வேண்டும். அதற்காக வருந்துகிறவள் போல் இரக்கம் நிறைந்த விழிகளால் அவனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். வாள் வீச்சில் அவன் வெளிப்படுத்திய சாகசங்கள் அவனைப் பற்றிய மதிப்பை அவளிடம் உயர்த்தியிருந்தன. இடிந்துபோய் நின்று கொண்டிருந்த தன் தந்தையின் கைகளை மென்னப் பற்றிக் கொண்டே, "இவனைப் பார்த்தால் அப்படியொன்றும் தீயவனாகத் தோன்றவில்லையே! ஏனப்பா இவன் மீது உங்களுக்கு இவ்வளவு கோபம்?" என்று கொஞ்சும் குரலில் கேட்டாள்.



"தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடாதே, மகளே!" என்று சொல்லித் தம்முடைய நெற்றியைக் கனித்து உதட்டைக் கடித்தார் முத்தரையர். "இந்தப் புடைவைகளை உடுத்துக் கொண்டு இவன் பெண்ணாகவே மாறினாலும் மாறுவான்."



இளநகை செய்து கொண்டபடி தன் அரும்பு மீசையை முறுக்கி விட்டான் வணிகன். "ஐயா! நீங்கள் வீணாக ஓர் ஆண்மகனை அவமானப்படுத்துகிறீர்கள். கொலையைக்கூட நான் பொறுத்துக் கொள்வேன். ஆனால் பெண்ணாக மாறும் பித்தன் என்று சொல்லும் இந்தப் பழியை என்னால் பொறுக்க முடியாது."

"திலகவதி! இந்தக் கணுக்கால் காயம் நினைவில் இருக்கிறதா?" என்று தம்முடைய வலது காலை மகளுக்குச் சுட்டிக் காட்டினார் அவர். "வளை எறியை வீசி விட்டு ஒருவன் குதிரையிலேறித் தப்பித்துக் கொண்டு ஓடினான் என்று உன்னிடம் சொல்லவில்லையா? அவன்தான் இவன்! இவன் சோழநாட்டு ஒற்றன்! இந்தப் பாண்டி நாட்டுக் கொல்லன் வீட்டுக்கே ஊசி விற்க வந்திருக்கும் இவன் மெய்த் துணிவைப் பார்த்தாயா?"

வினைச் சிரிப்புச் சிரித்தபடியே, "ஒற்றா! உன் திறமையைப் பாராட்டுகிறேன்; வீரத்தையும் மெச்சுகிறேன். ஆனால் உன் வேஷத்தைக் களைந்து விடு!" என்று கூறினார்.

அவனையும், தன் தந்தையின் கால் தழும்பையும், மாறி மாறிப் பார்த்து மருண்ட திலகவதி, "அடபாவி!" என்று சொல்லிக்கொண்டு அவனை விட்டுச் சிறிது விலகிப் போய் நின்றாள்.

பளீர் பளீரென அந்த வணிகனின் நரம்புகளனைத்தும் ஒரு விநாடி சுண்டி இழுத்தன. மறு விநாடிக்குள் தன்னைச் சமாளித்துக் கொண்டு மிகுந்த அனுதாபம் கொண்டவன் போல் அவன் நடிக்கலானான்.

"ஐயா! நீங்களா அது? அப்படியென்றால் நீங்கள் என்னைத் தண்டிக்க வந்தது சரிதான். எனக்கு உங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அன்றொரு நாள் நான் கொடுத்த துன்பத்துக்காக இன்றைக்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்" என்று பதறினான் வீரமல்லன்.—ஆம், அவன் வீரமல்லனேதான்.

"வேஷம் கலைந்து விட்டது பார்த்தாயா?" என்று மகளைப் பார்த்து முறுவலித்தார் முத்தரையர்.

"வேஷம் என்று இன்னொரு முறை சொல்லாதீர்கள். என்னுடைய முந்தைப் பிறவி வாழ்க்கையில் நடந்ததை நீங்கள் இன்றைக்குப் பேசுகிறீர்கள். அப்போது அது என் கடமையாக இருந்தது; செய்தேன். இப்போது அதற்காக வருந்துகிறேன்" என்றான் அவன். "நான் இப்போது படை வீரனில்லை. சோழர்களுடைய படையில் எனக்குள்ள மதிப்பைக் கொடுக்காதபோது நான் ஏன் அங்கிருக்க வேண்டும்? சோழவள நாட்டுக்கே தலை முழுக்குப் போட்டு விட்டு வந்திருக்கிறேன்."

'இதையெல்லாம் நான் நம்பக்கூடியவனா? கதைக்கிறாயே, தம்பி!' என்று கூறுவது போல் ஏளனமாக விழித்தன முத்தரையரின் கண்கள்.

"நீங்கள் நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள். என்னுடைய பழைய புண்ணைக் கீறி விட்டீர்கள். அதனால் என்னுடைய ஆத்திரத்தை உங்களிடம் கொட்டி ஆற்றிக் கொள்ளுகிறேன். வீரனாக இருந்த வீரமல்லன் என்றைக்கோ இறந்து போய் விட்டான், வீரர்களுக்கும் வீரத்துக்கும் சோழநாட்டு அதிகாரிகளிடம் மதிப்பு ஏது?"

பெருமூச்சு விட்டுக் கொண்டே மேலே தொடர்ந்தான் வீரமல்லன்:

"ஈழ நாட்டுப் போருக்குச் செல்ல வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய உணர்ச்சியையும் ஆற்றலையும் அவர்கள் மதிக்கவில்லை. பிறகு எதற்கு அவர்களிடம் அடிமைச் சேவகம் செய்ய வேண்டும்? வீரன் என்ற பெயர் சுமந்து வீணாகத் திகழ்வதைவிட, வணிகன் என்ற பெயரையும் வண்ணப் பெண்களுக்கு ஆடையும் சுமக்கலாமல்லவா?"

அவனுடைய குரலின் அடித்தளத்தில் மறைந்து கிடந்த சிறு துளி ஆத்திரம் எப்படியோ அவர் கவனத்தைக் கவர்ந்து விட்டது! 'மெய் போல் தோன்றுகிறதே!' என்று அவர் உள்ளிப்பாய்க் கேட்கலானார்.

"ஐயா! நீங்கள் யாரோ, நான் யாரோ, முன்பின் தெரியாதவர்கள். ஒரு வகையில் பார்த்தால் பழைய பகைவர் என்றுகூடச் சொல்லலாம். அப்படியிருந்தும் நீங்கள் எதற்காக என் வீரத்தைத் தாராளமாகப் பாராட்டினீர்கள்? சோழ நாட்டில் இது கிடைக்காததால் தான் பாண்டி நாட்டுக்குப் புகலிடம் தேடி ஓடி வந்தேன். வணிகர் மெய்யப்பர் என்னை வளர்ப்பு மகனைப் போல் கவனிக்கிறார். வாள் பிடிக்கும் கரம் நூல் பிடிப்பதால் என்ன குறைந்து விட்டது? இந்தவேலை போதும் எனக்கு."

முத்தரையர் அவனை நம்பவும் இல்லை; நம்பாமலும் இல்லை. மனத் தராசு இரு புறமும் ஆடிக்கொண்டிருக்க, "மெய்யப்பரின் ஆள் என்பதால் உன் சொல்லை மெய்யென்று நம்பச் சொல்கிறாயா?" என்று கேட்டார்.

"பொய்யாகவே இருந்து விட்டுப் போகட்டும்; எனக்குப் பொழுதாகிறது" என்று அவசரப்பட்டான் அவன். "அம்மணிக்குப் பிடித்திருந்தால் துணிகளை எடுக்கச் சொல்லிப் பொன் கொடுங்கள். இந்தத் துணிகளுமே பொய் என்றால் எனக்கு விடை கொடுத்து அனுப்புங்கள். இன்னும் நாலு இடங்களுக்குப் போய்ப் பார்த்து விட்டு நான் அங்காடிக்குத் திரும்ப வேண்டும்."

"மூட்டையை எடுத்துக் கொண்டு உள்ளே வா!" என்று சொல்லி விட்டு முன்னால் சென்றார் வீட்டுக்காரர்.

உள்ளே போனால் வெளியில் வரமுடியுமா என்ற சந்தேகத்துடன் தயங்கிக் கொண்டே நுழைந்தான் வீரமல்லன். வீட்டுக்குள் அவனுக்கு உபசாரமும் நடந்தது; வியாபாரமும் நடந்தது. தனக்குப் பிடித்த ஆடைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு "நாளை மறுநாள் இந்தப் பக்கம் வந்தால் புதுவிதமான கச்சைகள் கொண்டு வருகிறீர்களா?" என்றாள் இலகுவதி. வருவதாக அவனும் தலையாட்டி வைத்தான்.

பொருளுக்குரியபொன்னைக் கொடுத்து விட்டு, "இலகுவதி! தம்பிக்கு மோர் கொண்டு வா; வாள் வீசிக் களைத்திருக்கிறான்" என்று சொல்லி அருகிலிருந்த அறைக்குள் சென்றார் முத்தரையர்.

"பயந்தவர் போல் காணப்படுகிறீர்களே! கொழு மோர் காய்ச்சிக் கொண்டு வரட்டுமா?" உள்ளே சென்று வந்து குளிர்ந்த மோர் நிறைந்த வெண்பொற்கலத்தை நீட்டினாள் அவள். அவளுடைய குளிர்ந்த மேனியின் அழகையும் அந்த மோரையும் ஒன்றாகப் பருகினான் வீரமல்லன். அவள் பேச்சில் திடீரென்று ஏற்பட்ட மரியாதை அவன் உள்ளமெல்லாம் குளிரச் செய்தது.

அதற்குள் அறைக்குள் சென்று திரும்பி வந்த முத்தரையர் அவனிடம் ஒரு பொருளைக் கொண்டு வந்து கொடுத்தார். "இந்தா! உன்னுடைய ஆயுதத்தை நீயே வைத்துக் கொள்!" - வீரமல்லன் அவர்மீது எறிந்த பழைய வளை எறி அது.

வளை எறியைக் கண்ட வீரமல்லன் திடுக்கிட்டுத் திகைத்தான். அதன் மீது தன் கோபத்தைக் காண்பிக்கும் முறையில் அதை இரண்டாக ஒடிக்கப்போனான்.

"வீணாகச் சிரமப்படாதே, தம்பி! உன்னால் அதை முறிக்க முடியாது."

வளை எறியை முறிப்பதென்பது எளிதான காரியமல்லதான். ஆனால் அவன் அதை முறிக்காமல் விடுவதாக இல்லை. தன் மூச்சை அடக்கி அதன் இரண்டு முனைகளையும் வளைக்க முயன்றான். அந்த முயற்சியில் அவனது நெற்றி நரம்புகளும் கரங்களின் நரம்புகளும் புடைத்தெழுந்தன. நற நறவென்று பற்களைக் கடித்துக்கொண்டே அதனிடம் தன் வலிமையைப் பணயம் வைத்தான். படீரென்ற சத்தத்துடன் அது இரண்டு துண்டுகளாக ஒடிந்து விழுந்தது.

இராமன் வில்லை வளைத்து முறித்தபோது சீதை எவ்வளவு ஆனந்தப்பட்டாளோ தெரியாது. ஆனால் திலகவதியின் ஆனந்தம் அதில் சிறிதளவும் குறையவில்லை. முத்தரையரும் இளைஞனின் தோள் வலிமையைக் கண்டு தமக்குள்ளே வியக்கலானார்.

"அம்மணி! உங்கள் தந்தையாருக்கு அபசாரம் செய்த இந்த வளை எறி இனி என்னிடம் இருக்க வேண்டாம். இதைக் கொண்டுபோய் அடுப்பில் போடுங்கள்!"

வாங்கிக்கொண்டு உள்ளே போனவள் அதை அடுப்பில் போடாமல் தன் மார்பகத்துடன் அணைத்துக்கொண்டு பெருமூச்சு விட்டாள். பிறகு தன் அதை யாருக்குத் தெரியாமல் பத்திரப்படுத்தினாள். பின்னர் அவனைப் பார்த்துக்கொண்டே திரும்பி வந்தாள்.

"முத்தரையரே!" என்று, யாரோ வாசலிலிருந்து வீட்டுக்காரரை அழைக்கும் குரல் கேட்டது.

"யாரது?" என்று கேட்டுக்கொண்டு துள்ளியெழுந்தான் வீரமல்லன்.

கலகலவென்று சிரித்துவிட்டு, "அப்பாவைக் கூப்பிட்டால் நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்?" என்றாள் திலகவதி.

"நீங்களும் முத்தரையர்களா?" தெரியாதவன்போல் கேட்டான் வீரமல்லன்.

"நீங்கள்?"

"நான் வீரமல்ல முத்தரையன்."

"என்ன!" - ஏக காலத்தில் தந்தையும் மகளும் சேர்ந்து எழுப்பிய வியப்பொலி அவன் எதிர்பார்த்த வெற்றியைத் தந்து விட்டது. தனக்குள்ளே சிரித்துக் கொண்டான் அவன்.

விடைபெற்றுக் கொண்டு வீரமல்லன் புறப்பட்டபோது, அவனை அங்கு அடிக்கடி வந்து போகுமாறு கூறினார் பெரும்பிடுகு முத்தரையர். அவன் கொண்டு வருவதாகச் சொன்ன புதிய கச்சைகளைப் பற்றி நினைவூட்டினாள் திலகவதி. அவளுடைய துணிச் சுமை மலர்ச் சுமைபோல் இலேசாக மாறியது. மனத்தில் ஏற்பட்ட சின்னஞ்சிறு விரசலுடன் அவன் அந்த இடத்தை விட்டுக் கிளம்பிச் சென்றான்.

## இருபத்திநான்காம் அத்தியாயம்

# ஆசைக் கனவுகள்

அமாவாசைக்குப் பிறகு பத்து தினங்கள் சென்றன. இதற்குள் ரோகணத்தின் பல பகுதிகளுக்கும் சோழநாட்டு வீரர்கள் மன்னரையும் அமைச்சரையும் தேடுவதற்காக அனுப்பப்பட்டனர். ரோகணம் அவர்களுக்குப் புதிய இடம். சரியான சாலைகளும், புரவிகள் செல்லக் கூடிய பாட்டைகளும் அந்தப் பிரதேசத்தில் அருகியிருந்தன. தேடிச் சென்றவர்களில் பலர் சோர்ந்து திரும்பினர்; இன்னும் பலர் திரும்பவேயில்லை. அமைச்சர் கீர்த்தியின் முன்னேற்பாட்டால், மறைந்திருந்து தாக்கும் சிறு கூட்டத்தினர் அங்கங்கே தொல்லைகள் விளைவித்த வண்ணம் இருந்தனர்.

காடுகள், மலைகள், மடுக்கள், குகைகள், வனவிலங்குகள், மறைவிடங்கள் முதலியன நிறைந்த அந்தக் காட்டில், அவர்கள் தேடிச் சென்ற மனிதர்களும் அகப்படவில்லை; மணிமுடியும் அகப்படவில்லை.

இந்தப் பத்து நாட்களில் ஒரே ஒரு முறை ரோகிணி அரண்மனையை விட்டு நகரத்துக்குள் சென்று வந்தாள். அவளுடைய பணிப்பெண்ணின் தகப்பனார் வீட்டுக்குச் சென்று வந்ததாக, இளங்கோவின் மூலம் வல்லவரையருக்குச் செய்தி கிடைத்தது. ரோகிணியின் நடவடிக்கைகளை அவளுக்குத் தெரியாமல் கண்காணித்த இளங்கோ, அவள் சென்று

வந்த வீட்டைச் சுற்றிலும் ஒற்றர் சிலரை நிறுத்தி வைத்தான்.

அந்தப்புரத்தின் வடக்கு வாயில் மதிலில் ரோகிணி ஏற்படுத்தியிருந்த பாதையைப் பார்த்தபிறகு, அதைப் போன்ற மற்ற ரகசிய வழிகளும் கண்டு பிடிக்கப்பட்டன. அரண்மனையைவிடச் சக்கரவர்த்தி தங்கியிருந்த பெரிய மாளிகையே மிகவும் விசித்திர வழிகள் நிறைந்ததாக இருந்தது. அமைச்சர் கீர்த்தியின் உறைவிடமாக இருந்ததாம் அது.

அந்த மாளிகையின் சுவர்களுக்குள்ளிருந்து சில பேழைகள் அகப்பட்டன. அவற்றில் எதற்குள்ளும் மணிமுடி இருக்கவில்லை. ஆனால் மணிமுடியைக் காட்டிலும் மிகவும் பொறுப்புள்ள பொருள்கள் கிடைத்தன. அமைச்சர் கீர்த்தியின் எதிர்காலத் திட்டமே அங்கிருந்த சில ஓலைச்சுவடிகளில் மறைந்திருந்தது.

ஓலைச் சுவடிகளைக் கைப்பற்றிய மாமன்னர் அவற்றைத் தமது அறைக்கு எடுத்துச்சென்று ஆராயலானார். படிக்கப் படிக்க அவரை வியப்பும், திகைப்பும், பரபரப்பும் ஆட்கொள்ளத் தொடங்கின. அமைச்சர் கீர்த்தி கைதேர்ந்த ராஜதந்திரி என்பதும், துணிச்சலும் பேரார்வமும் கொண்ட வீரர் என்பதும், அவரது வழிகள் பயங்கரமானவை என்பதும் விளங்கலாயின.

வல்லவரையரையும் இளங்கோவையும் வரவழைத்து அவர்களுடன் அந்த ஓலைச் சுவடிகள் தெரிவித்த செய்திகளைப் பற்றி ஆலோசனை நடத்தினார். 'மணிமுடியைக் கைப்பற்றுவதோடு போராட்டம் ஓய்ந்துவிடப் போவதில்லை; தொடர்ந்து போராட்டம் நடைபெறவேண்டிய நாடு ரோகணம்' என்ற எண்ணம் மாமன்னரிடம் நன்கு பதிந்து விட்டது.

இரவெல்லாம் தனித்திருந்து சுவடிகளைப் புரட்டியதால் இராஜேந்திரரின் கண்கள் கோவைப் பழங்களெனச் சிவந்திருந்தன. சிந்தனை செய்ததால் ஏற்பட்ட வெம்மை அவருடைய முகத்தில் படர்ந்திருந்தது.

வல்லவரையரைப் பார்த்து, "மாமா! நம்மில் யாருக்காவது அமைச்சர் கீர்த்தியும், சுந்தர பாண்டியனும் நெருங்கிய உறவினர்கள் என்பது தெரியுமா?" என்று கேட்டார்.



"என்ன!"

"ஆமாம்; அவர்கள் இருவரும் மைத்துனர்கள்."

"சுந்தரபாண்டியனின் தங்கையைக் கீர்த்தி மணந்திருக்கிறாரா?" என்று வியப்புடன் கேட்டார் வல்லவரையர்.

"இல்லை; கீர்த்தியின் தங்கை மித்திரை சுந்தர பாண்டியனின் மனைவி. இந்த உறவு இன்று நேற்று ஏற்படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பே ரகசியமாகத் திருமணம் நடைபெற்றிருக்கிறது."

"தமிழர்களை அடியோடு வெறுக்கும் கீர்த்தியா தம் தங்கையைச் சுந்தரபாண்டியனுக்குக் கொடுத்திருப்பார்? என்னால் இதை நம்பவே முடியவில்லையே!"

சுந்தரபாண்டியன் கீர்த்திக்கு எழுதியிருந்த ஓலைகளை வல்லவரையரிடம் கொடுத்து, "இவற்றைப் பாருங்கள். பகையிடத்தே உறவு கொள்வதென்பது நம்முடைய ராஜகுலப் பழக்கந்தான். அதையொட்டியே கீர்த்தியும் இப்படிச் செய்திருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார் இராஜேந்திரர்.

'பகையிடத்தே உறவுகொள்வது பழக்கந்தான்' என்ற மாமன்னரின் சொற்கள் தேன் துளிகளாகச் சுவை தந்தன இளங்கோவுக்கு. அப்படியென்றால் அவனுடைய சொந்த விஷயத்துக்கும் அது பொருந்துமல்லவா?

சுவடிகளைப் பார்த்த வல்லவரையர், "நம்பத்தான்வேண்டியிருக்கிறது. இந்த உறவை!" என்றார். "பாண்டியர்களின் உறவால் முதலில் நம்முடைய வலிமையைச் சிதைத்துவிட்டு, அடுத்தாற்போல் அவர்களுக்குக் குழி பறிக்கவும் வகை செய்திருக்கிறார் அமைச்சர் கீர்த்தி."

"பாண்டியர்களுக்குரிய முடியை அவர்களிடம் கொடுக்கவில்லை; பெண்ணைக் கொடுத்திருக்கிறார்கள்! எல்லாம் விந்தையாயிருக்கிறது!" என்றான் இளங்கோ.

"விந்தையொன்றுமில்லை; இது ராஜதந்திரம்!" என்றார் இராஜேந்திரர். "உரிமையைக் கொடுப்பது வேறு! பெண் கொடுப்பது வேறு. பார்க்கப் போனால் பெண் கொடுப்பது ஒரு வகை

யில் உரிமையைப் பறிப்பதாகும். ஏன், வேங்கி நாட்டுக்கு நாம் பெண் கொடுக்கவில்லையா?"

வேங்கி நாட்டுப் பேச்சை மாமன்னர் எடுத்தவுடன் இளங்கோவுக்கு என்னவோ போலிருந்தது; அவன் முகம் சுருங்கியது. இராஜேந்திரரின் தங்கை சிறிய குந்தவையாரின் மகன் நரேந்திரன் இப்போது வேங்கி நாட்டு இளவரசன். அருள்மொழி நங்கைக்கு அத்தை மகன் !

'கொடும்பாளூர் உறவு பரம்பரை பரம்பரையாக வந்த பழைய உறவு; வேங்கி நாட்டு உறவு நேற்று வந்த புதிய உறவு; இவர்களுக்கென்னவோ புதிய உறவின் நினைவுதான் அடிக்கடி வருகிறது !' என்று எண்ணிப் புழுங்கினான் இளங்கோ.



இளங்கோவின்முகச் சுருக்கத்தைக் கவனியாதவர் போல் சக்கரவர்த்தி மேலே பேசினார். "நமக்கு மணிமுடி கிடைத்துவிட்டால் மாத்திரம் போதாது; அமைச்சர் கீர்த்தியும் கிடைக்க வேண்டும்."

"அவ்வளவு எளிதில் கிடைத்துவிடக் கூடிய மனிதரல்ல அவர்" என்றார் வல்லவரையர்.

"சக்கரவர்த்திகளுக்குச் சித்தமிருந்தால் அந்தப் பொறுப்பையும் என்னிடம் விட்டு விடலாம்" என்றான் இளங்கோ.

"நீ என்ன செய்வாய் ?"

"இந்த நாட்டின் வீடுகள், காடுகள், புத்த விஹாரங்கள் எங்கிருந்தாலும் தேடிப் பிடிப்பதற்கு ஆட்களை அனுப்புவோம். நயந்து போனால் ஒன்றும் நடக்காது. இரக்கம் காட்டியும் பயனில்லை. பயமுறுத்தித்தான் அவரைப் பணிய வைக்க வேண்டும்."

மெல்லச் சிறுநகை செய்தார் மாமன்னர். "அப்படித்தான் அவரைப் பிடிக்க முடியுமென்றால் அந்த முயற்சியே வேண்டாம். பொதுமக்களின் மனத்தில் பீதி எழுப்புவதும், சமயச் சார்புள்ளவர்களிடம் சச்சரவு கொள்வதும் எனக்குச் சிறிதும் பிடிக்காத செயல்கள்."

"கீர்த்தியின் முழுத் திட்டங்களையும் எங்களுக்குக் கூறவில்லையே !" என்று கேட்டார் வல்லவரையர்.

"சோழ சாம்ராஜ்யத்தின் அடிப்படையைக் குலைப்பது ஒன்றுதான் அவர் குறிக்கோள். நமக்கு உட்பகையாகப் பாண்டியர்களை வளர்த்து விடுவது, வெளிப் பகையாக மேலைச் சளுக்கர்களை ஏவிவிடுவது, கீழைக் கடற்கரை நாடுகளிலுள்ள நம் நண்பர்களைப் பகைவர்களாக மாற்றுவது, இவைதான் அவருடைய வழிகள்."

புன்னகை மாறாத முகத்துடன் எப்படி மாமன்னரால் இந்த அதிர்ச்சி தரும் செய்திகளை வெளியிட முடிகிறது? இதைக் கேட்டவுடன் வல்லவரையர் வந்தியத்தேவரும் இளங்கோவும் வெலவெலத்துப் போய் நின்று விட்டார்கள்.

"நிலப்பரப்பின் எல்லையைக் கொண்டு சாம்ராஜ்யங்களின் வலிமையைக் கணக்கிடுவது என்பது மிகவும் தவறு. நெஞ்சுத் திறனும் கூர்த்த மதியுமிருந்தால் சாம்ராஜ்யங்களை எழுப்பவும் செய்யலாம்; அழிக்கவும் செய்யலாம். அமைச்சர் கீர்த்தி அதற்கே எடுத்துக் காட்டு."


மேலைச் சளுக்க மன்னர் ஜயசிம்மனிடம் கீர்த்தி கொண்டிருந்த தொடர்புகளும், கடல் கடந்த கடாரத்தரசன் விஜயோத்துங்க வர்மனிடம் அவர் சோழர்களுக்கு எதிராக நட்பு பெறச் செய்த முயற்சிகளும் அந்த ஓலைச் சுவடிகளிலிருந்து வெளிப்பட்டன. சக்கரவர்த்தி, கீர்த்தியைப் பகைவரென்றும் பாராமல் பாராட்டத் தொடங்கினார்.

இளங்கோவுக்கு எரிச்சல்தாங்கவில்லை. 'இந்தப் பரந்த மனம் இருப்பதால்தான் நாம் இன்னும் வந்த பணியை முடிக்காதிருக்கிறோம். சக்கரவர்த்திகள் தஞ்சையிலேயே தங்கிக்கொண்டு எங்களை மட்டும் அனுப்பியிருக்கக் கூடாதா ?' என்று எண்ணலானான். அந்த எண்ணத்தை மாமன்னர் எப்படியோ புரிந்துகொண்டு விட்டார்.

நீண்ட நேரம் மௌனமாக இருந்து விட்டு, சாளரத்தின் வழியே வெளியில் பார்த்தவாறே, இராஜேந்திரர் தமது மௌனத்தைக் கலைத்தார்.

"எனக்கோ வயதாகிவிட்டது. என்றாலும் என் அந்திமக் காலத்துக்குள் நான் பிறந்த நாட்டுக்கு எவ்வளவோ செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த ஆசைக் கனவுகளுக்குக் குறுக்கே எத்தனை எத்தனையோ இடர்ப்பாடுகள் !"

மாமன்னர் விட்ட பெருமூச்சில், இளங்கோவுக்கு அவர்மீது ஏற்பட்டிருந்த சிறு சினம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோய் விட்டது. ஊதுவத்தி



பம்பாய் சீனிவாஸ் பிரதர்ஸ் பிரைவேட் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் திரு ஜெ. என். அய்யர் அவர்களின் புதல்வர் திரு ஜெ. என். சீனிவாசன் பர்மிங்ஹாம் தொழில் நுணுக்கக் கல்லூரியில் பிளாஸ்டிக் தொழிலுக்கான கருவிகளைத் தயாரிக்கும் கலையில் விசேஷப் பயிற்சி பெறச் சென்றிருக்கிறார். ஸ்ரீ டி. வி. ராமானுஜமும் முதலிய பிரமுகர்கள் இளைஞரைக் குதூகலத்துடன் வழியனுப்பும் காட்சியைப் படத்தில் காணலாம்.

யின் நறுமணத்தை அவரது பெருமூச்சில் இளங்கோ நுகர்ந்தான். அவர் மேலே பேசலானார். "இமயத்தின் உயரத்திலே சிவபெருமான் குடிகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவரது முடியிலிருந்து கங்கை நதி பொங்கி வருவதாகக் கூறுகிறார்கள். என்னுடைய தென் தமிழ் நாட்டுக்கு இமயத்தையே புரட்டிக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று எனக்கு ஆசை. கங்கை நதியால் நம் தங்கத் தமிழ் நாட்டுக்கே புது வாழ்வளிக்க வேண்டுமென்றும் ஆசை."

ஆனந்தப் பெருவெள்ளம் இளங்கோவின் நெஞ்சத்தை இமயத்தின் உச்சிக்கே அப்போது அடித்துக் கொண்டு போய் விட்டது.

"இளங்கோ! நமக்கு நிலவளமும் வேண்டும்; கலை வளமும் வேண்டும்; நெஞ்சு வளமும் வேண்டும். ஆனால் அஞ்சாத நெஞ்சுரம் என்றால் அதற்குப் பெயர் ஆத்திரமோ, படபடப்போ அல்ல. தனிமனிதனோ ஒரு சமுதாயமோ வளர்ந்து வருவதைக் கண்டால் பொறுமைப்படுவோர் பலர் இருக்கத்தான் செய்வார்கள். பொறுமையோடு நாம் பகைமையை வெல்ல வேண்டும். கீர்த்தி ஒருவருக்காக நாம் இங்கேயே தங்கி நம்முடைய மற்றக் கடமைகளை மறந்து விடக் கூடாது."

மாமன்னர் தமது பேச்சை நிறுத்திக் கொண்டு, உள் வாயில் கதவருகில் பரபரப்புடன் காத்து நிற்கும் வீரனை அருகில் வரச் சொல்லிச் சைகை செய்தார். அவனுடைய முகத்தில் கலவரம் கவிந்திருந்தது. ரோகிணியின் நடவடிக்கைகளைக் கவனிக்க இளங்கோவிடம் ஏவல் செய்த ஒற்றன் அவன்.

இரண்டு நாழிகைப் பொழுதுக்கு முன்னால் ரோகிணி நகரத்துக்குள் சென்ற செய்தி அவர்கள் அனைவருக்கும் தெரியும். முன்பு திரும்பியதைப் போல், இப்போதும் திரும்பி விடுவாள் என்றே இளங்கோ எண்ணியிருந்தான்.

"என்ன செய்தி?" என்றான் இளங்கோ.

"பணிப்பெண்ணின் வீட்டுக்குள்ளேதான் இன்றைக்கும் நுழைந்தார்கள். அவர்கள் சென்ற அரை நாழிகைக்கெல்லாம் பணிட பெண்ணின் தகப்பனும் ஓர் இளைஞனும் ஒரே குதிரையில் வெளியில் கிளம்பினார்கள். குதிரைமேல் சென்ற இளைஞனைப் பார்த்தால்..."

"இளவரசியைப் போல் தோன்றுகிறது. அவ்வளவுதானே?"

"ஆமாம்."


நகரத்தை விட்டுக் கிழக்கே செல்லும் ஓர் ஒற்றையடிப் பாதையில் அவர்கள் குதிரை திரும்பியதாகவும், அந்தப் பாதையைப் பற்றி அவன் விவரம் விசாரித்துக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தான்.

"புறப்படு, இளங்கோ!" என்று கட்டளையிட்டார் சக்கரவர்த்தி. "இளங்கோவை அனுப்பி விட்டு வாருங்கள்" என்று வல்லவரையருக்கும் விடை கொடுத்து அனுப்பினார்.

பெரிய மாளிகையை விட்டு வெளியில் வந்தவுடன் வல்லவரையரும் இளங்கோவும் சிறிது நேரம் தங்களுக்குள் பிணங்கிக் கொண்டனர். இளங்கோவைக் கட்டாயப்படுத்தி அவனுக்குக் கவசம் அணிவித்து, கையில் கேடயத்தையும் எடுத்துக் கொடுத்தார் வல்லவரையர். இளங்கோவுக்கு இந்தத் தற்காப்பு ஏற்பாடுகள் பிடிக்கவில்லை. கடைசியில் அவருடைய வற்புறுத்தலுக்குப் பணிந்தான்.

அடுத்தாற்போல் அவனிடம் ஒரு சிறு துணிமூட்டையைக் கொடுத்து, "தேவையானால் இதையும் பயன்படுத்திக்கொள்" என்றார் வல்லவரையர்.

அதைத் திறந்து பார்த்த இளங்கோவுக்கு, வல்லவரையரின் சமயோசித புத்தியை வியக்காமல் இருக்க முடியவில்லை. "வருகிறேன், தாத்தா!" என்று விடைபெற்றுக் குதிரைமீது தாவி ஏறினான். (தொடரும்)


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
துராஸ மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

# கம்பனுக்கு அரைமணி

தம்பி சீனிவாசன்

"கம்பனுக்கு அரை மணி போதும், அதற்கு மேல் வேண்டாம்" என்றார் கூட்டத் தலைவர் திரு பாஸ்கரத் தொண்டைமான்.

சுமார் பதினைந்து பேர்கள் பங்கெடுத்துக் கொண்ட ஐந்துமணி நேரக் கூட்டத்தில், "கம்பனுக்கு அரை மணி நேரம் தான்" என்றார்.

இத்தனை பேர் வாழ்த்தியும் பாராட்டியும் பேசியது போதுமே. இப்போது தான் இந்த மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் மழை சற்று நின்றிருக்கிறது. நன்றியுரை கூடச் சொல்லியாகி விட்டது. இப்போது எதற்காக இந்தக் கம்பனுக்கு ஓர் அரை மணி கொடுக்கிறார் தலைவர்? சில உற்சாகப் பேச்சாளர்களைப் போல் அரை மணி என்றால் ஒன்றரை மணி எடுத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது? என்று நான் கவலைப்படத் தொடங்கினேன். அடுத்த கணமே திரு பாஸ்கரத்தொண்டைமான் அந்தக் கவலையைத் தீர்த்து வைத்தார்.

"ஒரு நாளைக்குச் சுமார் இருபத்தைந்து கம்பன் பாடல்களைப் படியுங்கள் போதும். அதற்கு அரை மணி நேரம் தான் ஆகும். சிரத்தையுடன் இவ்வாறு படித்தால் ஓரே வருஷத்தில் முழுநூலையும் படித்து முடித்துவிடலாம். கம்பன் புகழ் பேசும் திருக் கூட்டம் ஒருபுறம் இருக்கட்டும். கம்பனைப் படிக்கும் ஒரு கூட்டம் தயாரிப்போம், புறப்படுவோம்" என்று தலைவர் முடிவுரை கூறியதும், கூட்டத்தினர் அனைவரும் தலைவர் சொல்வதை ஆமோதிப்பது போலப் புறப்பட்டு விட்டார்கள்! அப்படிப் புறப்பட்டவர்களில் பாதிப் பேருக்கு மேல் இன்றுவரை தினம் அரை மணியாவது கம்பனோடு வாழ்கிறார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். விழா நிகழ்ச்சிகள் அவ்வளவு தூரம் அனைவரையும் வசீகரித்தன.

* * *

காரைக்குடி கம்பன் கழகத்தில் நடைபெற்ற யுத்தகாண்ட வெளியீட்டு விழா நிகழ்ச்சியைத்தான் குறிப்பிடுகிறேன். இந்த ஆண்டு பொங்கல் திருநாளில் முதல் ஐந்து காண்டங்களை வெளியிட்ட ஆராய்ச்சிப் பதிப்பு முயற்சி ஆவணிப் புனர்வசுவன்று யுத்த காண்டத்தை வெளியிட்டு நிறைவெய்தியது.

தமிழ்க் கடல் திரு ராய சொக்கலிங்கம் தொடக்கி வைக்க, திரு பாஸ்கரத் தொண்டைமான் தலைமையில் கள்ளிப்பட்டி திரு க. கு. கோதண்டராமன் யுத்தகாண்டத்தை வெளியிட்டது பொருத்தமாகத்தான் இருந்தது. கம்பன் முதல் ரஸிகமணி டி. கே. சி. வரையில் இலக்கிய ரஸிகர்கள் யாவரும் வானில் நின்று வாழ்த்தியும் வருணனை நேரில் அனுப்பி வைத்தும் தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

"அதென்னவோ தெரியவில்லை. கம்பராமாயணப் பதிப்பு முயற்சிகளின் போதெல்லாம் கட்டாயம் மழை பெய்கிறது" என்றார் இதில் நன்கு அனுபவப்பட்ட திரு சா. கணேசன்.

தலைவர் திரு பாஸ்கரன் தெரிவித்தபடி சென்ற 120 ஆண்டுகளில் எத்தனையோ பேர்கள் கம்பராமாயணத்தை வெளியிட முயன்றிருக்கிறார்கள். அவற்றில் எட்டே முயற்சிகள்தான் நிறைவெய்தின என்று அறியும்போது அன்று நடைபெற்றது எவ்வளவு அரிய நிகழ்ச்சி என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

"கம்பன் தேரழுந்தூரில் பிறந்தானா, நாட்டரசன் கோட்டையில் புகழுடல் எய்தினானா, நிச்சயமாகத் தெரியாது. ஒன்று நிச்சயம். சுமார் கால் நூற்றாண்டாகக் காரைக்குடியில் அவன் வளர்கிறான். ஆகவே இராமாவதாரத்தின் புது அவதாரம் இங்கு நடைபெறுவது பொருத்தம்தானே" என்ற கருத்தைத் தெரிவித்து, திரு ராய சொ. வெளியீட்டு விழாவைத் தொடக்கி வைத்தார். பல ஏடுகளை ஒப்பிட்டதன் பயனாய், புதிய ஆராய்ச்சிப் பதிப்பில் ஆளப்பட்டுள்ள அருமையான பாடங்களை எடுத்துச் சொன்னார். தமிழ் இலக்கியங்களை எல்லாரும் படிக்கக் கூடியவாறு எளிய முறை





சென்னையில் நடந்து வரும் அமெரிக்க சிறு தொழில் கண்காட்சியில் ஆரம்ப தினத்தன்று பங்கெடுத்துக் கொண்ட புரூக்பாண்ட் தேயிலை ஸ்தாபனத்தின் குரூப் மானேஜர் திரு கே. ஆர். பாலன் அவர்களும் பிராஞ்சு மானேஜர் திரு டி. கே. சந்திரமௌளி அவர்களும் சென்னை கவர்னர் தம்பதிகளையும், மற்றும் பிரமுகர்களையும் பத்திரிகை நிருபர்களையும் வரவேற்று தேனீர் விருந்தளித்து உபசரித்தனர்.

யிலும் விலையிலும் வெளியிட்டு வரும் திரு எஸ். ராஜத்துக்குத் தமிழ் நாடு கடமைப்பட்டுள்ளது என்றார்.

"பத்திரிகைகளில் டி. கே. சி. யின் கட்டுரைகளைப் படித்ததாலேயே கம்பனில் ஈடுபட்ட நான் இன்று கம்பனின் புதுப் பதிப்பை வெளியிடும் பேறு பெற்றிருக்கிறேன்" என்று டி. கே. சி.க்கு அஞ்சலி செய்தார் கள்ளிப்பட்டி திரு க. கு. கோதண்டராமன். கம்பன் பாடல் எது, அவன் பாடாத போலிப்பாடல் எது என்பதை அறிவதில் உள்ள நுணுக்கங்களை எடுத்துச் சொன்னார். கம்ப ராமாயணப் பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் போன்ற முன்னோர்களையும் அவர் நினைவுகூர்ந்தார்.

* * *

ஏழை ஒருவன் திருநெல்வேலியிலிருந்த ஒரு வள்ளலிடமிருந்து ஒரு மூட்டையைப் பெற்று, அதை முதுகிலே சுமந்து திருச்செந்தூருக்குச் சென்றானாம். இருபது மைல் நடந்த பிறகே நெல் மூட்டை என்று தான் நினைத்தது வெறும் மணல்தான் என்பதை அறிந்தானாம். திருச்செந்தூரில் இல்லாத மணலா? இதையா முதுகில் சுமந்து செல்ல வேண்டும்? ஆயினும், இவ்வளவு தூரம் சுமந்து வந்த மூட்டையை அப்படி வழியிலேயே விட்டுப் போக அவனுக்கு மனம் வரவில்லையாம். அதைக் கடைசி வரையில் சுமந்தே சென்றானாம்! இந்தக் கதையைக் கூறி, திரு எஸ். மகராஜன் சில பாடல்கள் இடைச்செருகல்கள்தான் என்று நிச்சயமாகத் தெரிந்தும், நீண்ட காலம் பழகிவிட்ட சொந்தத்தால் அவற்றை ஒதுக்கத் தயங்குகிறோம் என்பதை உணர்த்தினார். புதுப் பதிப்பை வெளியிட்டவர்கள் மட்டமான பாடல்களை மிகைப்பாடல்கள் என்று ஒதுக்கிய துணிச்சலைப் பாராட்டினார். "டி. கே. சி. இன்று இருந்தால் இந்தப் பதிப்பை மிகவும் உற்சாகமாக வரவேற்றிருப்பார்" என்று கூறி, இன்னும்கூட நீக்க வேண்டிய பாடல்கள் சில இருப்பதைக் குறிப்பிட்டார்.

ஆராய்ச்சிப் பதிப்பு வேலையில் உழைத்த திரு பரிமணம், திருநெல்வேலி வக்கீல் திரு கே. பட்சிராசன், வேலூர் எஸ். கே. ராமராசன், குழந்தைநாதன், திரு பா. சூரியநாராயணன், திரு ராம தேவராயன், திரு அமிர்தலிங்கம், திரு பா. நமச்சிவாயம், திரு ந. சுப்பு ரெட்டியார் ஆகிய யாருடைய பேச்சைத்தான் தனித்துக் குறிப்பது? கம்ப ராமாயணத்தை முழுதும் பயின்ற இந்த இளங் கல்விமான்கள் தங்கள் உற்சாகத்தை உயர்ந்த முறையில் வெளியிட்டனர்.

கம்பனுக்காகவே வாழ்ந்து வரும் சா. கணேசன், நீ. கந்தசாமிப்பிள்ளை, பெ. நா. அப்புஸ்வாமி, வி. மு. சுப்பிரமணியம் ஆகியோர் பதிப்பாசிரியப் பொறுப்பை நன்குணர்ந்து நிறைவேற்றியவர்கள். அவர்கள் சார்பில் திரு கணேசன், "இதை முற்ற முடிந்த ஆராய்ச்சிப் பதிப்பு என்று நாங்கள் சொல்லவில்லை. மிகவும் ஒழுங்கான ஆராய்ச்சிப் பதிப்பு சிறிது சிறிதாக உருவாவதற்கு இது ஓர் அடிப்படையே" என்று அடக்கமாகக் கூறிக் கொண்டார்.

திரு மகராஜன் குறிப்பிட்டது போல், கம்பனை அவன் காலத்தில் ஆதரித்த சடையப்பனை விட, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் அவன் உண்மைக் கவிதையைக் காப்பாற்றி, ஆதரித்து, பரவச் செய்வோரே அதிகம் போற்றப்பட வேண்டியவர்கள். கம்பன் புகழ் வாழ்க!

# நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

## 118. பொது விஷயம்

"பூ! இந்த அற்ப விஷயங்களையெல்லாம் நான் காதிலே போட்டுக் கொள்கிறதேயில்லே!"

"வைரக் கடுக்கனுனல் போட்டுக் கொள்வீராக்கும்?"

"என்னடா தம்பி! எனக்கே காது குத்தப் பாக்கிறே?" என்பது போன்ற எத்தனேயோ கதைகள் காதைப் பற்றி. அவையெல்லாம் பழகிக் கிரையாய்ப் போனவை. இப்போது இவற்றில் ஒன்றைச் சொல்லப்போனுல் கேட்பவருக்கு அலுப்புத் தட்டிப் போகும்; ரசிக்காது.

ஆனுல், நமது ராமாயணம், பாரதம், பாகவதம், பகவத்கீதை போன்றவைகளை எத்தனை தரம் கேட்டாலும், எத்தனை பேர் சொல்லக் கேட்டாலும் கேட்பவருக்கு அலுப்புத் தட்டுவதே இல்லை. இவற்றைக் கிரையாய்ப் போன விஷயம் என்று சொல்லத் தகுமா? காது குத்தல், காதில் வலி, காதில் சீழ் அல்லது ஜலம் கசிவு, காதில் ஒரே இரைச்சல், காது கேட்பதில்லை என்னும் விஷயங்களும் இவ்வினத்தைச் சேர்ந்தவை. கிரையாக ஒருநாளும் போகத் தகாதவை. ஏன்? அதில்தான் 'ஸ்பெஷலிஸ்டு'கள் வேறு இருக்கிறார்களே!

"ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து...." என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அதைப் போலத்தான் காது விஷயமும். இப்போது வந்தது அப்போது வந்தது என்று இப்படிச் சில நாட்களான பிறகு மழைக்கு வந்தது பனிக்கு வந்தது என்றாகி, நிரந்தரமான காதுக் குத்தல், அதைத் தொடர்ந்து காதில் சீழ் என்றாகி, இச் சீழும் சில சமயம் ஒழுகுவது, சில சமயம் நிற்பது என்று இப்படியாக இருந்து கடைசியில் வற்றாத ஒரு ஆகாசகங்கையாக மாறி விடும். இதனிடையிலோ அல்லது இதைத் தொடர்ந்தோ காதில் ஓயாத ஒழியாத ஒரு ஓங்கார சத்தம் கேட்கத் தொடங்கும். அதையும் தொடர்ந்து காது சிறிது 'மந்த' மாகி, அதற்கும் ஒரு 'பிரமோஷன்' வந்து...! கடைசியில் காது வைரக் கடுக்கனே, கம்மலோ பூணுவது தவிர வேறு எதற்கும் உதவாத (மோன) நிலையை அடையும். ஆகவே காது விஷயத்தில் உபேக்ஷை செய்யலாகாது.

கர்ண ரோகங்களுக்குக் காரணங்களைப் பொதுப்படையாகச் சொல்லப்போனுல் அதிசைத்தியம் ஏற்படுவது-அல்லது அத்யுஷ்ணத்தையடுத்துச் சிறிது சைத்தியம் ஏற்படுவதுதான் முக்கியமான காரணம் எனலாம். இது பருவம் காரணமாகவும் ஏற்படலாம். நம் அஜாக்கிரதை காரணமாகவும் ஏற்படலாம்.

அடுத்த காரணமாக அபிகாதம் எனலாம். எழுதிக் கொண்டிருக்கும் பேனு அல்லது பென்சிலின் நுனியைக் கொண்டு காதைக் குடைவது போன்ற காரணங்களால் அபிகாதம் ஏற்படலாம். சுண்டு விரலை விட்டுக் குடைவோர், துணியின் நுனியைத் திரி போல் சுருட்டி விட்டுக் குடைவோர், சாவி, காதுக் குடுக்கி, தென்னை ஈர்க்கு என்று இப்படிப் பல சாதனங்களைக் கொண்டு காதுகளைக் குடைவோர் மேற்சொன்னவிதம் காதினுள் ஒரு காயத்தை ஏற்படுத்தி, அதிலிருந்து காது குத்தல் முதலிய மாளாத நெடுங்காலத் திட்டமான கர்ண ரோகத்துக்கு வழிகோல நேரிடலாம். 'குத்திக் கெடுத்த காது' என்றொரு பழமொழி உண்டல்லவா? அதற்கு மேற்சொன்ன வகையில் நாமாகத் தேடிக்கொண்ட அபிகாதத்தினுல் விளைந்த கர்ண ரோகம் என்று பொருள் என்பது என் கருத்து. தலைடையில் அறை கொள்ளல், வீழ்தல் முதலிய காரணங்களாலும் இவ்வித அபிகாதம் ஏற்படலாம். எப்படி ஏற்பட்டாலும் அபிகாதம் ஒரு காரணம்.

அடுத்த காரணம் சுத்தக் குறைவு. தும்பு தூசி அசுத்த நீர் எது வேணுமானுலும் காதில் விழலாமே! அல்லது அசுத்தமான கைவிரலால் காதைக் குடைந்து அழுக்கைக் காதினுள் கொண்டு வந்து சேர்க்கும்.

இவ்விதமே குழந்தைகள் பெரியோர் இருபாலாருமே தெரியாமல் செய்யும் ஒரு காரணத்தைச் சொன்னுல் விஷயம் விளங்கிவிடும். ஒரு குழந்தைக்கு மண்டைக் கரப்பான், சிலசமயம் இது உலர்ந்தும் சிலசமயம் இதில் நீர் கசிந்தவண்ணமும் இருக்கும். குழந்தை இதைச் சொறிந்து சொறிந்து உடம்பு முழுவதும் பரவச் செய்து கொண்டு விடும். அப்படிச் செய்யும்போது காதைக் குடைந்து கரப்பானைக் காதின் உள்ளேயும் பரவச் செய்துவிடும். காதின் உள்ளே கரப்பான் புண் சென்று விடுமானுல் காதிலிருந்து ஒழுகத் தொடங்கும் சலமும் சீழும் ஜீவநதிபோலவும் ஆகாச கங்கை போலவுந்தான் முடியும். இப்படிக் குழந்தைகள் செய்வது ஒருபுறமானுல் பெரியவர்கள்

கதை என்ன? தலைப் பொடுகு இருக்கும். பல்லைக் கடித்துக் கொண்டு, கண்ணை இறுக மூடிக்கொண்டு முகத்தில் ஆயிரம் சுருக்கங்களுடன் 'வர்க் வர்க்' என்று அந்தப் பொடுகுத் தலையைச் சொறிந்து கொள்வதில் இவர்களுக்கு ஏற்படும் பிரும்மானந்தத்தைச் சொல்லி முடியாது. மணல் மழை பெய்வதுபோல் தலையிலிருந்து பொடுகுத் துகள் உதிரும்—இல்லை, இல்லை, பொழியும். அது காதினுள் மட்டுமா? மூக்கினுள்ளும் செல்லும். அடுத்து நிற்பவர் காது, மூக்கு, கண்களிலும் பறந்து செல்லும்.

காதினுள் பொடுகு சேர்ந்தால் போதும். பிடித்தது சனியன் என்று திடமாகச் சொல்லி விடலாம். இதைத் தொடர்ந்து, காதில் இனவும் நமைச்சலும் ஏற்படும். பிறகு ஏற்கெனவே தெரிவித்தவை ஒன்றுவிட்டொன்றாகப் பெருகிக்கொண்டே போகும்.

கடுங் கோடை; ஏரி குளம் ஆறு இவைகளெல்லாம் வற்றி வறண்டு போன நிலையில் இக்காதில் ஒழுகும் சீழ் நிற்கவில்லையே! என்று சிலர் சொல்லலாம். ஒழுகும் சீழ் நிற்காதது ஒருபுறம் இருக்கட்டும்; புதிய உபாதையும் காதில் ஏற்படலாம். வலது புறம் சரிந்து, தலையணி மேல் தலையைச் சாய்த்துக் கிடந்து ஒரு மணி நேரம் தூங்கி எழுந்தால் போதும். வியர்வை காரணமாக எப்படியோ காதில் சீதமும் நசநசப்பும் தட்டிவிடும். காதில் சொல்லத் தெரியாத அற்ப வேதனை. விரலை விட்டுக் குடையலாம் போலும், வேண்டாம் போலும் தோன்றும். இவை யாவும் ஒன்றிரண்டு தினங்களில் அதிகரிக்கும். பிறகு கேட்பானேன்? ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக முன் சொன்ன உபாதைகளெல்லாம் அறுபத்துமூவர் திருநாளில் சுவாமிகளின் புறப்பாடு போல் முடிவற்றவைகளாக உண்டாகி வரும். சிறு குழந்தைகளானால் இவ்விதம் ஏற்படும் கர்ண ரோகத்தால்... தூங்கிக் கொண்டே இருக்கும் குழந்தை சிணுங்கத் தொடங்கி, சிணுங்கல் அழுகையாகி, அழுகை அலறலாக முடியும். என்னவென்று தெரிந்துகொள்ளவே முடியாது. ஏதோ இரண்டு மூன்று வயதுக் குழந்தையானால் காது வலி என்று சொல்லக் கூடும். மூன்று நான்கு மாதக் குழந்தையானால்......? தனக்குத்தானே காதைக் கசக்கிக் கொள்ளும். ஆனால் நாம் காதின் பக்கம் கையைக் கொண்டுபோக விடாது. இப்படித்தான் குழந்தைகள் தங்களுக்குச் சுகவீனமுற்றுள்ள நிலையைத் தெரிவிக்குமென்று சாஸ்திரம்—அனுபவமுள்ளவர் சொல்வதும் இதுவே.

# பண்புக்கு அடிமை

காவேரிக் கரையை யொட்டியிருந்த பாடசாலை மண்டபத்தில் பெரிய வைபவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஆமாம், இத்தனை பெரிய கோலாகலத்தை இந்த ஊரே இது வரையில் அனுபவித்ததில்லை!

வெளிப்புறத்தில்-பிரபலமான இரண்டு ஜதை மேளக்காரர்கள் பெருமுழக்கம் விடுத்துக் கொண்டிருந்தனர். ஒரு மூலைப் புறத்திலிருந்த பாண்டு வாத்தியக்காரர்கள் வேறு போட்டா போட்டியில் இறங்கியிருந்தனர். இவர்களை யெல்லாம் சூழ்ந்து நிற்கும் சம்பந்தமில்லாத பல ரகக் கும்பல்கள். இவர்களைத் தவிர, உள்ளே அவசரமாக ஓடுவோரும், வெளியே வருவோருமான திமிலோகம் வேறு!

உள்ளே-ஆணும் பெண்ணுமாகக் குழுமியிருந்த பெருந்திரளினிடையே-ஒரு புறம் குதூகலப் பேச்சுகள், ஒருபுறம் அட்டகாச நகைப்புக்கள் - ஒருபுறம் கெடுபிடிகள்! இவையெல்லாம் போதாதென்று நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த 'காஸ்' விளக்குகளின் 'ஹோ' வென்ற நிரந்தர கோஷம் வேறு!

இவ்வளவும், எங்கேயோ கிடந்த ஒரு வாலிபனை வரவேற்று, ஊராரின் விழிகளுக்கு ஆடம்பரமாக அறிமுகமாக்கி, தம் பெண்ணையும் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த வைபவங்கள்! அதற்கான சம்பிரதாயச் சடங்குகளெல்லாம் அங்கே நடந்து கொண்டிருந்தன. இன்னும் சில நிமிஷங்களில் அவன் கிளம்பி விடுவான் பகட்டான உடைகளுடனும் கழுத்திலேறிய மலர் மாலைகளுடனும் காரிலேறிக் கொண்டு! இவற்றை யெல்லாம் பார்க்க, அங்கே ஊரே திரண்டிருந்தது!

பாடசாலை மண்டபத்தை யொட்டியிருந்தது மற்றொரு மண்டபம். நெடுங்காலமாக வெளவால்களுக்கே குத்தகைக்கு விடப்பட்டிருந்த அங்கே-சிலகாலமாக இரு ஆத்மாக்கள் இடம் பிடித்துக் கொண்டிருந்தன. அதில்-ஒருவருக்கு ஏறக்குறைய நாற்பத்திரண்டு வயதிருக்கும். முகத்தில் அடர்த்தியான தாடி வளர்ந்திருக்கது. ஆனால் அதில் இன்னும் வெள்ளி முலாம் ஏறவில்லை. பார்ப்பதற்கு வாட்ட சாட்டமாக இருந்த ஆத்மா, உலகத்தை இன்னும் முற்றும் துறந்தவராகவும் தெரியவில்லை. மற்றொருவர் இன்னும் சற்று முதிர்ந்த ஆத்மா. உலகப்பற்று முழுவதையும் துறந்தவரே போன்று, தலையை முண்டனம் செய்து கொண்டிருந்தார் அவர்.


இவர் எந்த ஊரோ; அவர் எந்த ஊரோ-என்பதைப் பற்றிய பிரச்னைகள் அவர்களுக்குள்ளாகவே கூட எழுந்ததில்லை. ஏதோ, பகல் சஞ்சாரங்களை முடித்துக் கொண்டு, இரவில் அங்கே வந்து கூடுவார்கள்; விடிந்ததும் பிரிவார்கள். இவ்வாறு ஏற்பட்டிருந்த பழக்கம் தான் அவர்களுக்குள்.

"என்ன, சுவாமிக்கு நிஷ்டையோ?" என்றார் தூணில் சாய்ந்தபடி யிருந்த மொட்டை சுவாமி தம் எதிரிலிருந்த மற்றவரை நோக்கி.

மற்றவர், 'ஊம்' காரம் கொடுத்து விட்டு மௌனமானார்.

"என்ன, இந்த அமர்க்களமெல்லாம் சுவாமிக்குக் காதிலே ஏறுதா?"

துரோணன்



மொட்டை ஸ்வாமி இலேசாக நகைத்தபடி கேள்வியை விடுத்தது.

மற்றவரிடமிருந்து மீண்டுமொரு 'ஹும்' காரம்தான் வெளியாயிற்று.

"ஏதோ, பெரும்புள்ளிகள்தான் போலிருக்குது! மாப்பிள்ளையழைப்பு நடக்குது. வர்ரா? நாமும் போய் ஒரு ஓரத்திலே நின்னு பார்த்துட்டு, அப்படியே—"

மொட்டை ஸ்வாமியின் வார்த்தை முடிவதற்கு முன்பே, மற்றவரிடமிருந்து 'களுக்' கென்ற நகைப்பு வெளியாயிற்று. அந்நகைப்பில் ஏளனம் மிகுந்து ஒலித்தது!

"இதென்னு—சாமி என்னே நையாண்டி பண்ணுது! ஏதோ, அபூருவமா கிடைக்கிற பிட்சையை விடுவானேன்னுதான்—ஆண்டிக்கி ஆண்டி பணிவு தோசம் கப்புட்டு வைச்சேன்—" பெரிய ஸ்வாமியின் வார்த்தைகளில் குறையும் கோபமும் பிரதிபலித்தன.

"ஸ்வாமி! நீர் போய் வாரும்! இந்தக் கட்டைக்கு அதெல்லாம் பிராப்தமில்லே. இது—பரம்பரை ஆண்டியுமில்லே; பஞ்சத்துக்கு ஆண்டியுமில்லே. பண்புக்குத்தான் ஆண்டி!" என்றது சின்ன ஸ்வாமி சிறிதே உஷ்ணமாக. அதற்குமேல் மொட்டை ஸ்வாமி தாமதிக்கவில்லை. வ ய ண மா ன உண்டி வகைகள் நெஞ்சில் ஊறவும். உந்தி நிரப்ப ஓடி விட்டார் அந்தத் துறவி!

பெரியவர் சென்று வெகு நாழிகை வரையில் மண்டபத்திலேயே அமர்ந்திருந்தது சின்ன ஸ்வாமி. அதன்பின்னர், வலுவடைந்திருந்த மேளச் சத்தங்களும் ஆகாய வட்டத்தில் கிறீச்சென்று படபடத்த அவுட்டு வெடிகளும் அவரது கவனங்களைப் பற்றியிழுத்தன.

'இப்படித்தானே தனக்கும் ஒருநாள்—'

சின்ன ஸ்வாமி பரபரப்புடன் எழுந்தார். தலைமாட்டிலிருந்த மூட்டையைத் தூக்கி மண்டபத்து மேல் வளையில் பதுக்கி வைத்தார். நாலடி நடந்தார். ஆனால், மூட்டையைப் பற்றின யோசனை மறுபடியும் முளைக்கவே திரும்பினார். "அம்மூட்டைக் குள்ளிருக்கும் பொக்கிஷம் — பஞ்சாங்கம். பத்திரகிரியார் பாடல், காவடிச் சிந்து, வாய்ப்பாட்டுக் கணிதம்—எல்லாவற்றையும் சேர்த்தால் கூட மூன்று ரூபாய்க்கு மேல் பெறுமானமிராது. இருந்தாலும். இந்தச் சிறு பேரம்தானே இவரது அன்றாட வாழ்வை 'இரப்பது இழிவு' என்ற பண்புக்கழிவில்லாது காப்பாற்றி வருவது! இதை யாராவது எடுத்துப் போய் விட்டால்?"—

பதுக்கிய மூட்டையை மீண்டுமெடுத்துத் தோள்புறத்தின் கீழ் இடுக்கிக் கொண்டு கிளம்பினார் சின்ன ஸ்வாமி.

மாப்பிள்ளையழைப்பு ஊர்வலம் இரண்டு சந்துகளைக் கடந்து பெரியவீதி முச்சந்திக்கு வந்திருந்தது. நாதஸ்வரக்காரர்கள் ஏதோவொரு ராகத்தை யெடுத்து விஸ்தாரமாக ஆலாபனம் செய்து கொண்டிருந்தனர். சுற்றி நின்ற கூட்டம் மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தது. சந்தனம், மல்லிகை, நறுமணங்களின் வாடை சின்னசாமியின் உடலைப் புல்லரிக்கச் செய்தது. அவ்வாத்மாதான் இன்னும் - முற்றிலும் துறந்த பரிபக்குவத்துக்கு வந்தபாடில்லையே! அடர்ந்து நீண்டிருந்த தாடியை உருவியபடி தம் உடை நிலையை நோட்டமிட்டார் ஸ்வாமி. முழங்காலை மூட்டியிருந்த ஒரு பழுப்பேறிய உடை. மேலே போர்த்தியிருந்த கதர்ச் சாக்கிலும் அநேகம் துவாரங்கள். ஆமாம், தாம் இப்போது எப்படி இருந்தாலென்ன!

ஊர்வலக் காரின் முன்புறத்திலும் பின்புறத்திலும் வகை வகையான கும்பல்கள். எல்லாம் யார் யாரோ!

ஸ்வாமியின் பார்வை, காரில் மாப்பிள்ளையாக அமர்ந்திருந்தவனின் மீது விழுந்தது. 'ஆகா! சரியான ஆணழகன்!' என முணுமுணுத்தன அவரது உதடுகள். அங்கே விழுந்த பார்வையை மீட்கவும் மாட்டாதிருந்துவிட்டார் சற்று நேரத்துக்கு. ஆனால், சில விநாடிகளுக்குப் பின், 'களுக்' கென்ற சிரிப்பு அவரையறியாமலே வெளிவந்தது.

'இந்தப் பேரழகன் கையால் நாளைக்குத் தாலி முடியவிருக்கும் அந்தப் பெண் எப்படியிருக்கிறளோ? சந்தேக மென்ன? ஏதோவொரு கரிக்கட்டையோ, அல்லது ஓர் உலர்ந்த சருகோ தானிருக்க முடியும்! இவ்வுலகில் இத்தகைய இணைப்பை யேற்படுத்துவது தானே அந்தக் கடவுளின் செய்கையாக விருக்கின்றது? பாவம் - மாப்பிள்ளே!' - இவ்வங்கலாய்ப்பான எண்ணம்தான் ஸ்வாமியை நகைக்க வைத்தது!

'அவள் எப்படி இருந்தாலென்ன? இந்த அழகனுக்கு மாலேயிடப் போகும் அவள் ஒரு பாக்கியசாலி யென்பது மட்டும் நிச்சயம்!' - ஸ்வாமியின் மனத்தில் இப்படி யொரு விசித்திரத் தீர்மானமும் உருவாயிற்று. இவற்றைத் தொடர்ந்து அவரது பார்வை, காரின் பின்புறத்திலிருந்த பெண்கள் குழுவை நோக்கித் திரும்பிற்று. எவ்வளவு விதவிதமான பகட்டான உடைகள்; உயர்ந்த அணிகள்! அவர்களிடையே கையில் வெள்ளித் தாலமும் பன்னீர்ச் செம்பும் ஏந்தியபடி சென்றுகொண்டிருந்த உருவத்தைக் கண்டதும் ஸ்வாமியின் விழிகள் சற்றே உருண்டன. பின்னர் நிலைத்தாற்போல் நின்றன. அதன் பின்னரோ பாதாதி கேசம்வரை அவ்வுருவை ஊடுருவி விழுங்கின. அவள்...அவள்...? அவள்தானே?

இடுக்குற்று நின்ற ஸ்வாமி, தமது வெறித்திட்ட விழிகளை அங்கேயே பதித்துவிட்டார். அவள் அணிந்திருந்த பகட்டான சேலையும், கழுத்தை அடைத்து மறைத்திருந்த அணிவடங்களும் கைகளைக் கவ்வியிருந்த பொன் வளையல்களும் அவரை மூச்சு விடவும் மறக்கச் செய்து விட்டன. அதோ அவள் மற்றொரு ஸ்திரீயிடம் நகைத்தபடி பேசிக் கொண்டிருக்கும் குரலும்கூட மெல்லியதாக ஆனால் தெளிவாகக் கேட்கின்றதே.


ஸ்வாமியின் இதயக் கூட்டுக்குள் சூடேறிவிட்டது. ஆமாம்! சந்தேகமேயில்லை அவள்—அவளேதான்! அவள் இங்கே எங்கு வந்தாள்?

'அட மானங்கெட்ட வாழ்வே!' ஸ்வாமியின் பற்கள் நறநறவென உராய்ந்தன. மறுகணம் 'தூ!' எனக் காறியுமிழ்ந்தபடி துள்ளிமறைந்து விட்டார். நல்லவேளையாக, இந்த ஆத்மாவின் சேஷ்டைகளைக் கவனிக்கத்தக்க நிலையில் அங்கு எவருமில்லை!

'சடபட' வென்று சரவெடிகள் முழங்கின. இருளை நோக்கி வந்து கொண்டிருந்த ஸ்வாமி

யின் இதயமும் இவ்வாறு தாம் பொரிந்து கொண்டிருந்தது.

'அடி பாதகி! தான் ஒரு புருஷனில்லாக் கட்டையென்ற சொரணை கொஞ்சமும் இல்லையே? கொண்டவனைப் பிரியும் உண்மையான குலமகளின் மனம், குதூகலத்துக்கும், ஆடம்பரத்துக்கும் எவ்வாறு மனம் ஒப்பும்? இம்மாதிரியொரு கலியாண விழாவில் கலந்து கொள்ளத்தான் எப்படி மனம் கொள்ளும்? அன்றைக்கு எப்படியிருந்தாளோ அப்படியே தானே இன்றைக்கு மிருக்கிறள்? மனத்தூய்மையற்ற மிருகம்!' சின்ன சுவாமியின் இதயக் குரல் இவ்வாறெல்லாம் பொரிந்து கொட்டிக் கொண்டிருந்தது.




"இந்தாரும்! உமது கேள்விக் கெல்லாம் பதில் சொல்ல இது நேரமில்லே. இதோ — இதில் உள்ள கலியாண விலாசத்திற்கு வந்து சேரும். அங்கே உமக்கு எல்லாம் சௌகரியமாக நடக்கும்!—"

இவ்வாறு கிண்டலும் கேலியுமாகக் கூறிவிட்டு, தன்னுடைய சட்டைப் பையிலிருந்த கலியாணப் பத்திரிகையை யெடுத்துக் கொடுத்து விட்டு மறைந்தார் அவர்.

ஹூம்! மனிதனின் வெளித் தோற்றத்திற்கு உலகம் வைக்கும் மதிப்புத்தானு இது! ஆனல், சுவாமிக்கு வேண்டியதும் இதுதானே?

சந்தின் முனைக்கு வந்து சேர்ந்த சுவாமி சற்றே நின்றார். மனத்துள் மற்றொரு புதுமையான ஞாபகம் தட்டுப்பட்டது. மீண்டும் திரும்பி, ஊர்வலம் போய்க் கொண்டிருக்கும் திசையை நோக்கிச் சிறு வாணம்போல் சென்றார். மனத்தில் எழுந்துள்ள சந்தேகங்களை யாரைக் கொண்டு தீர்த்துக் கொள்ளுவது? ஆண்கள் கூட்டத்தின் ஒவ்வொரு முகத்தையும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு சென்றார். ஒருவராவது அவரது கருத்திற்குகந்தவராகத் தெரியவில்லை! கடைசியாக ஒரு எளியவுடைக்காரர் கிடைத்தார். நல்லவேளையாக அவரது சந்தேகங்களுக்கு ஓரளவு விடையும் கிடைத்து விட்டது!

"பெண் வீட்டுக்காரர்கள், பிள்ளை வீட்டுக்காரர்கள் – இருவருமே இவ்வூருக்குப் புதியவர்கள்தாம்" என்றார் அவர்.

"பெண்ணுக்குத் தகப்பனர்?"

"அவர் எங்கேயோ கிடக்கிறர்! யாழ்ப்பாணத்திலிருக்கிறர் என்று கேள்வி. அவர் கல்யாணத்துக்கு வரவில்லே!"

"பின்னே?"

"பெண்ணுக்குத் தாயாரும், மாமாவும் தான் இந்தக் கலியாணத்தை முன்னின்று நடத்துகிறர்கள்."

"ஓகோ!" இவர்கள் – பரம்பரைப் பணக்காரர்களோ?" சுவாமியின் வாய் தவறித்தான் இந்தக் கேள்வி பிறந்தது. பாவம், அவர்மேல் பிசகில்லே. உட்புறத்தின் பொருமல் அது! இது வரையில் பொறுமையாகப் பதில் கூறிவந்த அந்த மனிதர் சுவாமியை ஏறஇறங்க உறுத்து விழித்தார். அப்பார்வை, 'நீ யார், உமக்கு ஏன் இந்தக் கவலைகளெல்லாம்?' என்று கேட்பது போலிருந்தது.

"இல்லே. எனக்குத் தெரிந்தவர்களாக இருக்கலாமோ வென்றுதான் கேட்டேன்—" எனக் குழைந்து மழுப்பினர் சுவாமி.

அங்கு துவங்கிய பெருநடையைக் காவேரிக் கரைச்சந்து வந்துதான் முடித்தார் சுவாமி. தெரு விளக்கின் சமீபம் வந்ததும், பத்திரிகையைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினர். ஒரு விநாடிப் பொழுதிற்குள்ளாக மின்சார சக்தி அவருடலுக்குள் பாய்ந்தது போலிருந்தது.

'என்னது—என்னது? குழந்தை விமலிக்கா இந்தக் கலியாணம்? என் குழந்தை—ஆமாம்—குழந்தைதான் விமலி!'—இவ்வாறு பிதற்றிக் கொண்டே பத்திரிகையை உறுத்து விழித்தார் சுவாமி. 'சிவ சுவாமியின் புதல்வி விமலி' என்ற விளக்கமான கொட்டை யெழுத்துக்களைக் கண்டதும் அவரது விழிகளில் நீருற்று பெருகிவிட்டது. கால்கள் திசையுணராது மண்டபத்தை நோக்கிச் சென்றன. ஆனல் மனம் மட்டிலும் பதினறு ஆண்டுகளுக்கு முன்னல்—பல காதம் மைல்களுக் கப்பால் பறந்து கொண்டிருந்தது.

• • •

பதினறு வருஷங்களுக்கு முன்—இன்றைய ஆண்டியான சின்னசுவாமி, காக்கி உடையும், மிடுக்கான பார்வையும் வீறு கொண்ட நடையுமாகவிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் துரை! கடமையில் தவறுதவராகவும், கண்டிப்பில் குறையாதவராகவும் தூய்மையில் தலைசிறந்தவராகவும் விளங்கி வந்தவர். அவரது இத்தகைய இயற்கை குணங்களால், பெரும்பாலோருக்கு அவர்மீது நன்மதிப்புகளும் வரம்பு மீறிய சலுகை பெறச் சென்ற சிலருக்கு வெறுப்பும் ஏற்பட்டிருந்தன. ஒரே மனிதன் உலகத்தின் முழு அன்பையும் பெற முடியாதல்லவா? அவரது நற்குணங்களையும், பதவியையும் பற்றிக் கேள்வியுற்ற பெண் படைத்தோர் ஒவ்வொருவராகத் தேடிவந்து தங்களது கோரிக்கையை ஈடேற்ற முற்பட்டனர். அவர்களில் ஒரு தனவந்தரின் அருமை மகள்தான் சுமதி. சுமதிக்கும், சிவசுவாமிக்கும் திருமணம் நடந்தேறியது.

சிவசுவாமி தமக்கு வாய்த்திருக்கும் மனைவியின் பேரெழிலைக் கண்டு கண்டு பரவசமுற்றார். தமது முரட்டுக் கரியுடம்புக்கும், அவளது எழில் தோற்றத்துக்கு முள்ள ஏற்றத் தாழ்வுகள் மனத்துள் சுழலுகையில், அவர் தம்மைப் போன்ற பெரும் பாக்கியசாலியே இருக்க முடியாதென்ற இறுமாப்புக்கு உட்பட்டுவிட்டார். ஏன், பழகியவரையில் அவளது அன்புக்கும் குறைவில்லை. இன்பம் மிகுந்த இல்லற வாழ்க்கை ஓராண்டு கழிந்த பின் சுமதி ஒரு பெண் குழந்தைக்குத் தாயாரானாள். பின்னும் இரண்டு ஆண்டுகள் நிமிஷமாகக் கழிந்தன.

சில காலமாகப் போலீஸ் இலாகாவில் கெடுபிடிகள் கடுமையாக இருந்தன. காங்போரையெல்லாம் அரசாங்கச் சதிகாரர்களாகக் கருதிய காலம் அது. அவர்களைப் பிடிக்கவும், தண்டிக்கவும் ஏற்பட்டிருந்த பொறுப்புக்களால் சிவசுவாமிக்கு அடிக்கடி வெளியூர் முகாம்களும் ஏற்பட்டிருந்தன.

ஒரு நாள் இரவு எட்டு மணி சுமாருக்கு வீடு திரும்பினார் சிவசுவாமி. வீட்டின் உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. வாசற் கதவின் ஓரத்துக்கு அவர் வந்தபோது உட்புறத்தில் ஒரு புதிய ஆண் குரலின் ஒலி கேட்டு அதிசயமுற்று நின்றார். ஆண் குரலின் கேலிக்கை மிகுந்த நகைப்பும் அத்துடன் இழைந்த சுமதியின் குரலும் அவரை மிகுந்த வியப்புக்குள்ளாக்கின. இத்தகைய புதுக் குரலையுடையவர் அவரது உறவினருள் எவருமே இருந்ததில்லை. கதவைத் தட்டினார். உள்ளே முழங்கிய அரவம் திடீரென அடங்கிச் சிறு கசமுசப்புக்கள் கேட்டன. அதன் பின்னர் மூச்சின் ஓசையுமில்லை. சிறிது நேரத்துக்குப் பின் கதவைத் திறந்த சுமதியின் முகத்தில் கலவரம் பிரதிபலித்தது. அப்போதைய நிலையில் அவர் அவளை ஒன்றும் விசாரிக்கவில்லை. அவளாகவே ஏதாவது கூறுவாளென்ற சோதனையுள்ளத்துடன் காத்திருந்தார். அதுவும் நடைபெறவில்லை

சிவசுவாமியின் மனத்தில் தம் அழகு மனைவியைப் பற்றிய சந்தேக வித்து அன்றுதான் முளைத்தது. அதுவே நாளடைவில் வளருவதற்கான சூழ்நிலையில் அவரது உத்தியோக வாழ்வும் அமைந்து கொண்டது. அநேகம் தடவைகள் ஏறக்குறைய இதேபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. கடைசியாக ஒருநாள், அவளுடன் கள்ள நட்புக் கொண்டிருந்தவன், புழக்கடை வழியாகச் சென்று கொண்டிருந்ததை நேருக்கு நேராகக் கண்டுவிட்டார். ஆகா! அவனது வனப்பும் தோற்றமும் எங்கே—தாம் எங்கே?

சிவசுவாமி பலநாள் மனத்துடன் போரிட்டார். அவரது மனம் முறிவுற்று விட்டது! தமது இல்லறம் பொருத்தமில்லா இணைப்பாக அமைந்து விட்டது குறித்து இறைவனைச் சபித்தார். புறத் தோற்றத்துக்கு மயங்கி விட்ட தம்மையும் வெறுத்தார்! 'கூறாமல் துறவுகொள்' என்ற தாரக மந்திரம் அவரது இதய அரங்கில் சுழன்று சுழன்று அறைந்தது. முடிவாக, இரு துண்டுக் காகிதங்களை எடுத்து ஒன்றைத் தம் இலாகாவுக்கு ராஜிநாமாவாக எழுதிவிட்டார். மற்றொன்றில், பட்டணத்து அடிகளாரின் பொன் வாக்கியங்களைப் பொறித்து வீட்டில் வைத்தார். பன்னெடுங் காலத்தின் பழைமைப் பொக்கிஷம் தம் இல்லறத்தில் மாய்ந்து விட்டதன் உத்வேகம் தாளமாட்டாது, பண்புக்கு ஆண்டியாகி வெளியேறினார் இன்ஸ்பெக்டர் சிவசுவாமி!

உற்றாரும் உறவினரும் சலிப்புறாமல் தேடிச் சலித்து விட்டனர். சில மாதங்களுக்குப் பின், யார் மூலமாகவோ, அவர் ஈழநாட்டில் இருப்பதாகக் கேள்வியுற்றனர். ஆனால், கனிந்த பழம் மீண்டும் காயாக முடியுமா?

* * *

“என்ன.....சுவாமி இன்னமும் நிஷ்டையிலேதான் இருக்குதோ? சரியாப் போச்சுது!” மொட்டை சுவாமியின் குரலும் காலோசைகளும் உரத்துக் கேட்டன. உந்தி நிரம்பியிருந்ததின் எக்களிப்பும் ஏப்பமும் தொடர்ந்து வெளியாயிற்று அதனிடமிருந்து!

ஒருக்களித்துக் கிடந்த சின்னசுவாமி பதிலே கூறவில்லை. திடுக்குற்றதுபோல் எழுந்து, 'வேகு வேகெ'ன நடக்கத் தொடங்கி விட்டது. மூட்டையைப் பற்றின கவலையும் கூட இப்போதில்லை. இவ்வளவு நேர நிஷ்டையில் ஏற்பட்டிருந்த ஒரு புது வேகம்!

மறு தினம்—

கலியாண வீட்டின் எதிர்ப்புறத்தில் எவ்வளவோ வகையான கூட்டம் குழுமிக் கிடந்தது. ஓரத்து மாட்டுக் கொட்டிலில் நின்று கொண்டிருந்த சின்ன சுவாமிக்கு, நாழிகையாக ஆக அங்கே நிற்க மனம் கொள்ளவில்லை.

சற்றுத்தூரத்திற்கப்பால், சம்பந்திகள் தங்கியிருந்த ஜாகையை நோக்கி நடந்தார் சுவாமி. அவ்வீட்டின் எதிர்ப்புறத்திலிருந்த பாழும் மனையின் குறட்டுக்கு வந்து ஒதுங்கிக்கொண்டார். இங்கே வந்து சேர்ந்தும் 'மனக் குரங்கின்' சேஷ்டை அடங்கினபாடில்லையே?—

கலியாண வீட்டிலிருந்து மேளம் முழங்க, கரம் கோத்த புதுமணத் தம்பதிகள், சுற்றமும் சூழச் சம்பந்திகள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

சுவாமி தம் கண்களைக் கசக்கிக் கொண்டு நோக்கினார். அவரது உடலும் கரமும் துடித்தன. கால்கள் பூமியை விட்டு எழும்பி எழும்பித் தணிந்தன. வாய் அசைவு கொண்டது.

'விமலி! இவள் - விமலிதானா? பண்புக்கு ஆண்டியாகி நிற்கும் இந்தச் சிவசுவாமியின் புதல்விதானா?'

'விமலி! விமலி! நீ இந்த ஆண்டியின் மகளாக இருக்க வேண்டாம்! கரம் பற்றியவனின் பத்தினியாகவே இரு!'


சுவாமியின் விழிகளிலிருந்து நீர் அருவியாகப் பெருக்கெடுத்தது. உடல் குலுங்கிற்று.

கெட்டி மேளம் முழங்கிற்று. புதுத் தம்பதிகள் உள்ளே சென்றுவிட்டனர். அப்போது தாம், சுவாமிக்குத் தமது மடியில் வைத்திருந்த ஒரு பொருள் நினைவுக்கெட்டிற்று. பரபரப்பாக அதைக் கையிலெடுத்தார். ஒரு வெள்ளைநிறக் காகிதத்திற்குள் மடித்து வைத்திருந்த சிறு பொட்டலங்கள் இரண்டையும் எடுத்துவிட்டுக் காகிதத்திலிருந்த வரிகளை உற்று நோக்கினார். அது - அவரே எழுதியதானாலும், அப்போது பார்க்கத் தாண்டிற்று மனக் குரங்கு! 'குழந்தை விமலி! தாயைப் போன்ற மகளாகாதே! பண்பைக் காத்து

# ஆயுள் இன்ஷ்யூரன்சு மூலம் சேமிப்பு! அருமையான வருங்காலப் பாதுகாப்பு!!



உங்கள் செலவினங்களிலே மிக முக்கியமானவை இவை இவை என்று நீங்கள் பகுத்துப் பார்த்தது உண்டா?



உங்கள் வாழ்வின் இன்றியமையாத் தேவைகள் எவை எவை? உணவு, உடை, உறையுள், உரிய கல்வி ஆகியவைதானே! அவற்றோடு ஆயுள் இன்ஷ்யூரன்சையும் ஏன் சேர்க்கக் கூடாது? அதனால் விளையும் பயன்களை ஏன் எண்ணிப்பார்க்கக் கூடாது?



அது உளநிறைவோடு கூடிய உங்களது முதுமைக்காலத்திற்கு வகை செய்யும். குடும்பத்தினர் உங்களை இழக்க நேரிடின் உங்கள் அன்பிற்கினியவர்களுடைய இன்றியமையா வாழ்வுத் தேவைகளுக்கு வழி வகுக்கும்



உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் உறுதியாக ஆயுள் இன்ஷ்யூரன்சு. பெறவேண்டும் நீங்கள்!

## ஆயுள் இன்ஷ்யூரன்சு

—நீங்கள் இன்ஷ்யூரன்சு செய்யும் நன்னாளே நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாம்.

EP/LIC/SZ/ 5

வாழு!" என்ற இரு வரிகளையும் பல தடவைகள் உச்சரித்தது அவரது நாவு. மீண்டும் பழையபடியே பொட்டணத்தை மடித்து மடியில் செருகிக் கொண்டார். மகளுக்கு அளிக்கவிருந்த பரிசு அது!

அன்றிரவு ரயில்வே ஸ்டேஷனில்—பிளாட்பாரத்தைவிட்டு மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது வண்டித் தொடர். ஆம், அன்றைய புதுமணத் தம்பதிகளின் வாழ்வுப் பயணம் தொடங்கியது. ஜன்னல் வழியே தலை நீட்டிய அவ்விளம் முகங்களிரண்டிலும் பிரிவுத்துயரும் புதுமை மகிழ்ச்சியும் ஒன்றாய்ப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. வெளியிடமிருந்து வாழ்த்துக்களும் உரத்து வெளியாகிக் கொண்டிருந்தன.

அப்போதுதாம் மேல்மூச்சும், பெரும் சுவாசமும் உளுப்பிய நிலையில் வந்து சேர்ந்திருந்தார் சுவாமி. பாவம்! தமது அந்தரங்க வாழ்வையும், பரிசையும் பெற்ற மகளுக்களிக்க அப்போதும் ஏமாந்துதான் விட்டார்! வெளிப்புறத்துத் தடுப்புக் கம்பியின் ஓரம் அவர் வந்து சேருவதற்கும், ரயில் தொடர் ஊர்ந்து செல்லுவதற்கும் பொருத்தமாகி விட்டது. உள்ளம் பதற எம்பினார். ஜன்னல் வழியே தெரிந்துகொண்டிருந்த இருமதிகளையும் கண்டார். அவ்வளவுதான்—பெற்ற தந்தைக்குக் கிடைத்த பாக்கியம்! ஒரு இமைப் பொழுதிற்குள்ளாக அவர்களைப் பிரித்து விட்டதின் துயரக்குரலைத் தொடர்ந்து வெளியாக்கிக் கொண்டே சென்றது ரயில்.

இரும்புக் கிராதியின் ஓரம் சிலையாக நின்ற சுவாமியின் விழிகளிலிருந்து இரண்டு முத்துக்கள் உதிர்ந்தன. அது எல்லையற்ற துயரமோ, ஆனந்தமோ—அது அவருக்கே புரியவில்லை.

பிரயாணக் கூட்டமெல்லாம் கலைந்து, ஸ்டேஷன் வெறிச்சோடிவிட்டது. அன்றுதந்து நோக்கிய வெறிச்சிட்ட பார்வையுடன், வெளிப்புறத் தாழ்வாரத்தில் உலவிக் கொண்டிருந்தார் சுவாமி. அடுக்கடுக்காக இருந்த பல அறைகளில், யாராரோ அதிகாரிகள் கூடியிருந்தனர். கோடிமூலையிலிருந்த அறையின் சமீபத்துக்கு அவர் வருகையில்—அங்கே உட்புறத்தில் ஒரு விவாதம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அது—உயர் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறை. சுவாமி நின்றபடி செவிமடுத்தார். பின்னர் வசிதிச் சட்டங்கள் பொருத்தியிருந்த ஜன்னல் கதவை இலேசாக விலக்கிவிட்டு உள்ளே நோக்கினார்—

அங்கே—அவர் உலகமறியத் தொட்டுத் தாலி கட்டிய மனைவியான சுமதி நின்று கொண்டிருந்தாள். ஆம். அவளேதான்! ஆனால், அவள் அப்போது—துறவுக்கோலம் பூண்ட மணிமேகலையை யொத்திருந்தாள்! முதல் நாள் அவளது உடலைச் செழிப்பித்திருந்த பகட்டான உடை, அணிகள் ஒன்றையும் இப்போது காணோம். அவளது எளியவுடையில் ஏதோ வொரு தூய்மை ஒளிவிட்டுக் கொண்டிருந்தது!

அவளெதிரே, அவன்—அவன்தான்—பதினாறு வருஷங்களுக்கு முன்பு அவர் கண்டிருந்த 'அவளது பண்பு கொன்ற கள்ளன்' நின்று கொண்டிருந்தான். அவனது முகம், தோற்றம் எல்லாம் மாறுதலடைந்திருந்த போதிலும், அவன்—அவனேதான்!

அவள், அவனை நோக்கிக் கெஞ்சும் குரலில் கூறிக் கொண்டிருந்தாள்: "அண்ணா! என்னை மன்னித்து என் போக்கில் விட்டு விடுங்கள். என் குழந்தையை நீங்களும் மதனியும் கண்ணுக்கு மேலாகக் காத்து வளர்த்தீர்கள். நீங்களே அவளுக்கு உயர்வான வாழ்வையுமளித்து விட்டீர்கள். நானும் உங்கள் வார்த்தையைத் தட்டாது இங்கு வந்து, இந்த மூன்று நாட்களாக, ஆடம்பரங்களைச் சுமந்து கொண்டு, ஏற்படாத மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டு நடித்துத் தீர்ந்தேன். குழந்தை நல்வாழ்வு கொள்ளச் சென்று விட்டாள். இனியும், என் தெய்வமில்லாத பங்களாவும், பெரு வாழ்வும் எனக்கு எதற்கு? நான் போகிறேன். என் சிறு குடிலுக்கு..."

அவன் பரபரப்படைந்தான். "சுமதி! சுமதி! பாவி நான்—ஏதோவொரு உண்மையை மறைக்குமாறு 'உன்னைத் தூண்டிய தன் விளைவுதானே, உன் வாழ்க்கை பாழாகி விட்டது? வட நாட்டிலிருந்து நான், உன் திருமணச் செய்தியைக் கண்டு உள்ளம் பூரித்தேன். அதே சமயம், வெள்ளையர் ஆட்சியின் சதிகாரனுக் கருதப்பட்டுக் கண்காணிக்கப்பட்டேன். முடிவாக, உன்னைக் காணும் ஆவலுடன், மறைந்து ஓடி வந்தேன். அப்போதைய நிலையில், உன் கணவரின் கடமைக் கரங்களுக்குள் பிடிபட்டிருந்தால், உன் வாழ்வு இவ்வாறாகி யிருக்குமா?..."

"அண்ணா போனதைப் பற்றி இனி வருந்தி என்ன பயன்? அவர் எங்கேயோ இருந்தவண்ணம் என் நெற்றியின் திலகத்தைக் காத்துக் கொண்டிருக்கிறார். அவருள்ளத்தில் என்னைப் பற்றிய மாசு ஒருநாள் நீங்கிவிடும். அப்போது வருகிறேன் உன்னிடம். இப்போது என்னை மன்னித்துவிடு அண்ணா!" இவ்வாறு கூறிக் கொண்டே அவனை வணங்கி எழுந்தாள்.

சுவாமியின் செவிகள் இதற்குமேல் கேட்க ஒப்பவில்லை. நாலடி நகர்ந்து சென்றார். அவரது விழிகள்—விழிகளாகவா இருந்தன? காட்டாற்று நீர்வீழ்ச்சியின் பெருக்கைக் கொண்டு விட்டன! அதிலிருந்து பெரும் கங்கை பெருகிற்று—பெருகிக் கொண்டேயிருந்தது!

சட்டென ஒரு மின்சார சக்தி அச்சுவையின் மூலம் அவருடலில் பாய்ந்தது. மடியிலிருந்த பொட்டணத்தைப் பரபரப்பாக எடுத்தார். அதன்மேலிருந்த வெள்ளைக் காகிதத்தை—ஆம், அவர் எழுதியிருந்ததை—சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் காற்றில் வீசினார். பொட்டணத்தை யெடுத்து, ஜன்னல் வழியே அவளது காலடி நோக்கி வீசினார்!

உட்புறத்தில் விழுந்த பொருள் அவர்களைத் திகைக்கச் செய்தது. அவள் அதை யெடுத்துப் பிரித்தாள். அதனுள்—ஓர் மஞ்சள் கிழங்கும், குங்குமப் பொடியு மிருந்தன! இவ்வரத்தை யளித்த தெய்வம் யாரென்பதை யறிய, அவர்கள் பரபரப்புடன் வெளியே வந்தனர். அங்கே யாருமில்லை!

பண்புக்கு அணிபாக இருந்த சுவாமி, இருளில் மறைந்தபடி காத்திருந்தார் அவள் வரவுக்காக!

# கண்கள் உறங்காவோ?

**அத்தியாயம் 8**


## நாம் ஒன்று நினைக்க...

நேற்று நடந்ததுபோல் இருக்கிறது; ஆனால் விளையாட்டுப் போல் ஒரு மாதம் ஓடி விட்டது. காலந்தான் எவ்வளவு வேகமாகப் பறக்கிறது!

அன்று சுந்தரத்தை, "வெளியே போங்கள்!" என்று விரட்டி விட்டு வீணா எப்படி மேசைமீது தலையைச் சாய்த்திருந்தாளோ அவ்வாறே இன்றும் தனது ஆஸ்பத்திரியில் மேசைமீது தலையைச் சாய்த்திருந்தாள். அப்பொழுது இரவு ஒன்பது மணி இருக்கும். அவள் தலைக்கு உயரே பெட்ரோமாக்ஸ் விளக்கு ஒன்று ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

முன்பெல்லாம் அவளுடைய ஆஸ்பத்திரி காலையில் மட்டுமே திறந்திருக்கும். ஆனால் இப்பொழுது அது எப்பொழுதும் திறந்திருந்தது. ஆம், இந்த ஒரு மாதத்துக்குள் வீணாவின் ஆஸ்பத்திரி சில மாறுதல்களுக்கு உள்ளாகியிருந்தது. ஏற்கெனவே நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறும் பொருட்டு அங்கே சில கட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஆனால் அவ்வாறு சிகிச்சை பெறும் நோயாளிகளைக் கவனித்துக் கொள்ள நர்ஸ் யாரையும் அமர்த்திக் கொள்ளாத காரணத்தால், அந்த வசதி பயன்படுத்திக் கொள்ளப்படாமல் இருந்தது. 'உதவிக்கு நர்ஸ் வைத்துக் கொள்ளும் அளவுக்கு நமது வைத்தியத் தொழில் பெருகி விடவில்லை; பெருகி வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று அவள் அப்பொழுது எண்ணியிருந்தாள். ஆனால் இப்பொழுது அவள் நர்ஸ் ஒருத்தியையும், வேலைக்காரன் ஒருவனையும் அமர்த்திக் கொண்டு விட்டாள். அந்த நர்ஸ் வீணாவின் ஆஸ்பத்திரி வீட்டையே தனது வாசஸ்தலமாகவும் ஆக்கிக் கொண்டிருந்தாள். ஆதலால் அது எப்பொழுதும் திறந்திருக்கும் ஒரு 'ரெஸிடெண்ட்' ஆஸ்பத்திரியாகவே ஆகி விட்டது.

ஆனால் வீணா தொழில் முன்னேற்றம் காரணமாகவோ, அல்லது தேவையை ஒட்டியோ இந்த மாறுதல்களைச் செய்யவில்லை. அவளுடைய வைத்தியத் தொழில் ஒன்றும் இந்த ஒரு மாதத்துக்குள் அத்தனை அமோக வளர்ச்சி பெற்று விடவில்லை. வேறு சில காரணங்களுக்காகவே அவள் இந்த



மாறுதல்களைச் செய்திருந்தாள். அவள் புரட்சி வாழ்வை நோக்கித் தயங்கித் தயங்கித்தான் முதல் அடி எடுத்து வைத்தாள். அதில் அவள் மனம் நன்றாக ஊன்றியது. அது தேவை தான் என்ற உறுதி பெற்றது. அந்த உறுதியின் விளைவாக, அவள் இரண்டாவது அடியும் எடுத்து வைத்தாள். சமய மறிந்து சுந்தரத்திடம், அவனைத் துணை சேர்த்துக் கொண்டு புரட்சித் தீயில் குதிக்கத் தீர்மானித்திருப்பதை வெளியிட்டாள். அதற்காகவே காத்திருந்த அவன் பெருமகிழ்வு கொண்டான். விரைவும் மகிழ்ந்தவாறே வீடு திரும்பினான். திரும்பும்போதே அடுத்த அடிகளை எடுத்து வைக்கவும் திட்டம் வகுத்துக் கொண்டு வந்தாள். ஆனால் வகுத்த திட்டப்படி அவள் மூன்றாவது அடியோ, நான்காவது அடியோ எடுத்து வைக்கவே இல்லை. அப்படிச் செய்ய முடியாதபடி இரண்டாவது அடியே அவளை வீழ்த்தி விட்டது.

இத்தகைய வீழ்ச்சியை அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் எதிர்பார்த்த தெல்லாம் தனது புரட்சி முயற்சி வெளிப்படும்போது, மரகதத்தம்மாளும் புஷ்பவனம் பிள்ளையும் வானத்துக்கும் நிலத்துக்குமாகக் குதிப்பார்கள்; தன்னைத் தூற்றுவார்கள்; வைவார்கள்; அம்முயற்சியைக் கைவிட்டு விடுமாறு கெஞ்சுவார்கள் என்பவைதாம். அதற்கெல்லாம் தான் இளகி விடக்கூடாது என்றும் அவள் உறுதி கொண்டிருந்தாள். ஆனால் மரகதத்தம்மாள் அவளைப் பொறியில் தட்டி வீழ்த்தி விட்டாள்!

ஆம், தன்னைச் சார்ந்தோருக்கு ஏற்படப் போகும் அவமானம், சுந்தரத்தைச் சார்ந்தோரின் கோபம், ஊராரின் தூற்றல் ஆகியவற்றை லட்சியம் செய்யாமல் இருக்கத் துணிந்ததே போல், மாலாவின் வாழ்வு தன்னால் பாழாவதையும் ஒதுக்கிவிட அவளால் முடியவில்லை. மாலா மட்டும் என்ன? வேறு எந்தப் பெண்ணின் வாழ்வு பாழாவதாக இருந்தாலும் அவள் அக்காரியத்தைச் செய்யத் துணிய மாட்டாள். ஏனென்றால் அது அவளுடைய மனமாற்றத்தின் அடிப்படைத் தத்துவத்தையே தலைகுப்புற வீழ்த்துவதாக இருந்தது! வாழ்விழந்து நிற்கும் தன் போன்ற அபாக்கியவதிகளுக்கு வாழ வழிகாட்ட வேண்டும் என்றுதான் அவள் புரட்சி வாழ்வில் ஈடுபடத் துணிந்தாள். ஆனால் அந்தப் புரட்சி, சாதாரணமாக வாழ்வு கிட்ட வேண்டிய ஒருத்திக்கு அது கிட்டாமல் செய்து விடும் என்றால் எப்படி அவளால் அதைச் செய்ய முடியும்?

ஆதலால்தான் அவள் தனது திட்டங்களிலிருந்து தானாகவே வீழ்ச்சியுற்றாள். ஆதலால்தான் முன்னாள் பெற்றிருந்த உறுதியை மறுநாள் இழந்தாள்; முன்னாள் விரும்பிய செயலை மறு நாள் வெறுத்தாள்; முன்னாள் துணை சேரக் கோரிய சுந்தரத்தை மறுநாள், "என் முகத்திலே விழியாதீர்கள்!" என்று விரட்டியடித்தாள்.

ஆயினும் இவற்றையெல்லாம் அவள் ஓர் ஆவேசத்துடனேயே செய்தாள். உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு தான் செய்தாள். எங்கே தன் நெஞ்சம் நெகிழ்ந்து விடுமோ என்று பயந்து அவசரம் அவசரமாகச் செய்தாள். மொத்தத்தில் என்ன செய்கிறோம் என்பது தெரியாத நிலையிலே செய்தாள். செய்த பிறகே அவளுடைய வேகம் தணிந்தது; மனம் நெகிழ்ந்தது. தனது ஏமாற்றத்தைத் தன்னை விடப் பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாகப் போகும் சுந்தரத்திடம் ஆத்திரமாகக் கொட்டி விட்ட தவறு தெரிந்தது. அதற்காகவே, அன்று அவள் கண்ணீர் விட்டாள்; கதறி அழுதாள்.

அந்த அழுகை ஓயாத அழுகையாக, ஒழியாத மனத் தொல்லையாக அவளை வாட்டி எடுக்க ஆரம்பித்தது. என்ன செய்தும் அந்த நிகழ்ச்சியை அவளால் மறக்க முடியவில்லை. மனச்சாட்சியின் இந்தப் பிடுங்கலின் காரணமாக அவள் ஒரே தடவை மட்டும் சுந்தரத்தைத் தனியே சந்தித்து, அவனிடம் கடுமையாக நடந்து கொண்டு விட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவதென்று தீர்மானித்தாள்.

ஆனால் சுந்தரம் அவளைச் சந்திப்பதை அறவே தவிர்த்தான். இரண்டொரு தடவைகள் விகாவின் வழியே அவனுக்குச் சாடை-மாடையாகச் செய்தி சொல்லி அனுப்பிக் கூடப் பார்த்தாள். அப்படியும் அவன் அவளைச் சந்திக்க வரவில்லை.

எப்படியும் சந்தித்தே தீருவது என்று துணிந்திருந்தால் அவளுக்கு வசதியான வழிகள் இரண்டு இருந்தன. வேறொன்றும் வேண்டாம்; காலையில் கேசவபுரத்தில் ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியில் சுந்தரத்தின் வீட்டுக்குச் சென்றிருந்தால் அவனைக் கண்டிருக்க முடியும். ஆனால் இப்பொழுதெல்லாம் அவன் வீடு இருக்கும் திசை நோக்கி அடியெடுத்து வைக்கக்கூட அவள் பாதங்கள் கூசின. அங்கே போனால் மரகதத்தம்மாளின் பார்வையில் பட நேரிடும். மீண்டும் தாங்கள் ஒன்று சேர்ந்துவிட்டதாக அந்த அம்மாள் நினைத்து விடுவாள் என்று பயந்தாள்.

சரி, அது வேண்டாம். விகாஸிடமோ, இன்ஜினீயர் குலசேகரத்திடமோ விஷயத்தைச் சொன்னால் அவர்கள் இவர்கள் சந்திப்புக்குக் கட்டாயம் வகை செய்வார்கள். ஆனால் வீணா இந்த அவமானகரமான சம்பவத்தை வெளியே சொல்லிக் கொள்ளவே வெட்கினாள்.

இப்படிப் பத்து நாட்கள் ஓடிவிட்ட பிறகு, இனி நாம் அவரைத் தனிமையில் சந்திக்கவே முடியாது என்ற முடிவுக்கு அவள் வந்து விட்டாள். ஆனால் மனச்சாட்சியோ அவளை எப்பொழுதும் அறுத்துக் கொண்டே இருந்தது. காலையில் கேசவபுரத்து ஆஸ்பத்திரியிலும், மாலையில் புங்கனூற்று டின்பென்சரியிலும் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது நீங்கலாக மீதி நேரமெல்லாம் இந்த நினைவு அவளைக் கொன்று தின்றது.

யாரிடமாவது, எதைப் பற்றி யாவது பேசி, அவள் இந்த நினைவை மறக்கடிக்க முயன்றாள். ஆனால் வீட்டிலும் வெளியிலும் தெரிந்த மனிதர்களிடம் பேச்சுக் கொடுத்தால், அந்தப் பேச்சு எங்கே ஆரம்பித்தாலும் இறுதியில் அவளுடைய தொழில் அல்லது அவல நிலைக்குத்தான் வந்து நின்றது. அவை அவளுடைய மனக் குரங்கை மீண்டும் உசுப்பி விட்டு விடும். தன்னைச் சிறிதும் அறியாதவர்களாக, புதிய முகமாகத் தன்னுடன் பெரும்பாலான நேரமும் இருக்கக் கூடியவர்களாக யாராவது அகப்படமாட்டார்களா என்று அவள் ஏங்கியிருந்தபோதுதான் இந்த நர்ஸ் தற்செயலாக வந்து சேர்ந்தாள். எனவே வீணா அவளை உடனே வேலைக்கு எடுத்துக் கொண்டு விட்டாள்.

வேறொரு காரணத்துக்காகவும் அவள் தனது ஆஸ்பத்திரியில் நர்ஸ், வேலைக்காரன் ஆகியோரை அமர்த்திக்கொள்ள வேண்டியதாயிற்று. என்றிலிருந்து சுந்தரம் வீணாவின் ஆஸ்பத்திரிக்கு வருவதை நிறுத்தினானோ, அன்றுதொட்டுத் தானாவதி அவள் ஆஸ்பத்திரியைப் படையெடுக்க ஆரம்பித்து விட்டான். அவன் விதைத்த வினையைத் தானே வீணா இப்பொழுது அறுத்துக் கொண்டிருந்தாள்! சுந்தரத்தைத ஆஸ்பத்திரிப் பக்கம் தலை காட்டாமல் செய்து விட்டு, வீணாவுடன் நெருங்கிப் பழகி, மெல்லத் தன் ஆவலை வெளியிட்டு, அவளைக் கைக்குள்ளே போட்டுக் கொள்ள வேண்டும் என்று அவன் போட்ட திட்டத்தின் முற்பகுதி வெற்றியுடன் நிறைவேறி விட்ட பிறகு, பிற்பகுதியை நிறைவேற்றிக் கொள்ளுவதில் அவன் தாமதம் செய்வானா?

சுந்தரத்தின் வருகை நின்றுவிட்ட அன்றிலிருந்தே அவன் அங்கே வர ஆரம்பித்தான். தனது அசட்டுத்தனமான பிதற்றல்களால் வீணாவின் வெறுப்பை வளர்த்தான். "வேலை நேரத்தில் வந்து தொல்லை கொடுக்காதீர்கள்" என்று அவள் எவ்வளவு வேண்டிக் கொண்டும், அவன் கேட்கவில்லை. வெறும் பிதற்ற



லோடு நின்றிருந்தால் கூட வீணா, விதியே என்று அதைச் சகித்துக் கொண்டு இருந்திருப்பாள். ஆனால் அவன் மெல்ல மெல்லத் தன் ஆவலையும் கோடி காட்ட ஆரம்பித்தான். ஆஸ்பத்திரி நேரம் முழுவதுமே அங்கே நோயாளிகள் தொடர்ந்து வந்து போய்க்கொண்டிருப்பதில்லை; ஆதலால் வீணா தனித்

திருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் இடையிடையே ஏற்பட்டுக் கொண்டுதானிருந்தன. அம்மாதிரி சமயங்களில் அவன் இம்மாதிரி பேச்சுக்களை வெளியிடத் தொடங்கினான். வீணாவின் இளமை பாழாகிக் கொண்டிருக்கிறதே என்று முதலைக் கண்ணீர் வடித்தான். விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமென்று அவளுக்குப் போதிக்கத் தொடங்கினான். அதற்காகத் தான் ஓர் இயக்கமே ஆரம்பிக்கப் போவதாக அளந்தான். அவளுடைய அழகு, குணம், அடக்கம் ஆகியவற்றை அளவு மீறிப் புகழ்ந்தான்.

இவைகளெல்லாம் வீணாவுக்கு அவன் நோக்கத்தை நன்றாகப் புலப்படுத்திவிட்டன. அவளுக்கு உள்ளூறப் பீதி ஏற்படத் தொடங்கியது. அவன் பசித்திருக்கும் புலி; எந்நேரமும் தன் மீது பாய்ந்து விடக்கூடும் என்று அஞ்சிய அவள் பாதுகாப்புடன் இருக்க விரும்பினாள். எனவே, இதையொட்டியும் அவள் தன் ஆஸ்பத்திரியில் எப்பொழுதும் இருக்கக் கூடியவர்களாக ஒரு நர்ஸையும், வேலைக்காரனையும் அமர்த்திக் கொண்டாள்.

வீணா வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்த நர்ஸின் பெயர் ஸவிதா. அவள் முன்பு சென்னையில் ஒரு டாக்டரிடம் பணியாற்றிக் கொண்டிருந்தாள். அந்த டாக்டர் மேல்படிப்புக்காக வியன்னா செல்ல நேர்ந்ததால் ஸவிதாவுக்கு வேலை போய் விட்டது. அவளுக்குச் சொந்த ஊர் தேசவபுரத்தை அடுத்த கோவிலூர். ஊருக்கு வந்து பெற்றோருடன் சில நாட்கள் இருந்து விட்டுப் பிறகு மீண்டும் சென்னைக்குச் சென்று வேறு வேலை தேடிக் கொள்ள நினைத்திருந்தாள் அவள். இவ்வூரில் அவளுடைய தாய்வழிப் பாட்டியும் மாமனும் இருந்தனர். அவர்களைப் பார்த்துப் போவதற்காக அவள் இங்கே வந்தாள். வந்த இடத்தில் வீணா புதிதாக ஆஸ்பத்திரி தொடங்கியிருப்பதைக் கேள்விப்பட்டு, ஒருகால் அவளுக்கு நர்ஸ் தேவைப்படுமா என்பதை அறிய அவளைச் சந்தித்தாள். வேலை உடனே கிடைத்துவிட்டது.

ஸவிதா வேலையில் சேர்ந்து இன்றைக்குப் பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. அவள் பண்பும், வேலையில் கருத்தும் உடையவள். ஆதலால் எதிர்பார்த்ததைவிட அதிகமான மனச்சாந்தி அவள் மூலம் வீணாவுக்குக் கிட்டியது. தவிர, ஆஸ்பத்திரியில் எப்பொழுதும் யாராவது இருக்கத் தொடங்கி விட்டதால் தாணுவதியின் தொல்லையும் வெகுவாகக் குறைந்து விட்டது. இப்பொழுதெல்லாம் வீணா காலை நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு வருவதோடு நின்று விடுவதில்லை. வழக்கம்போல் காலையில் ஆஸ்பத்திரி நேரத்துக்கு வந்து போய் விட்டு, பிறகு சாப்பாடு முதலியவற்றை முடித்துக் கொண்டு மீண்டும் வருவாள். நர்ஸ் ஸவிதா தனது மாமா வீட்டில் சாப்பாடு வைத்துக் கொண்டிருந்தாள். வீணா சாப்பிட்டு விட்டு ஆஸ்பத்திரிக்கு வந்த பிறகுதான் அவள் சாப்பிடப் போவாள். ஸவிதா சாப்பிட்டு வந்த பிறகும் வீணா வீட்டுக்குப் போய்விட மாட்டாள். பகல் இரண்டு மணி வரையில் ஆஸ்பத்திரியிலேயே அவளுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பிறகுதான் வீடு செல்வாள். அதே மாதிரி இரவு புங்கனூற்று டிஸ்பென்சரியிலிருந்து திரும்பியதும், உணவை முடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து மீண்டும் ஸவிதாவை இரவுச் சாப்பாட்டுக்கு அனுப்புவாள். அவள் திரும்பி வந்த பிறகு, சுமார் பத்து மணிக்கு மேல்தான் வீட்டுக்குச் செல்வாள்.

இம்மாதிரி ஆஸ்பத்திரி, டிஸ்பென்சரி என்று மாறி மாறிப் பொழுதைத் தள்ளி வந்ததால் அவளுடைய மனத்துயர் கிட்டத்தட்ட மறைந்து விட்டது. அது அறவே மறைந்துவிடும்; நாமுண்டு, நமது வைத்தியத் தொழில் உண்டு என்ற நிலைக்கு வந்து விடுவோம் என்று அவள் கருதியிருந்தபோதுதான் இன்று அவளுடைய மனப் புயலை மீண்டும் கிளறிவிடும் சம்பவம் ஒன்று நிகழ்ந்து விட்டது.

புங்கனூற்றுக் காலனியில் நடந்த அந்தத் துர்ப்பாக்கியச் சம்பவம் வீணாவை மட்டுமில்லை, அந்தக் காலனியில் வசித்தவர்கள் எல்லாரையுமே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. அன்று மாலையில் வீணா புங்கனூற்று டிஸ்பென்சரிக்கு வந்தபோது சில வீடுகள் அப்பாலிருந்த விகாஸின் வீட்டு வாசலில் கும்பல் கூடியிருப்பதைக் கண்டு, டிஸ்பென்சரியைக்கூடத் திறக்காமல் அங்கே விரைந்து சென்றாள். வெளியே கூடி நின்றவர்கள் அறிவித்த செய்தி அவளை "விகாஸ்!" என்று அலறிக் கொண்டு உள்ளே ஓடச் செய்தது.

வீட்டினுள்ளே நடு அறையில், சுவரில் சாய்ந்தவாறு விகாஸ் தலையில் கையை வைத்துக்கொண்டுட்கார்ந்திருந்தான்.

"ஐயோ! என்ன விகாஸ்? எப்படி நடந்தது இது?" என்று வீணா அவனிடம் பாய்ந்தோடினாள்.

"என் தலையில் கல்லைப் போட்டுவிட்டான் வீணா! இப்படி ஏதாவது நிகழ்ந்து விடக் கூடும் என்று பயந்துதானே அன்று நான் உன்னைக் கொண்டு அவளுக்குப் புத்திமதி சொல்லச் சொன்னேன். பாவி

# இருமலுக்கு

## வீட்டிலேயே

## குணம்

## அளிப்பது

*Alembic*

# க்ளைகோடின்



## டெர்ப்-வசாகா


குழந்தைகளும் இதை
விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

அலெம்பிக் கெமிகல் வர்க்ஸ்
கம்பெனி லிட்., பரோடா-3

# பின்னியின் லஸ்டலின்

## பல சலவைகளுக்குப் பின்பும் புதியதாகவே விளங்குகிறது

ஷர்ட்டுகள் தைத்தவுடனே மட்டும் புதியதாக விளங்கினால் போதாது. பல சலவைகள் ஆன பின்பும் அவற்றின் புதிய தோற்றம் நீடிக்க வேண்டும். பின்னியின் லஸ்டலின் என்றும் புதியதாக விளங்குவதோடு பல சலவைகளுக்கு பின்பும் நீடித்து உழைக்கிறது.




BY 403 a



ஆம்கோ பாட்டரீஸ் பிரைவேட் லிமிடெட் என்னும் பாட்டரிகள் தயாரிக்கும் ஸ்தாபனம் அமெரிக்க ஸ்தாபனமாகிய கோல்ட் நாஷனல் பாட்டரீஸ் கம்பெனியின் ஒத்துழைப்பைப் பெற்று, உற்பத்தியை விஸ்தரித்து வருகிறது. அமெரிக்கக் கம்பெனியின் கூட்டுறவை அறிவித்த போது 'ஆம்கோ'வின் மானேஜிங் டைரெக்டர் திரு கே. ஜி. பரமேச்வரன் நடத்திய விருந்துபசாரத்தில் அமெரிக்கக் கம்பெனி பிரதிநிதி எச். சி. ரொக்கும், இதரரும் கலந்து கொண்டனர்.

---

வேதாந்தம் பேசி நமது வேண்டுகோளை மறுத்து விட்டு, இப்பொழுது அதோ, எந்த நிலையில் கிடக்கிறான், பார்!" என்று கதறிவிட்டு, அவன் கைக்குட்டையால் பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டான்.

அக்காட்சியைக் காணப் பொறுமல் வீணாவின் உடல் நடுங்கியது. "ஐயோ! எதற்காக விகாஸ்? எதற்காக அவன் இப்படிச் செய்து கொண்டான்?" என்று பதறியவாறு கேட்டாள் அவள்.

விகாஸ் பதில் ஒன்றும் சொல்லாமல், சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து வீணாவிடம் கொடுத்தான். ஸொப்னாவால் ஹிந்தியில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தின் சுருக்கம் இதுதான்:

விகாஸின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் சுப்பையா என்றோர் இளைஞன் வசித்து வந்தான். அவன் ஸொப்னா இங்கே வந்ததுதொட்டே அவளைத் தொல்லைப் படுத்தி வந்திருக்கிறான். ஆனால் அதை ஸொப்னா யாரிடமும் கூறவில்லை. சுப்பையாவுக்குப் பிற்பகல் ஷிப்டில் வேலை. ஆகையால் அவன் காலை நேரம் முழுவதும் வீட்டில்தான் இருப்பான். அதே காலை நேரத்தில் விகாஸுக்கு வேலை ஆதலால், அவன் வீட்டில் ஸொப்னா மட்டுந்தான் இருப்பாள். இது சுப்பையாவுக்கு மிகவும் சௌகரியமாகப் போய்விட்டது. ஸொப்னா அவனுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லித் தன்னை மறந்து விடும்படி வேண்டிக் கொண்டாளாம். ஆனால் அவன் கேட்கவில்லையாம்.

"அண்ணா! அன்று நீங்களும் வீணா தேவியும் எவ்வளவோ வற்புறுத்தினீர்கள். ஊரார் கேவலமாகப் பேசுவார்களே என்று அதை மறுத்தேன். ஆனால் இன்று அதைவிடக் கேவலமாகப் பேசும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டு விட்டேன். மானமிழந்த பின் வாழ மனமின்றி நான் தற்கொலை செய்து கொள்ளுகிறேன். என் நிலை என்னைப் போன்ற இதர அபாக்கியவதிகளுக்கு ஏற்படாதிருக்க அவர்களுக்காவது சமூகத்தை எதிர்த்து நிற்கும் துணிவை இறைவன் அளிக்கட்டும்" என்று கடிதத்தை முடித்திருந்தாள் ஸொப்னா.

"ஐயோ! எங்கே அந்தக் கொலைகார அரக்கன்?" என்று வீணா கடிதத்தைப் படித்து முடித்ததும் கத்தினாள்.

"இன்னும் இங்கே இருக்க அவனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? சுப்பையாவை எனக்கு நன்றாகத் தெரியும். அவன் ஓர் அப்பாவி. அவனை ஸொப்னாவின் அழகும் ஆதரவற்ற நிலையும் அரக்கனாக்கி விட்டன. ஆம், வீணா, உங்களைப் போன்றவர்களின் அசட்டுப் பிடிவாதமும் ஆதரவற்ற நிலையும் எந்த மனிதனையும் அரக்கனாக்கியே விடும். இதோ, சுப்பையாவின் மற்றோர் அண்டை வீட்டில்கூட ஓர் இளம்பெண் இருக்கிறாள். ஸொப்னாவைவிடப் பன்மடங்கு அழகானவள்தான் அவள். அவளுந்தான் காலை நேரத்தில் கணவன் வேலைக்குப் போய் விடுவதால் வீட்டில் தனித்திருக்கிறாள். ஆனால் சுப்பையாவின் மனம் ஏன் அவளை நாடவில்லை,



மதுரை ஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜத்தின் எட்டாவது ஆண்டு விழா அண்மையில் அதன் அங்கத்தினர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மதுரை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ ஆர். பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். 'அழியா இளமை' என்ற நாடகத்தை எழுதிய கிம்னி சீனிவாசன் அவர்களே மகேந்திரன் பாகத்தில் தோற்றமளிக்கிறார்.

ஏன் அவன் அவளிடம் தவறாக நடந்து கொள்ள முயலவில்லை, தெரியுமா? அவள் திருமணம் என்ற பாதுகாப்புக் கவசம் பெற்றிருப்பதால்தான்!''

தொடர்ந்து அங்கே என்ன நடந்தது என்பதை இங்கே கூறத் தேவையில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சி வீணாவின் உள்ளத்தை மிகப் பலமாகத் தாக்கி விட்டது. இன்று அவன் டிஸ்பென்சரியே திறக்கவில்லை. இரவு ஏழு மணி வரையில் விகாஸின் வீட்டிலேயே இருந்து விட்டுப் பிறகு ஊர் திரும்பினான். வழக்கம் போல் ஒரு வாய் சாப்பிட்டு விட்டு, ஸவிதாவைச் சாப்பாட்டுக்குப் போக விட ஆஸ்பத்திரிக்கு வந்தான்.

இன்று அவனுக்கு ஆஸ்பத்திரிக்கு வருவதற்குக்கூடச் சிறிது பயமாகவே இருந்தது. ஏனென்றால் அங்கே அவன் நிர்ப்பந்தம் காரணமாகத் தானுவதியை அன்று காலையில் ஒரு நோயாளியாக அநுமதித்துப் படுக்க வைத்திருந்தான். இன்று காலையில் அவன் தாங்க முடியாத வயிற்று வலியுடன் அவளிடம் வந்து துடி—துடியென்று துடித்தான். வீணா அவனுக்கு வலி தெரியாதிருக்க ஒரு 'மார்பியா' இன்ஜெக்ஷனைப் போட்டு, மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரியிலேயே ஒரு கட்டிலில் படுக்க வைத்துவிட்டுப் போயிருந்தான்.

இப்பொழுது அவனுக்கு மயக்கம் தெளிய வேண்டிய வேளை. விபரீதமாக இன்று பார்த்து வேலையாளும், சொந்தக்காரர் ஒருவர் வீட்டில் கலியாணமென்று காலையிலேயே லீவு வாங்கிக் கொண்டு போய் விட்டான். ஆதலால் ஸவிதாவைச் சாப்பாட்டுக்கு அனுப்பும்போது அவன் ஆஸ்பத்திரியில் தனியாகத்தான் இருக்க வேண்டியிருக்கும். அதற்காக அவன் ஸவிதாவைச் சாப்பாட்டுக்கு அனுப்பாமல் இருக்க முடியாதே! எனவே வருவது வரட்டும் என்ற துணிவுடனே இங்கே வந்திருந்தான்.

ஆனால் நல்ல வேளையாக, அவன் வந்து ஸவிதாவைச் சாப்பாட்டுக்கு அனுப்பி அரை மணி ஆகிவிட்டது. அதுவரையில் தானுவதியின் மயக்கம் தெளியவில்லை. 'ஆயிற்று; இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்கள்தாம். அதற்குள் ஸவிதா திரும்பி விடுவாள். பிறகு கவலையில்லை.' அவன் மேசைமீது தலையைச் சாய்த்து, அன்று புங்கனூற்றில் நடந்து விட்ட கோரச் சம்பவத்தை நினைத்து மனம் புழுங்கிக் கொண்டிருந்தான்.

ஆனால் நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று செய்துவிடும் என்ற கதையாகி விட்டது தொடர்ந்து நடந்த சம்பவம். வீணா இவ்வாறெல்லாம் நினைத்து நிம்மதி கொண்ட மறு நிமிஷத்தில் பின் கட்டிலிருந்து தானுவதியின் முனகல் சத்தம் வந்தது. அவன் மயக்கம் தெளிந்து விட்டான். தொழிற் கடமை உடனே வீணாவை அங்கே விரட்டியது.

"இப்பொழுது வலி எப்படியிருக்கிறது, மிஸ்டர் தானுவதி?'' என்று கேட்டவாறு கட்டிலை நெருங்கினான்.

"வவுத்து வலியா? ஆமாம், அப்படி ஒண்ணு இருக்கிறதாச் சொல்லியிரா விட்டால் இப்படி நீங்க என் கையிலே அகப்பட்டிருப்பீங்களா?''

அந்த அரைப் பைத்தியம் இப்படி ஏதேதோ பிதற்றியது; பேய்ச் சிரிப்பு சிரித்தது.

வீணா கூக்குரலிட்டாள். அந்தச் சிங்கத்தின் வலிமை எங்கே? இந்த மானின் மென்மை எங்கே?

ஸைப்ரனின் கதியே தனக்கும் ஏற்படப் போகிறது என்று எண்ணிய அவனுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. அதே சமயத்தில் அறை வாசலிலிருந்து, "அடேய் ராஸ்கல்!'' என்று ஓர் அதட்டல் குரல் வந்தது.

வீணா தெம்பும் தைரியமும் கொண்டு குரல் வந்த திசையை நோக்கினான். சுந்தரம் உள்ளே பாய்ந்து வந்து கொண்டிருந்தான்! (தொடரும்)



அழகின் அபிவிருத்தி
நீங்கள் "'ஹாஸலீன்' ஸ்னோ" உபயோகித்
தீர்களானால், வெய்யிலின் வெப்பமோ, காற்றோ,
மழையோ உங்களுடைய தோற்றத்திற்கு
யாதொரு கெடுதியும் விளைவிக்காது. கெடுதியற்ற
தன்மையுள்ள "'ஹாஸலீன்' ஸ்னோ"
உங்களுடைய சருமத்தை மிருதுவாகவும்
அழகாகவும் விளங்கச் செய்கிறது.
மற்றும் அது ஏமாற்றம் செய்ய
முடியாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
"'HAZELINE' SNOW" TRADE MARK
"'ஹாஸலீன்' ஸ்னோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
BWY-4

# காஞ்சி காமாட்சி


தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

இறை வழிபாடு தமிழ் மக்கள் உள்ளத்திலே எப்படித் தோன்றிற்று, எப்படி வளர்ந்தது என்று தெரிந்துகொள்ள வேண்டியது அவசியந்தானே? கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தவர்கள் தமிழ் மக்கள். அந்தப் பழங் குடி மக்கள் உண்ணத் தெரிந்திருக்கிறார்கள், உறங்கத் தெரிந்திருக்கிறார்கள், உடுக்கத் தெரிந்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் வாழ்வில் ஓர் அமைதி நிலவியிருக்கிறது. ஆனால் இந்த அமைதியைக் குலைத்திருக்கிறது இயற்கையில் எழுந்த இடியும் மின்னலும், ஆற்றில் புரண்ட வெள்ளமும், காற்றில் தோன்றிய கடுமையும். அவர்கள் வாழ்க்கைப் படகே ஆட்டம் கொடுத்திருக்கிறது. சுழற் காற்றையும், சூறாவளியையும், குமுறும் நிலத்தையும் கண்டு பயந்திருக்கிறார்கள். இந்தப் பயத்திலே பிறந்திருக்கிறது இறை உணர்ச்சி. இந்த உலகிலே காணும் நிலம், நீர், அனல், காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களின் பயங்கர நிலையைக் கண்டு அஞ்சி, அஞ்சியே இறைவனை நினைந்திருக்கிறார்கள். முதலில் அஞ்சி வழிபட்ட ஐம்பூதத்தின் சாந்த நிலையைக் கண்ட பின்தான் அன்பு பிறந்திருக்கிறது, அவர்கள் உள்ளத்தில். உலகின் நன்மைக்கெல்லாம் காரணமாக இருக்கும் ஆதவன், அவன் ஒளியிலே பங்கு பெற்று, அவன் வெம்மையைக் குறைத்து, தண்மையையே அளிக்கும் சந்திரன், இரண்டுக்கும் அடுத்தபடியாக ஆக்கவும் அழிக்கவும் உதவும் அனல், இவற்றையே கொடி நிலை கந்தழி வள்ளி என்றெல்லாம் பெயரிட்டு வணங்கியிருக்கிறார்கள். இப்படி உருவான இறை உணர்ச்சியிலேயும் ஒரு குறை என்றுமே இருந்து வந்திருக்கிறது. உண்ணத் தெரிந்ததோடு, உடுக்கத் தெரிந்ததோடு வாழ்வு பூரணமாகவில்லை என்பதை உணரத் தொடங்கியிருக்கிறார்கள். அப்போது அவர்கள் நீண்டுயர்ந்த மலையைக் கண்டு, அதில் வளரும் மரம் செடிகளைக் கண்டு, அந்தச் செடிகளில் மலரும் மலர்களைக் கண்டு, அந்த மலர்களில் எழும் மணத்தினை முகர்ந்து, இன்பம் பெற்றிருக்கிறார்கள், அப்படியே அகன்று பரந்த கடலிலே அந்தக் கடல் அலைகளின் ஒலியிலே, அந்த ஒலி எழுப்பும் இன்னிசையிலே உள்ளம் பறி கொடுத்திருக்கிறார்கள். அஞ்சி வழிபட்ட உளத்திலே அன்பு கலந்த இன்பம் பிறந்திருக்கிறது. இந்த இன்பத்தை உருவாக்க அழகுணர்ச்சி தோன்றியிருக்கிறது. அப்படித்தான் மலை மூலமாக, அலைமூலமாக, கலை மூலமாக இறை வழிபாடு ஆரம்பித்து வளர்ந்திருக்கிறது. அந்த மலையையும், அலையையும், கலையையும் உருவகப் படுத்தியே மலைமகள், அலைமகள், கலை மகள் என்று கற்பனை பண்ணி இருக்கிறார்கள்; நின்று தொழுதிருக்கிறார்கள், விழுந்து வணங்கியிருக்கிறார்கள். இடையிடையே பழைய பயமும் விட்டபாடாக இல்லை. அந்தப் பயத்தை வெல்லாம் எண்ணியபோது கலைமகள், அலைமகள், மலைமகள் மூன்று பேரையும் சேர்த்தே நினைத்திருக்கிறார்கள். அந்த மூன்று உருவமும் சேர்ந்த அன்னையைத்தான் பழையோள், பராசக்தி என்று போற்றியிருக்கிறார்கள். ஆதியில் தோன்றிய அன்னை பராசக்தி. பின்னர் தோன்றிய தேவர் மூவரினும் ஆற்றல் மிகுந்தவள் என்று நம்பியிருக்கிறார்கள். இந்தப் பராசக்தியே காஞ்சி காமாக்ஷியாகத் தமிழர்கள் உள்ளத்தில் உருவாகி இருக்கிறது எத்தனையோ வருஷங்களுக்கு முன்பாகவே.

காஞ்சி காமாக்ஷி, மதுரை மீனாக்ஷி, காசி விசாலாக்ஷி மூவரும் அவர்தம் அருள் நோக்காலேயே மக்கள் வேண்டுவன எல்லாம் தரவல்லவர்கள். மதுரை மீனாக்ஷி பாண்டியன் மகளாகப் பிறந்து, மானிடப் பெண்ணாக வளர்ந்து அரசியாக அரியணை ஏறியவள். ஆகவே அவளுக்கு இரண்டே கைகள். செண்டேந்திய திருக்கரம் ஒன்று; ஒயிலாகத் தொங்கவிடப்பட்ட கரம் மற்றொன்று. ஆனால் அன்னை காமாக்ஷிக்கோ கரங்கள் நான்கு, அவள் தன் தெய்வத் தன்மையை விளக்க. சாதாரணமாகக் கோயிலில் உள்ள அம்பிகைகளுக்கு நான்கு கரங்கள் இருந்தால், அவற்றில் ஒன்று வரத முத்திரையோடும் ஒன்று அபய முத்திரையோடும் அமைந்திருக்கும். ஆம். அபயம்



காமாட்சி கோவில்



ஜெயஸ்தம்பம்

அருளுவதோடு வாரி வழங்கும் வரதம் உடையவள் அல்லவா அவள். ஆனால் காஞ்சி காமாக்ஷியோ கரங்கள் நான்கிருந்தும், அதில் வரதமும் காணோம், அபயமும் காணோம். அவளோ பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் சதாசிவன் முதலிய பஞ்ச பிரம்மாக்களையே தனக்கு ஆசனமாகக் கொண்டு, அவ்வாசனத்தில் பத்மாசனமிட்டு உட்கார்ந்திருக்கிறாள் என்பர். நான்கு கைகளிலும் பாசம், அங்குசம், புஷ்ப பாணம், கரும்பு வில் முதலியவற்றையே தாங்கி இருக்கிறாள். ஆம், அவள் அருள்புரிவதெல்லாம் மீனாக்ஷியைப் போலக் கண்களின் மூலமாகத்தான். மூன்று கண்களுடன் காமேசுவரி, லலிதை, ராஜேசுவரி, திரிபுரை, ஸ்ரீ சக்ரநாயகி என்னும் பல திருப்பெயர்கள் பெற்று விளங்குகிறாள். காஞ்சியில் இவள் அவதரிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் பந்தகாசுரன், பண்டாசுரன் என்பவர்களே. அவர்கள் செய்யும் இடுக்கண்களைத் தாங்க இயலாது தேவர்கள் தேவியிடம் முறை இடுகிறார்கள். தேவி காஞ்சியில் கிளி வடிவுடன் செண்பக மரத்தில் வாசம் செய்ய வருகிறாள். அப்படி வந்தவளே, அங்குள்ள ஒரு பிலாகாசத்தில் தோன்றி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்கிறாள். அன்னை காமாக்ஷி பிலாகாசத்திலிருந்து சுயம்புவாகவே தோன்றியவள் என்று கூறுகிறது தல வரலாறு.


இந்த அம்பிகை மூன்று வடிவத்தில் இருக்கிறாள். கர்ப்பக்கிருஹத்தில் மூலத்திருவாக இருப்பவளே அன்னை காமாக்ஷி. அவளையே அங்கேயே தவக்கோலத்திலும் காண்கிறோம். அன்னை பார்வதிக்கும் ஒருகாலத்தில் முனிவர்களது சாபம் ஏற்பட்டிருக்கிறது. சாபவிமோசனம் பெற அவள் காசியில் பன்னிரண்டு வருஷங்கள் தவம் செய்கிறாள். அங்குள்ளவர்களின் பசியை எல்லாம் அகற்றி அன்னபூரணி என்று பெயர் பெறுகிறாள். அப்படியும் சாபவிமோசனம் பெற முடியாமல், காசியிலும் சிறந்த காஞ்சிக்கு வந்து, அங்கு ஏகாம்பரமாக இருக்கும் மாமரத்தடியில் தவம் புரிகிறாள்; அறம் வளர்க்கிறாள்.

எண்ணரும் பெருவரங்கள் முன்
    பெற்று, அங்கு எம்பிராட்டி
        தம்பிரான் மகிழ்ந்தருள
மண்ணில்மேல் வழிபாடு
    செய்தருளி மனையறம்
        பெருக்கும் கருணைதிறல்
நண்ணும் மன்னுயிர் யாவையும்
    பல்கு நாடு காதலின்
        நீடிய வாழ்க்கை
புண்ணியத் திருக் காமக் கோட்டத்துப்
    பொலிய முப்பதோடு
        இரண்டு அறம் பெருக்கும்


அவளது பான்மை பாராட்டப் படுகிறது. இந்த அறம்வளர்த்தாள் மாமரத்தடியில் மணலினால் லிங்கம் அமைத்து, பூஜை செய்து வரும் பொழுதுதான் இறைவன் அவளது தவத்தைக் கண்டு மகிழ்ந்து அந்த மாவடியில் காட்சி தந்து ஆட்கொள்கிறார் என்று புராணங்கள் கூறும். இவளை நினைந்தே 'அருட்டவத்தாள் ஆயிழையாள் உமையாள் பாகம் அமர்ந்தவன்காண்' என்று இறைவனைப் பாடி மகிழ்கிறார் அப்பர். கர்ப்பக்கிருஹத்தை அடுத்த அந்தராளத்திலே அவளே ஸ்ரீசக்கரமாகவும் விளங்குகிறாள். சாதாரணமாக, சக்கரஸ்தாபனம் செய்து அதன் பேரிலேயே

காமாக்ஷி





பங்களூர் திரு ஏ. நாராயணசுவாமி அவர்களின் குமாரர் திரு ராமமூர்த்திக்கும் செள. நாகரத்னுவுக்கும் திருமணம் நடந்தது.



இலங்கை முத்து நாடார் அவர்களின் புதல்வர் திரு ஜெயரத்தினசாமிக்கும் செள. உத்தமிக்கும் திருமணம் நடந்தது.


மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வதே வழக்கம். இங்கு மாத்திரம் சக்கரபீடம் மூலவிக்கிரஹத்துக்கு முன்னுலே தனியே இருக்கிறது. வட்ட வடிவமாக அம்பிகையின் எதிரே ஒரு தொட்டி போன்றிருக்கும் இடமே அச்சக்கர பீடம். அஷ்டலக்ஷ்மியும் அந்தப்பீடத்திலே உருவாகி யிருக்கிருர்கள். இந்தப் பீடத்தையே ஆதி சங்கரர் பூஜித்துப் பேறுகள் பெற்றுர் என்பது வரலாறு. அதனுலேயே காஞ்சி காமகோடி பீடாதிபதி என்று ஆச்சார்ய ஸ்வாமிகள் அழைக்கப்படுகின்றனர். மூலத் திரு உருவை விட, அம்பிகை தோன்றிய பிலாகாசமும், ஸ்ரீசக்கரமாக அமைந்த இந்தப் பீடமும் நிறைந்த சாந்நித்யம் உடையது என்று மக்கள் நம்பிக்கை.

இந்தக் காமாக்ஷியைச் சுற்றித்தான் எத்தனை எத்தனை அம்பிகைகள். அரூபலக்ஷ்மி எனப்படும் அஞ்சன காமாக்ஷி இடப்புறத்தில் வடக்கு நோக்கித் தவம் புரிகிருள். மகாலக்ஷ்மிக்குத் தான் மிகவும் அழகுடையவள் என்று கர்வம், அதனுல் ஒருநாள் தன் நாயகன் மகா விஷ்ணுவின் அழகையே பரிகசிக்கிருள். அதனுல் அவர் சாபமிடுகிருர். அந்தச் சாபம் நீங்கக் காமக் கோட்டத்தை அடைந்து தேவியை நோக்கித் தவம் புரிகிருள். காமாக்ஷியின் குங்கும நிர்மால்ய பிரசாத ஸ்பரிசத்தால் தன் சுயரூபம் பெறுகிருள் என்பது கதை. ஆம்! வலப்பக்கத்தில் இப்படிச் செய்த தவத்தால் பூரண அழகை மீண்டும் பெற்ற செளந்தர்ய லக்ஷ்மியும் அவள் செளந்தர்யம் பெற்றதைக் கண்டு அவளைத் திரும்பவும் தன்னுடனேயே அழைத்துச் செல்ல ஆவலோடு ஓடிவந்திருக்கும் கள்ளப் பெருமானுமே இருக்கிருர்கள் நல்ல சிலே உருவிலே. (கணவனது அழகை எள்ளி நகையாடும் நங்கையர்களுக்கு எல்லாம் இந்த அரூப லக்ஷ்மியின் கதை ஓர் எச்சரிக்கையே).


இன்னும் வராஹி, அர்த்தநாரி, அன்னபூரணி ராஜ சியாமளா என்னும் அஷ்ட புஜங்களோடு கூடிய சரஸ்வதி எல்லோருமே இந்தக் காமாக்ஷியின் கோயிலுக்கு வந்து சேர்ந்துவிடுகிருர்கள். அன்னை பராசக்தியின் அம்சம் அத்தனையையும் ஒருங்கே காண இந்தக் கோயில் ஒன்றே போதும். மூல மூர்த்தியாம் காமாக்ஷியைப்பற்றியும், அவளைச் சுற்றி உள்ள



தென்னிந்திய ரயில்வே போர்மன் ஸ்ரீ டி. எஸ். நாராயணசாமி அவர்களின் புதல்வி செள ரேவதிக்கும் திரு எஸ். துரைக்கும் சென்னையில் விவாகம் நடந்தது.



கல்கத்தா அட்வர்டைசிங் அண்ட் சேல்ஸ் பிரமோஷன் கம்பெனியைச் சேர்ந்த சங்கரனின் மருமாள் செள. முத்துலட்சுமியைத் திரு வீரராகவன் மணந்தார்.




கந்தவடி ஸ்ரீ ஸ்ரீராமுலு செட்டி அவர்களின் புதல்வர் திரு ஜி. பத்ரிநாத்துக்கும் சௌ. சரஸ்வதிக்கும் திருமணம் நடைபெற்றது.




திரு கே. என். ராமசாமி எம்.ஏ., பி.எல். லுக்கும் சௌ வஸந்தாவுக்கும் திருச்சியில் திருமணம் நடைபெற்றது.

வர்களைப் பற்றியும் வேண்டியமட்டும் தெரிந்து கொண்டோமே. இனி உற்சவ மூர்த்தியாக விளங்கும் காமாக்ஷியைப் பற்றியும் ஒரு வார்த்தை. இன்று உற்சவ மூர்த்தியாக இருப்பவள் சமீப காலத்தில் உருவானவளே. புராதனமான உற்சவ மூர்த்தி, தனித் தங்கத்தால் ஆனவள். ஆகவே பங்காரு காமாக்ஷி என்று பெயர் பெற்றிருந்தாள். அந்த ஸ்வர்ண காமாக்ஷியை மைசூரிலிருந்து ஆண்ட ஹைதர் அலி கைப்பற்றிச் செல்ல முயன்றிருக்கிறார். இதைத் தடுக்கத் தஞ்சையிலிருந்த நாயக்க மன்னர்கள் இந்தப் பங்காரு காமாக்ஷியைத் தஞ்சைக்கே பத்திரமாக எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கு இன்னும் கோயில் கொண்டிருக்கிறாள், இந்த அழகான தங்கக் காமாக்ஷி புனுகுச் சட்டத்துக்குள் புதைந்துகொண்டு. இந்தக் காமாக்ஷியின் பிரதிநிதியாக, காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் 1941ம் வருஷம் பங்காரு காமாக்ஷியின் பாதங்களைமட்டும் உருவாக்கிப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். ஆம், 'பாதங்கள் இவை என்னில் படிவங்கள் எப்படியோ?' என்று கற்பனை பண்ணைத் தெரிந்தவன்தானே தமிழ் அகத்தின் பக்தன்.

இதுவரை சொன்ன மூர்த்தங்களைத் தவிர, இக்கோயிலில் ருத்ரமூர்த்தியான தூர்வாஸர் இருக்கிறார். உத்ஸவமூர்த்தியின் எதிரில் உள்ள மௌன மண்டபத்தில் தொண்டை மண்டலத்தை ஆண்ட துண்டீர ராஜர் கூப்பிய கையுடன் நின்று கொண்டிருக்கிறார். காசி காலபைரவர், மஹிஷ மர்த்தனி, அகஸ்தியர், ஹயக்ரீவர் முதலிய விக்கிரகங்களும் இக்கோயிலில் உண்டு. கோயிலுக்கு வடமேற்கே உலகாணி தீர்த்தம் என்னும் பஞ்ச கங்கைக் குளம் இருக்கிறது. அக் குளக்கரையிலே மூன்று நிலைகள் உள்ள மாடம், அந்த மாடங்களில் நின்றான், இருந்தான் கிடந்தான் கோலங்களில் விஷ்ணு சேவை சாதிக்கிறார். இச்சிற்ப வடிவங்கள் எல்லாம் வெண்டாலும் சமீப காலத்தில் உருவானவை. பராசக்தியாம் காமாக்ஷி கோயிலிலே இவர்களுக்கு இடம் கொடுப்பானேன் என்று கேட்கலாம் நீங்கள். காமாக்ஷி அம்மை அறம் வளர்க்கப் புறப்பட்டதை நாம் அறிவோம். அதற்கென்று வந்த பண்டங்



ஓய்வு பெற்ற உயர்மன்ற நீதிபதி திரு ஏ. எஸ். பி. அய்யர் அவர்களின் புதல்வர் திரு வெங்கடேச்வரனுக்கும் சௌ உஷாவுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.



பர்மாஷெல் திரு வி. ராமஸ்வாமி அய்யரின் புதல்வி சௌ அம்புஜத்துக்கும் திரு சுப்பிரமணியனுக்கும் பம்பாயில் விவாகம் சிறப்பாக நடந்தது.






## நல்ல ஞானி !

"எனக்குத் தெரிந்த ஒரு பெண் மணிக்கு நாலு பாஷைகளில் பேசத் தெரியும்."

"அப்படியா? எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணிக்கு நாலு பாஷைகள் தெரிந்தும் நாலு பாஷைகளிலும் எப்படி மௌனமாக இருப்பது என்பது தெரியும்."

## அடா, கஷ்டமே !

"உனக்குச் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்டாயே, அது விஷயமாக நீ அடுத்த மாதம் என்னை வந்து மறுபடியும் பார்....அது வரையிலும் நீ வேலையில் இருந்தால்....!" —கட்டட மேஸ்திரி

## எது தவறு ?

எழுதிக் கொண்டிருந்தவரைப் பார்த்து ஒரு பெரியவர் சொன்னார் :

"தவறு செய்வது மனிதனுக்கு ரொம்ப சகஜம் என்ற பழமொழி சரிதான்! ஆனால் பென்சில் தேய்வதற்கு முன்னும் ரப்பரை அதிகம் உபயோகப்படுத்தித் தேயச் செய்வது அவ்வளவு நல்லதல்ல!"

## ஓசி மனுஷர் !

**நாடகக்காரர் :** என்ன, சார்! அந்த மனுஷன் இருக்கிறதைப் பார்த்தால் டிக்கட்டு வாங்கிக்கொண்டு விடுவார் போல் இருக்கே !

**நடிகர் :** ஒரு நாளும் மாட்டார்.

**நா. காரர் :** பிழைத்து விடுவார் என்கிறீயா ?

**நடிகர் :** இல்லே டிக்கட் வாங்க மாட்டார், இலவச டிக்கட்டிலேயேதான் போவார் என்றேன் !

## மெய்யன்பர் !

"நான் சூதாடுவதை விட்டுவிட்டேன் என்று என் மனைவியிடம் சொல்லி விட்டேன்!"

"பொய்தானே அது ! ஏன் அப்படிச் சொன்னீர்?"

"ஆனால் நான் பொய் சொல்வதை விட்டு விடுகிறேன் என்று அவளிடம் சொல்லவில்லையே !"

## என்ன செய்யலாம் ?

"நாம் வெளியிடும் தினசரிப் பத்திரிகை மக்களுக்கு எப்படி உபயோகப்படுகிறது என்று ஆராய்ச்சி செய்ததில் ஸ்திரீகள் முக்கியமாக, அடுப்பு எரிய விடுவதற்கு எதை உபயோகப்படுத்துகிறார்கள் என்பது ஆராய்ச்சியின் முடிவு. இதைத் தடுக்க ஒரு வழி நாம் கண்டு பிடிக்க வேண்டும். தீயினும் எரியப்படாத இராவகத்தைக் கொண்டு காகிதத் தயாரிப்பை உடனடியாகச் செய்யவேண்டும்."

களை அப்புறப்படுத்தியும், புசித்தும் இடையூறு செய்து கொண்டிருந்தது ஒரு பூதம். அப்பூதத்தின் வலியடக்க அம்மை மாதவனையே கேட்டுக் கொள்கிறாள். அவரும் பூதத்தைப் பிடித்தடக்கி அதன் மீது ஏறி நிற்கிறார். அதனால் அடங்கவில்லை பூதம் என்று கண்டு அதன் மீது உட்கார்ந்து பார்க்கிறார். அதனாலும் அடங்காதது கண்டு பூதத்தின் மீதே நன்றாகக் காலை நீட்டிப் படுத்துக் கொள்கிறார். ஒருவழியாய் பூதம் திருமாலின் பலம் தாங்காது நசுக்குண்டு நலிகிறது. இப்படி ஒரு கதை. இக்கதையின் ஞாபகார்த்தமாக இப்பஞ்ச கங்கைக் குளக் கரையில் உருவாக்கி விருக்கிறார்கள். இவர்களை முறையே ஊரகம் (உலகளந்த பெருமாள்) பாடகம் (பாண்டவப் பெருமாள்) வெஃகா (சொன்னவண்ணம் செய்த பெருமாள்) கோயில்களிலே காணலாம் காஞ்சியிலே.

இக் கோயில் ஆதியில் பௌத்தர்களுடைய தாரா தேவியின் கோயில் என்றும், பௌத்தர்கள் தமிழ் நாட்டை விட்டு ஓடியபின் இது காமக் கோட்டமாக மாற்றப்பட்டது என்றும் கூறுவர். கோயிலுக்குள் மொழு மொழு என்றும் ஏழடி உயரத்தில் புத்தர் சிலை ஒன்று இருப்பதைக்காட்டி இதற்கு ஆதாரம் தேடுவர். இச்சிலையே சாத்தான் என்றும் சொல்லுவர். இது தவிர இக் கோயிலில் ஆராய்ச்சிக்கு உரிய ஸ்தம்பம் ஒன்றும் உண்டு. காமாக்ஷியம்மையின் சந்நிதிக்குள் நுழையும் வழியில் மேல் தளத்தில் ஒரு ஸ்தம்பம். ஜெயஸ்தம்பம் என்று கோயில் நிர்வாகிகள் கூறுவர். ஸ்தம்பத்தின் மேல் தளத்திலே சாரநாத் சிங்கங்களைப்போல், நான்கு திசைகளையும் நோக்கும் நான்கு பூதகணங்கள் உருவாக்கி இருக்கின்றனர். சரித்திர ஆராய்ச்சியாளர் சமண சமயத் தூண் என்றும், இ. பி. 15 ம் நூற்றாண்டிலே நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுவர். காஞ்சியில் ஓடும் வேகவதிக்கு அக்கரையிலே திருப்பருத்திக் குன்றத்திலே ஜைனர்கள் கோயில் இருப்பது இதற்குச் சான்று என்பர். ஆனால் தூண், தூணில் உள்ள கமலம், தட்டு எல்லாவற்றையும் நோக்கினால் பல்லவர் காலத்துத் தூணாக இருக்கலாமோ என்றும் தோன்றும். இப்படி சைவம், வைணவம், பௌத்தம், ஜைனம் எல்லாம் உரிமை கொண்டாடும் கோயில் இது. இந்தக் கோயிலுக்குள் சென்றாலே திக்கு திசை தெரியாதபடி உட்கோயில்களும் சந்நிதிகளும் அமைந்திருக்கும். சமய மயக்கத்தோடு திசை மயக்கமும் உடைய கோயிலாக இருப்பதனால் தானோ என்னவோ, 'திசை மயக்கம் ஒன்று என்றும் உளது: அஃது இன்றும் அங்குளதாம்' என்று சேக்கிழார் ஆராய்ச்சியாளர்களுக்குப் பிடிகொடாமல் பேசுகிறார். காஞ்சி காமாக்ஷியைக் கண்டு தொழுது திரும்பும் பக்தர்கள் உள்ளத்தில் எவ்வித மயக்கமும் ஏற்படாது என்றே தோன்றுகிறது.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
Padmini Priyadarsini
SANTOL
TOILET POWDER
T.S.R'S

# தேன்கூடு

### அத்தியாயம் 47

## தெளிவு பிறந்தது

சுசீலா மூன்று நான்கு நாட்கள் சித்தப்பிரமை பிடித்தவளைப் போல் இருந்தாள். தன்னிடமிருந்த விலை மதிப்பற்ற பொருள் ஒன்றை இனி எக்காலமும் திரும்பப் பெற முடியாதபடி இழந்து நிற்பதை எண்ணி எண்ணி, அவள் உள்ளம் அழுது புலம்பியது. அவள் மெருகு குன்றாத தன் உடலையே அங்கம் அங்கமாக வெறுத்தாள். திருத்திக் கொள்ள முடியாத தவறு இழைத்து விட்டு, அதை மறக்கவும் மாட்டாமல், மன்னிக்கவும் முடியாமல் இக்கற்று நிற்பதை எண்ணிக் கலங்கினாள். தன்னைச் சேர்ந்த எல்லாமே தன்னைப் படுமோசமாகக் கைவிட்டு விட்டு, ஒதுங்கி நின்று, தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவதாக அவளுக்குத் தோன்றியது.

அவளுக்குப் பசியே தெரியவில்லை; தூக்கமே கொள்ளவில்லை. நேரம் போவதுதெரியாமல்வெறும் சூனியத்தைவெறிக்க வெறிக்கப் பார்த்தாள். தன்னைச் சுற்றியிருந்த உயிரும் உணர்வுமற்ற ஜடப்பொருள்கள் எல்லாம் தன்மை கெடாமல் இருப்பதைக் கண்டு மனம் சாம்பினாள்.

சாப்பாடு என்று ஏதோ இரண்டு கொரித்து விட்டு எழுந்தாள். தூக்கம் என்று புரண்டாள். மற்ற நேரங்களில் அவள் தன்னுடைய அறையை விட்டு வெளியில் வரவே யில்லை. அறையினுள்ளே கூட, இருப்பது தெரியாமல் ஒரு மூலையாகக் கிடந்த நாற்காலியில் முடங்கிக் கிடந்தாள். துணைக்கு இருந்த கிழவியின் முகத்தைக் கூட அவள் பார்க்க விரும்பவில்லை. யாரும் தன்னை வந்து பார்ப்பதையும் அவள் வெறுத்தாள். தன்னைப் பெற்ற அன்னையோ, தந்தையோ பார்க்க வந்து விட்டால், அவர்கள் முகத்தில் அவள் எப்படி விழிப்பாள்? அவளிடம் அவர்களுக்கு எத்தனை அன்பு! அவளுடைய நேர்மையிலும் திறமையிலும் அவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கை! இந்தத் தலைகுனிவுடன் அவர்கள் முகத்தில் விழிப்பதைவிட உயிரையே இழந்து விடலாமே!

நான்காம் நாள் வழக்கத்தைவிட முன்னதாகவே அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாக இருந்தன. இருள் கரைந்து ஒளி பரவி வருவதுபோல, உள்ளத்திலே ஒரு தெளிவு உண்டாகியிருந்தது. உறக்கத்திலேயே உள்ளம் சரியான வழியை ஆராய்ந்து தேர்ந்து விட்டது. படுக்கைக்கு எதிரேயிருந்த நிலைக்கண்ணாடியில் பளிச்சென்று தன் முகம் தெரிவதைக் கண்டாள் அவள்.


அவளுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது. மூன்று நாட்களாக இருந்த முகமா இது? நிச்சயமாக இல்லை. பழைய சுசீலாவா இது? இல்லவே இல்லை. தான் முற்றிலும் மாறிப் போயிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. கண்களிலே புதிய ஒளி; கருத்திலே புதிய உற்சாகம்!

மனம் அழுது தெளிய அவளுக்கு இத்தனை மணி நேரம் பிடித்து விட்டது. இனி அவள் அழப் போவதில்லை. எதையோ இழந்து விட்டவளைப் போல இனி ஏங்கி நிற்கப் போவதில்லை. உள்ளம் உடைந்து உயிரை விடவும் போவதில்லை. இதற்கெல்லாம் சரியான முறிவு அவளுக்குக் கிடைத்து விட்டது. அதை முறை தெரிந்து, வழி தெரிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான் அவள் செய்ய வேண்டிய வேலை. அதன் முழுப் பயனையும் பெறுகிற முயற்சியில், அவள் ஒரு கணத்தைக்கூட வீணாக்கப் போவதில்லை.

பொல்லென்று பொழுது புலரும் போதே உள்ளம் மலர்ந்து வர அவள் குளியல் வேலைகளை விரைவாக முடித்துக் கொண்டு முன் ஹாலுக்கு வந்து விட்டாள். அந்தக் கிழவிக்குக் கூடச் சுசீலாவா இது என்று சந்தேகம் வந்து விட்டது. மலர்ந்த பூ வாடிவிடுவதுண்டு; ஆனால் வாடியிருந்த பூ மலர்ச்சி பெறுவதுண்டா? சுசீலா அப்படித்தான் புது மலர்ச்சியோடு விளங்குவதாகக் கிழவிக்குத் தோன்றினாள்.

"யார் இது. சுசீலாதானே?"

ஆரீவி




“இல்லை, பாட்டி, இல்லை. அந்தச் சுசீலா வேறு, இந்தச் சுசீலா வேறு. பார்த்தாலே தெரியவில்லையா?”

“தெரிகிறது, தெரிகிறது!” கிழவி, சுசீலாவின் பரிகாசப் பேச்சைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே போய் விட்டாள்.

சுசீலா மேலும் புதுத் தெம்பு பெற்றவளைப் போல் காணப்பட்டாள். மூன்று நாட்களாக யாருடைய வருகையை எதிர்பார்த்து அஞ்சியிருந்தாளோ, அந்தக் கண்ணபிரானை அப்போதே காண விழைந்தன அவளுடைய கண்கள். யார் தனக்கு இந்தக் களங்கத்தை உண்டாக்கினானோ, அவனே அதைப் போக்கவும் ஆற்றல் படைத்தவன் என்பதில் அவளுக்கு இப்பொழுது குழப்பமே இல்லை. எது எதிர்பாராத போது, விரும்பத் தகாத முறையில்

நடந்து விட்டதோ, அது தவிர்க்க முடியாததாக இருக்கலாம்; தடுக்க முடியாமல் போனதும் உண்மை. ஆனால் அதனால் தலை குனிவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவா முடியாது? அவள் தலை நிமிர்ந்து மற்றப் பெண்களைப் போல் நிற்கும்படி செய்ய அவன் கடமைப் பட்டிருக்கிறானே!

சுசிலாவுக்கு இன்று அவனை நினைக்கும்போது சிறிதுகூடக் கோபம் வரவில்லை. அதற்கு மாறாகப் பரிவுதான் உண்டாயிற்று. அவன் செய்தது மறக்க முடியாத, மன்னிக்க முடியாத தவறுதான். ஆனால் அவனை அப்படிச் செய்யும்படி தூண்டியது எது? யார்? சுசிலா அத்தனை தவறுகளையும் அவன்மீதே சுமத்தத் தயாராக இல்லை. அவனிடம் அவளுக்கு அநுதாபம்தான் சுரந்து வந்தது. அவன் ஏன் இந்த மூன்று நாட்களாக இங்கே வரவில்லை என்பது அவளுக்குத் தெரியாது. அதன் காரணத்தையும் ஆராய்ந்து பார்க்க அவளுக்கு விருப்பமில்லை. ஆனால் இன்னும் சற்று நேரத்தில் அவன் தன்னைப் பார்க்க வரப் போவது நிச்சயம் என்றே அவளுடைய உள்ளுணர்வு கூறியது. அவளுடைய எதிர்கால வாழ்வின் போக்கைக்கூட இதிலிருந்து ஊகித்துக் கண்டறிந்து கொண்டு விடலாம் என்று பட்டது. எண்ணியபடி அவன் வந்து விட்டால் அவள் வாழ்வு மலரும்; அப்படி வராமல் போய் விட்டால் அவள் வாழ்வு வாடித்தான் போகும்.



இவ்வளவு பெரிய விஷயத்தை இந்தச் சின்ன விஷயத்திலிருந்தா முடிவு கட்டுவது? இது எத்தனை அறியாமை! அவன் இப்போது வருவதற்கும், அவளுடைய வருங்கால வாழ்வுக்கும் முடிச்சுப் போடுவது எத்தனை பேதைமை!

ஆனால் வாசலில் வண்டி வரும் ஓசையைக் கேட்டு, அவள் உள்ளம் வெடித்துவிடும் போல் இருந்தது. 'இது உண்மையா, உண்மையா?' என்று அது மகிழ்ச்சியால் கூவியது. 'நான் நினைத்தது என்ன, இதோ நடப்பது என்ன? இதோ அவர் வந்து விட்டார்! நான் நினைத்தது நடந்து விட்டது! என்னைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்ய அவர் ஓடோடி வந்து விட்டார். ஆனால் நான் என்னை எங்கே இப்போது ஒளித்துக் கொள்வேன்?' என்று அவள் முகத்தை வேறு புறமாகத் திருப்பிக்

கொண்டாள். 'அந்தக் கண்களை எப்படி ஏறிட்டுப் பார்ப்பேன்? அவர் பேச்சுக்கு எப்படி விடையளிப்பேன்! தெய்வமே! என்னை இந்தச் சோதனையில் தேறும்படி செய்ய மாட்டாயா?' என்று அவள் தனக்குள் வேண்டிக் கொண்டாள்.

"ஷீலா!"

அமுதத்தைப் பருகும் இன்பம் தந்தது அந்த அழைப்பு. ஆயினும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை; முடியவில்லை.

டக், டக், டக்!—

நெஞ்சு 'படக்படக்'கென்று அடித்துக் கொள்வது மிக மிகத் தெளிவாகக் கேட்டது. திணறிக்கொண்டே இழுத்த பெருமூச்சு ஒரே மூட்டாக வெளிவரத் தெரியாமல் திணறியது.

அவன் நிற்கிறானா, போய் விட்டானா? ஒரு நொடி ஒரு நாழிகையாக நீண்டு தோன்றியது. கண்களை மூடித் திறப்ப தற்குள் ஒரு கை மெல்லத் தன்னுடைய தோள்மீது வந்து அமருவதை உணர்ந் தாள் அவள். இதயம் என்பது எங்கே இருக்கிறது? அவன் கைபட்ட இடத் திலா அது மறைந்திருக்கிறது? தன் னுடைய இதயத்தையே தீண்டியது போல் அவள் உடலெல்லாம் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது.

"ஷீலா!"

"ம்ம்....."

"கோபமா?"

கோபமா? எதற்கு, யார்மீது கோபம்? இது என்ன கேள்வி? அவள் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டே வேகமாகத் தலை யசைத்தாள். அந்த அசைப்புக்கு என்ன பொருள்?

"இப்படி நிமிர்ந்து என்னைப் பாரேன்!" அவளுடைய மோவாயைப் பிடித்து உயர்த்தினான் அவன். அவளுடைய கைகள் தற்காப்புக்காக முன்னே வந்து அவன் கைகளைத் தடுக்க முயன்றன. காலையழகு நாணமாக வடியும் முகத் திலே கண்ணிமைகள் கவிந்துகொண்டு விட்டன. உதடுகளிலே மென்னகை அலை ஒன்று தெளிந்து சென்றது. 'உங்களை என்ன, இந்த உலகத்தையே நிமிர்ந்து பார்க்கத்தான் துடிக்கிறேனே, தெரியவில்லையா?' என்பதுபோல் துடித் தன இமைகள்; துடித்தன தோள்கள்; நெஞ்சமும் விம்மித் துடித்தது.

அவள் சட்டென்று எழுந்து, விலகி நிற்க முயன்றாள். "இதெல்லாம் என்ன வம்பு?" என்று முணுமுணுத்தன உதடு கள். முன்னே வர முயலும் அவனைத் தடுக்க வந்தன கைகள். முகமும் சிணுங் கியது. ஆனால் அதிலே சினத்தின் சிறு குறிப்பேனும் தென்பட வேண்டாமா? கண்ணபிரான் இதனால் மேலும் துணிவு பெற்று, அவளுடைய கைகள் இரண்டையும் சேர்த்துப் பற்றிக் கொண்டு, என்ன சொல்வது என்று தெரி யாமல் சிறிது தயங்கினான். அந்தச் சிறு தயக்கத்தில் எல்லாமே ஸ்தம்பித்து விட்டது போல் அவனுக்குத் தோன்றி யது. அவளுடைய முகத்திலே நிலவிய சோகத்தின் சிறு கீற்றைக் கண்டு அவன் நெஞ்சம் நெகிழ்ந்தது. இந்தக் கைகளைப் பற்றிக் கொண்டிருப்பவன் தகாத பெரும் தவறு புரிந்தவனாக இருக்க லாம்; ஆனால் அவளுடைய உள்ளத்தைக் கவர்ந்த அவன் சிறிதும் வெறுக்கத் தகுந் தவன் அல்ல என்று அவள் மனச்சாட்சி முறையிட்டு முழங்கியது.

"ஷீலா!" என்று அழைக்கும்போதே அவன் குரல் தழுதழுத்தது.

"கையை விடுங்கள்!"


"இதை நான் எவ்வளவோ முறை தொட்டிருக்கிறேனே — இன்றைக்கு மட்டும் என்ன?"

"எப்போதும் போல் இருந்தால் எல்லாம் சரிதான்!"

கண்ணபிரான் ஓரடி பின்னால் தள்ளி நின்று, "இன்னமும் என்னிடம் உண் டான கோபம் உனக்குத் தணிய வில்லையா, ஷீலா? அது சுலபத்தில் தணியக் கூடியது அல்லதான்; ஆனால் அதை உணர்ந்து வருந்தும் என்னை நீ புரிந்து கொண்டிருப்பாய் என்று நினைத் தேன். உன்மீது வைத்த அன்பு என்னைப் பித்தனாக்கி, என் அறிவை ஒரு நொடி யில் மயக்கி விட்டது. இதை நீ இதற் குள் தெரிந்துகொண்டிருப்பாய் என்று நினைத்தேன்! ஆனால் என்னை வெறுக்கும் படி, மன்னிக்கவே முடியாதபடியாகவா நான் தவறு செய்து விட்டேன்?" என்று இரக்கம் தோய்ந்த குரலில் பேசினான்.

ஷீலாவின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. அவனுடைய உள்ளம் வேத னைப்படும்படி நடந்துகொண்டு விட்ட தற்காக அவள் தன்னையே கடிந்து கொண்டாள். "உங்கள்மீது எனக்கு வெறுப்பும் இல்லை; கோபமும் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால் என்மீது தான் எனக்கு வெறுப்பு, கோபம் எல் லாம் என்று சொல்வேன். நீங்கள் என்ன செய்திருந்தாலும் அதன் முழுப் பொறுப்பையும் உங்கள்மீது சுமத்தி விட்டு, நான் நல்லவளைப்போல் பாசாங்கு செய்ய விரும்பவில்லை. புரிகிறதா? இனி நல்லது கெட்டது எதுவாக இருந்தாலும் நீங்கள்தான் எனக்கு எல்லாம்!" என்று

## ஆஸ்த்மா உபாதைக்கு
### அவசியம் கைவசம் இருக்க வேண்டியது



ஆஸ்த்மாவினும் அவதியுறும் ஒவ்வொரு குடும்பத்திலும் மிகமுக்கியமாக இருக்க வேண்டியது

## சிஹேரா

நோய் எவ்வளவு நாள்பட்டதாயினும் சரி, மற்றும் எந்த வயதினருக்கும் ஏற்றது. முதல் தடவை மருந்து உட்கொண்டவுடன் குணம் அளித்து ஆழ்ந்த நித்திரைக்கு வழி செய்யும். ஆஸ்பத்திரிகளில் உபயோகிக்கப் பட்டும், வைத்தியர்களால் நன்கு சிபார்சு செய்யப்பட்டுமுள்ள சிஹேரா, ஆஸ்த்மாவை அபாயமின்றி, விரைவில் குணமளிக்கக்கூடிய சிறந்த நிவாரணி. இதில் ''எபிடரைன்'' சேர்க்கப்படவில்லை.

விலை ரூ. 4.25 ந. பை.

ஸ்டாக்கிஸ்டுகள்:

**தாதா & கம்பெனி**

86, நைனியப்ப நாயக் தெரு, சென்னை-3

---

## நவராத்திரி, தீபாவளி
### பண்டிகைகளை முன்னிட்டு

உங்களுக்குத் தேவையான

**பட்டு & நூல் ஜவுளிகள்**

ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்

**கொள்ளேகாலம்**
**பட்டுச் சேலைகள்**

வாங்க நம்பிக்கையான இடம்

## P. B. லக்ஷ்மணஸா & பிரதர்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

109, ஜபாமுதலித் தெரு


**சிந்தாதிரிப்பேட்டை - சென்னை-2**

போன்: 86966

பம்பாய் அன்பர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

வழக்கம்போல் இவ்வருடமும் எங்கள் பம்பாய், மதுங்கா கடையில் வாங்கித் திருப்தி அடையுங்கள்

---



## எந்நாளும் எந்நேரமும் நரஸூ காப்பி அருந்தும் நேரமே

அருமையான காப்பி ஒரு கோப்பை பருக விரும்பினாலும் நரஸூ காப்பி அருந்துவதே உத்தமம். அதன் ருசித்தத் தன்மையிலும் முற்றிலும் தனிப்பட்ட சிறப்புடையதாக, மற்ற காப்பிகளினின்றும் வேறுபட்டு நல்ல மணமுடையதாக விளங்குகிறது. அன்பான விருந்துகளுக்கும், ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் முதலியவற்றிற்கும் உகந்தவாறு மொத்த அளவுகளிலும் இப்பொழுது கிடைக்கின்றது.

பரிசுத்தமான நரஸூ காப்பி
தனி ருசி உடைய
காப்பியாகும்

**நரஸூஸ்**
மானியுபாக்சரிங் கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை

# கால்கேட்டின் மூலம் பற்கள் சொத்தையாவதைத் தடுப்பதோடு நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தையும் அகற்றுங்கள்!



ஏனெனில், கால்கேட் பற்பசை சொத்தையையும் துர்நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒரேதேய்ப்பில் ஒழிக்கிறது!

உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமையில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறதென்பதையும் கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட்டுக்குத் தான் உண்டு.

இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்ந்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல்துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது





நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம்-ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.





__வெண்ணிற பற்களைப்__ பெறவும், வாயில் __நறுமணம்__ கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCS. 3907 TAM.

கூறி விட்டு, அவள் அவ்விடத்திலிருந்து சென்று விட்டாள்.

சற்றைக்கெல்லாம் கண்ணபிரான் அவனுடைய அறைக்குச் சென்றபோது, அவள் கதவோரம் சாய்ந்தவாறு அவன் வருவதையே பார்த்துக் கொண்டு, உணர்ச்சி ஏதுமின்றி நின்றாள்.

"வேண்டியதற்கு அதிகமாகவே பேசியாகிவிட்டது, இல்லையா ஷீலா? மறுபடியும் இதைப்பற்றியே பேசவேண்டியிருக்குமோ?" என்றான் கண்ணபிரான்.

"சரி! அப்படியே கொஞ்சம் நில்லுங்கள்!" என்று இரு கைகளாலும் அவனைச் சற்றுப் பின்னால் தள்ளி நிறுத்தி விட்டு, அவன் காலடியில் குனிந்து நமஸ்கரித்து விட்டு எழுந்தாள். கண்ணபிரான் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் அவன், "இதெல்லாம் என்ன, ஷீலா! நீ படித்துப் பட்டம் பெற்றிருந்தும் பாமரப் பெண்ணைப் போலவே இருக்கிறாயே!" என்று அவள் தோளைப் பிடித்து அன்போடு அசைத்தான்.

"என்ன படித்திருந்தாலும் நான் பெண்தானே! படிப்பினால் அறியாமையைத்தான் போக்கிக் கொள்ளலாம்; பெண்மையைப் போக்கிக் கொள்ள என்றால் எப்படி முடியும்? அன்பும் அடக்கமும் எங்களுக்கு ஆற்றின் இரு கரையைப் போல். படிப்பு வெள்ளம் அதைமீறி உடைத்துக்கொண்டுபோனால் வாழ்க்கையே வெள்ளப் பாழ்தான்!"

இந்த வார்த்தைகளை இவ்வளவு தெளிவாக அவள் சொல்லவில்லைதான். ஆனால் அவள் சொன்னதன் கருத்து என்னவோ இதுதான். கண்ணபிரான் சிரித்துக் கொண்டே, "உனக்குத் துணையாக யாராவது சிறு பெண்ணைப் பார்த்து வேலைக்கு வைத்துக் கொள். இந்தக் கிழவிதான் உன் படிப்பு வாசனையைக் கெடுத்து, உன்னை இவ்வளவு பத்தாம் பசலியாக்கி விட்டிருப்பாள் என்று நினைக்கிறேன்!" என்றான்.

"அதென்னமோ எனக்குத் தெரியாது. இனி இவர்கள் துணையெல்லாம் என்னை என்ன செய்யும்? இதெல்லாம் இனி எத்தனை நாளைக்கு? ஆனால் இன்று இது இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. நாம் இருவருமாகக் கோயிலுக்குப் போய்விட்டு வந்தால்தான் இது பூர்த்தியாகும்!" என்றாள் சுசீலா.

"எங்கே வேண்டுமானாலும் அதிலும் உன்னை அழைத்துக் கொண்டு போக நான் தயார்தான். ஆனால் அதேபோல் நான் கூப்பிடுகிற இடங்களுக்கும் நீ வரத் தயங்கக் கூடாது!" என்றான் அவன்.

"பாரிஸ்டர் வீட்டைத் தவிர..." என்று ஒரு சிறு திருத்தம் கூறினாள் சுசீலா. அது சிரிப்பில் போய் முடிந்தது.

ஆனால் வட பழனி ஆண்டவர் சந்நிதியில் போய் நின்றதும், சுசீலா உணர்ச்சி வசப்பட்டு உள்ளம் உருகிப் போய் நின்றாள். "ஆண்டவனே! குறமகளைச் சிறையெடுத்துப் போய், பிறகு மணம் செய்து கொண்டவன் நீ... உன் அருள் நாடி வந்து நிற்கும் என்னிடம் பிழையிருந்தால் பொறுத்துக் கொண்டுவிடு. வடிவேல் துணையிருந்து நான் வரித்து விட்ட இவரை மணம் செய்து தரவேண்டும்!" என்று கண் மூடி, கைகூப்பித் துதித்தாள்.

அவள் மனத்துக்குள்ளாக வேண்டிக் கொண்டதெல்லாம் ஆண்டவனுக்கு எட்டியதோ, என்னவோ, அருகிலிருந்த கண்ணபிரானுக்கு எங்கே எட்டியிருக்கப் போகிறது? அதைப் பற்றி அவன் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. ஆண்டவர் சந்நிதியிலிருந்து வெளிப்பட்ட பிறகுதான் அவள் மனத்திலே முழு அமைதியும் வந்து நிலைத்தது; கருகிய காதலும் கற்கண்டாய் இனித்தது. மூன்று நாட்களாக வேதனையோடு புரண்ட அவளுக்கு அன்றுதான் நல்ல பசி எடுத்தது; நல்ல தூக்கமும் வந்தது.

இரவு எட்டு மணிக்கெல்லாம் அவள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, படுக்கைக்குச் சென்றாள்.

## அத்தியாயம் 48

# நடுநிசிக் காட்சி

ஒரு மணி நேரம்கூட அவள் சரியாகத் தூங்கவில்லை. அதற்குள் கண்ணபிரானுடைய வண்டி எழுப்பிய சத்தத்தில் அவள் அடித்துப் புடைத்துக்கொண்டு எழுந்து விட்டாள். வரும் வழியெல்லாம் வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டே அவள் கீழே இறங்கி வேகமாக ஓடி வந்தாள்.

துணைக்கு இருந்த கிழவி தூங்கிக் கொண்டிருந்தாளோ என்னவோ, காரின் அழைப்புச் சத்தம் கேட்டால் மட்டும் அவள் எழுந்திருக்க மாட்டாள் என்பது அவளுக்குத் தெரியும். சுசீலா ஓடிச் சென்று கண்ணபிரானுக்குக் கதவைத் திறந்து விட்டபோது கிழவி வேறு பக்கம் பார்த்துத் திரும்பிப் படுத்துக்கொண்டு

விட்டான். இதைப் பார்த்திருந்தால் கமலாவுக்குக்கூட எரிச்சலாகத்தான் இருந்திருக்கும், கிழவிக்கு எத்தனை குறும்புத்தனம் என்று. ஆனால் கண்ணபிரான் வந்திருக்கிறபோது கிழவியைக் கவனிக்க அவனுக்கு ஏது சந்தர்ப்பம்? அவசியம் தான் என்ன?

கமலாவுக்கு இன்று எவ்வித அச்சமும் உண்டாகவில்லை. அவள் உறுதி குலையாமல் தைரியமாகவே இருந்தாள். அன்று இரவு கண்ணபிரானின் கண்களில் கண்ட வெறி இன்று காணுதது டன் மட்டுமல்ல; அது அடங்கித் தணிந்து போயிருந்தது. மேலும் அந்த வெறிக்கு அவள் பயப்பட வேண்டிய நிலையும் இன்று மாறிவிட்டது. அன்று அவளுக்குத் தன்னை மறந்த நிலை. ஆனால் இன்று அப்படியல்ல. அப்போது நேரவிருக்கும் அபாயம் எத்தகையது என்பது அவளுக்குத் தெரியவே தெரியாது. இன்று அப்படியா? அந்த அபாயமும் தெரியும்; அதற்கு ஈடு கொடுப்பதற்கான உபாயமும் ஓரளவு தெரியும். அவள் மட்டும் மனத்தைத் தளர விட்டுவிடக் கூடாது. அதுதான் முக்கியமாக அவளுக்குத் தோன்றியது.

"எங்கே இத்தனை நாழிகைக்கு மேல்? பகல் எல்லாம் இன்று பேசிக் கொண்டிருந்தது போதாதா? தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு ஒன்பது மணிக்கு மேல் ஓடி வருவானேன்?" என்று கேட்டாள் கமலா.

அவளுடைய வரவேற்பே அவனுக்கு அதைரியத்தைக் கொடுத்தது. அவள் இந்த அன்பை எத்தனை புனிதமானதாகக் கருதுகிறுள் என்பதை நேரில் கண்டபிறகு, அவனுக்குத் தைரியம் அப்போதுமட்டும் எங்கேயிருந்து வரும்?

"இல்லை, கமலா! - இப்பொழுதுதான் பேப்பர் பார்க்கும்போது தெரிந்தது. இன்ருேடு அது கடைசி நாளாம். மணியைப் பார்த்தேன்; ஒன்பதேகால்தான் ஆகியிருந்தது. அதனுல்தான் வேகமாக இங்கே வந்தேன். பெண்கள் ஓரிடத்துக்குப் புறப்படுவது என்ருல் தெரியாதா? அவர்கள் முடிவு செய்ய முடியாமல் தயங்குவது ஒருபுறம் இருக்கட்டும். அலங்காரங்கள் செய்துகொள்ள அரைமணி நேரமாவது குறைந்தது பிடிக்காதா? இப்பொழுது உனக்குச் சொல்லி விட்டேன். சரியாகப் பத்து நிமிஷங்கள் தான் கொடுப்பேன். அதற்குள் எப்படி வருவாயோ, எனக்குத் தெரியாது. உடனே புறப்பட்டுவிட வேண்டும்!" என்ருன் கண்ணபிரான்.

"நான் வரப்போவதை நீங்களே முடிவு செய்து விட்டீர்களா?"

"முடிவு செய்யாமல்? அதுதான் காலையிலேயே ஒப்பந்தம் ஆகிவிட்ட ஒரு விஷயமாச்சே! பாரிஸ்டர் வீட்டைத் தவிர நான் எங்கே கூப்பிட்டாலும், எப்போது கூப்பிட்டாலும் நீ வரத் தயங்கலாமா?"

"தயக்கம் ஒன்றுமில்லை. தயவாகக் கூடக் கேட்டுக் கொள்ளக் கூடாதா?"

"அதற்கெல்லாம் ஒப்பந்த ஷரத்தில் இடமில்லை. தயவாகக் கேட்பதும் தயவில்லாமல் கேட்பதும் ஒன்றுதான்! வரத் தயங்குவதாகத்தான் அது பொருள்படும்!"

"சரி; எங்கே கூப்பிட்டாலும் தயங்கக் கூடாது என்பது ஒரு நிபந்தனைதான். ஆனால் எப்போது கூப்பிட்டாலும் என்கிற வாசகம் அதில் ஏது? உங்களுக்காக உதித்த கற்பனையோ?"

"எல்லாமே அப்படிப் பார்க்கப் போனால் கற்பனைதான். மற்றவை மட்டும் என்ன சட்டமோ, திட்டமோ? உம்...உம்...புறப்படு!" என்று கண்ணபிரான் அவசரப்படுத்தினான்.

"சரி, அப்படியானால் புறப்படுங்கள்! நான் இதோ, இப்போதே தயார்தான்!" என்றாள் சுசீலா.

சுசீலாவுக்கு அலங்காரம் செய்து கொண்டுதான் ஆக வேண்டும் என்று என்ன? சாதாரணமாகவே அவள் அழகுப் பதுமையாகத்தான் விளங்கினாள். அலங்காரம் செய்து கொண்டால் அழகுக்கு அழகுதானே! சுசீலா அழகின் சிலத்துடன் இருந்தாள். ஆகவே அவள் அப்படியே புறப்படுவதாகச் சொன்னதும் கண்ணபிரான் கிளம்பிவிட்டான்.

இருவரும் டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டு தியேட்டரினுள் நுழையும் போதே செய்திப்படம் ஓடிக்கொண்டிருந்தது. இருட்டில்தான் அவர்கள் போய் உட்கார்ந்து கொண்டார்கள். மூன்றாவது காட்சிக்குக்கூட என்ன கூட்டம்! அந்த உயர்வகுப்புக்கூடப் பெரும்பாலும் நிறைந்துதான் போயிருந்தது!

"இந்தப் படத்துக்கு என்றுதான் இவ்வளவு கூட்டமா, இல்லை எல்லாப் படங்களுக்குமே இப்படித்தான் கூட்டம் வந்து கொண்டிருக்கிறதா?" என்று கேட்டு வியந்தாள் சுசீலா.

"என்னைக் கேட்டால்? சென்னையில் எப்படியோ எனக்கு என்ன தெரியும்? சிங்கப்பூரில் இந்த இரவுக் காட்சிக்கு எப்போதுமே கூட்டம் அதிகம்தான். சினிமா விஷயத்தில் சென்னை என்ன, சிங்கப்பூர் என்ன?"

சுசீலா படத்தின் ஒளி பிரதிபலித்த அவன் முகத்தைத் திரும்பிப் பார்த்துக்

## சபாஷ் தமாஷ்



மாஜிஸ்திரேட்: இதோ நிற்ப வரை நீங்கள் பலவந்தமாகத் தாக்கிப் படுகாயப்படுத்தியது, உண்மையா?



மாமா: ஏன்டா, மக்கு! தலைக்கு ஒரு மரப் பெட்டியை வைத்துக் கொண்டு, படுத் திருக்கே. தலை வலிக்காதா?

மருமான்: வலிக்காது, மாமா! நான்தான் பெட்டிக் குள் நிறையப் பஞ்சு அடைத் திருக்கிறேனே!



* * *

மாயா

கொண்டே, "எப்போதும் இந்த நடு நிசிக் காட்சிக்குத்தான் நீங்களும் போவீர்களாக்கும்? அதுவும் இப்படி யாராவது துணை சேர்ந்தால்தான் போலிருக்கிறது! அப்படித்தானே?" என்று உள்ளத்திலே காரணமற்ற பொருமை தொனிக்கக் கேட்டாள்.

"நான் படம் பார்க்கவே போக மாட்டேன். எப்பொழுதாவது போனால் தனியாகத்தான் போவேன்! ஆனால் பையிலே ஒருத்தி மட்டும் பதுங்கியிருப் பாள். அவள் யார் தெரியுமா? அவளை நான் சொல்ல மாட்டேன். யாரென்று கண்டுபிடியேன், பார்க்கலாம்!" என்று கூறினான் கண்ணபிரான்.


அவன் போட்ட புதிர் உண்மையோ பொய்யோ, கேட்க என்னவோ காதுக்கு இனிமையாகத்தான் இருந்தது. "எங்கே, அவள் இப்போது பதுங்கியிருக்கிறாளோ, பார்க்கிறேன்!" என்று அவனுடைய சட்டைப் பைக்குள்ளே கையைவிட்டு, தடிப்பாகத் தெரிந்த ஓர் உறையைக் கையில் எடுத்தாள்.

கண்ணபிரான் அதைத் தடுக்கத்தான் முயன்றான். ஆனால் அதற்குள் சுசீலா வெற்றி பெற்று விட்டாள். இருட்டிலே உறையை இழுத்துப் பார்த்தபோது, வேறு ஏதோ கீழே விழுந்து விட்டதோ? சுசீலாவுக்கு அதை இடைவேளையில் கவனித்துக் கொள்ளலாம் என்று தோன் றியது. ஆனால் கையில் அவள் எதிர் பார்த்த படம் என்னவோ இப்பொழுது கிடைத்து விட்டது!

நாலு ஆண்டுகளுக்கு முன் எடுத்த போட்டோ அது. அதிலிருந்த முகத் துக்கும் இப்போதுள்ள முகத்துக்கும் எத்தனையோ மாறுதல்! அவள் மட்டும் என்ன, பழைய சுசீலா வாகவா இருந்தாள்? அப்போது ஓர் அழகு; இப்போது வேறு மாதிரியான அழகு! படத்தை உறையினுள் போட்டு அவனிடமே கொடுத்துவிட்டு அவள் படம் பார்ப்பதில் மூழ்ந்தாள்.

மூச்சுத் திணற வைக்கும் குற்றவாளிக் கூட்டம் வரும் மர்மப் படம் அது. ஆரம்பத்திலிருந்தே இருட்டுத்தான்! இருடர் குழாத்துக்கும் குற்றவாளிகளைத் தேடித் திரியும் போலீசாருக்கும் கைகலப் பில் தொடங்குகிறது படம். அது எப்படி முடியும் என்று ஆவலைத் தூண்டு கிற கட்டத்தில், 'இடைவேளை' வந்து எதிர்பாராமல் குறுக்கிட்டு விட்டது. விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின. சுசீலாவுக்கு இது மிகவும் கூச்சத்தைக் கொடுத்தது; அவளே குற்றவாளியைப் போல் சிறிது விலகிச் சாய்ந்து கொண்டாள்.

கண்ணபிரான் சட்டென்று எழுந்து, "இதோ வருகிறேன்" என்று வெளியில் போனான். சுசீலா விளக்கு வெளிச்சத் தில் கீழே ஏதோ விழுந்தது போலிருந் ததே என்று பார்க்கலானாள். அவள் நினைத்தது சரிதான். நாலாக மடிக்கப் பட்டிருந்த கடிதம்தான் அது! நல்ல வேளை; காற்றில் பறந்து போகாமல் காலடியில் கிடந்ததே என்று அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண் டாள். விளக்குகள் அணையும் வரையில் கண்ணபிரான் தன் இடத்துக்குத் திரும் பவேயில்லை. யாரோ இரண்டு பேருடன் வராந்தாவில் பேசிக் கொண்டிருப்பதை மட்டும் அவள் கவனித்தாள். குத்து மீசையும் கொட்டு விழியுமாய் இருப்ப வர்களுடனெல்லாம் கண்ணபிரானுக்கு என்ன பேச்சு என்று அவளுக்குக் கோபம் தான் வந்தது. (தொடரும்)



# உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது

# பயர்ஸ்டோன்

## ...நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்

ஏனென்றால்—உலகத்தின் தலைசிறந்த மோட்டாரோட்டப் பந்தயங்களில், ஒரு டயர் கூட பழுதுபடாமல், ஆபத்தான நெளிவு சுளிவுகளுக்கும், அகோர அதிர்ச்சிகளுக்கும் கடுங் கொதிப்புகளுக்கும் ஈடு கொடுத்து பயர்ஸ்டோன் டயர்கள் தமது பாதுகாப்புத் தன்மையை ஆண்டுதோறும் நிரூபித்து வருகின்றன. உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பவை பயர்ஸ்டோன் டயர்களே. ஏனெனில் உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும் ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்புத் தரும் அம்சங்கள் பொருத்தியிருக்கின்றன. பயர்ஸ்டோன் அளிக்கும் சிறந்த பாதுகாப்பு செயலில் நிரூபிக்கப்பட்டது.

உட்டாவிலுள்ள போன்வில் ஸால்ட் ஃப்ளாட்ஸ் என்னும் இடத்தில் மணிக்கு சராசரி 266 மைலுக்கு மேற்பட்ட வேகத்துடன் மோட்டாரோட்டியவரான மிக்கி தாம்ஸன், பயர்ஸ்டோன் மோட்டாரோட்டும் சாம்பியன்களின் பெயர்கள் பதித்த வாழையடிவாழையான வரிசையில் இடம் பெறுகிறார்




# Firestone

## பயர்ஸ்டோன்

### நியூ டிலக்ஸ் சாம்பியன்

### டியூப் இல்லாதது அல்லது டியூப்புள்ளது



W.&



# வாழ்க்கை ஒப்பந்தம்

காந்தன்

தமிழ் சினிமாப் படங்கள் அதிகமாக வர ஆரம்பித்ததிலிருந்து சில நாடக அபிமானிகள் நாடகங்கள் நசிக்க ஆரம்பித்து விட்டதாக நினைக்கின்றனர். அது தவறு. நாடகங்களிலிருந்து சினிமா வேறுபடாத வரையில் அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

ஜயந்தி பிக்சர்ஸ் தயாரிப்பான ''வாழ்க்கை ஒப்பந்தம்'' என்னும் படத்தைப் பார்ப்பவர்கள் நம் தமிழ்ப் படங்கள் இன்னும் நாடக மேடையை விட்டு விலகவில்லை என்னும் உண்மையை ஒப்புக் கொள்ளுவார்கள்.

ஒரு பெரிய மிராசுதார் வீட்டில் சமையல் வேலைக்கு ஆள் தேவைப்படுகிறது. அவர் நண்பர் சாரங்கன் சமையற்காரக் கிருஷ்ணனைச் சிபாரிசுக் கடிதத்துடன் அனுப்பி வைக்கிறார். அதே சமயத்தில் எம்.ஏ. படித்த தம் வளர்ப்பு மகனையும் கடிதத்துடன் அனுப்பிவைக்கிறார்; இருவர் பெயரும் ஒன்று யிருந்ததனால் கடிதங்கள் மாறிப்போகவே, எம். ஏ. படித்த கிருஷ்ணன் சமையலறைக்குப் போக நேருகிறது. பிறகு நண்பர் தாமே நேரில் வந்து விஷயத்தை விளக்குகிறார். அதன்பிறகு மிராசுதார் மகள் ருக்மிணிக்கும் கிருஷ்ணன் எம். ஏ.க்கும் காதல் பிறந்து, கல்யாணம் நடந்து, அடுத்தடுத்து மூன்று குழந்தைகளும் பிறந்து விடுகின்றன. அதற்குப் பிறகுதான் கதையே பிறக்கிறது.

படத்தில் சீர்திருத்த மணம் கமழப் பார்க்கிறது. கல்யாணத்தை வாழ்க்கை ஒப்பந்தமாக மாற்றிப் பிரமாண இதழ்கள் கொடுத்து மணமக்களிடம் உறுதிமொழி பெற்றுக் கொள்கிறார் ஒரு தலைவர். கிருஷ்ணன் டைப்பிஸ்டு ராதாவோடு நெருங்கிப் பழகும்போதெல்லாம் அந்தத் 'தலைவர்' வந்து தலையைக் காட்டி மிரட்டுகிறார். ''வாழ்க்கை ஒப்பந்தம்'' என்ற தலைப்பைப் பார்த்து விட்டு நான் புதிய புரட்சி ஏதாவது இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் புரட்சிக்குப் பதிலாகப் 'புதுமையின் வறட்சி' தான் படத்தில் காணப்படுகிறது.

கிருஷ்ணனின் மன உறுதியைச் சோதிக்க முயலும் ராதாவின் நடத்தை வேடிக்கையாயிருக்கிறது. கிருஷ்ணனை வேண்டுமென்றே காதல் வேதனைக் குள்ளாக்கி அவன் மனைவி ஊரில் இல்லாத சமயத்தில் அவனை மாசுபடுத்த முயலுவதாகத் தோன்றுகிறது. மகா தபஸ்வியான விசுவாமித்திர முனிவரே மேனகையைக் கண்டு தடுமாறிப் போனார். இந்தக் காட்சிகள் கிருஷ்ணனை நிரபராதியாக நினைக்கவே தூண்டுகின்றன.


ராதாவாக வரும் ராஜசுலோசனா தளுக்கு, குலுக்கு, மினுக்கு இவைகளோடு ஒன்றும் அறியாத குழந்தையின் இயல்பையும் கொண்டு கச்சிதமாக நடித்திருக்கிறார்.

கிருஷ்ணனாக வரும் ஏ. நாகேசுவரராவ் கட்டிய மனைவியைக் காதலித்தபோதும், டைப்பிஸ்ட் ராதாவைக் கண்டு மயங்கியபோதும், மனைவிக்காக உருகியபோதும் ஜமாய்த்துத் தள்ளியிருக்கிறார்.

கிருஷ்ணன் தவறான பாதையில் போவதைத் திருத்த, அவனது மனைவி ருக்மிணி தற்கொலை செய்துகொண்டு விட்டதாக ஒரு நாடகம் நடத்தப்படுகிறது. அப்பொழுது ருக்மிணி ஒளிந்து கொண்டிருக்கும் அறைப் பக்கம் மட்டும் போகாமல் கிருஷ்ணன் கதறுவதும், குழந்தைகளோடு அவதிப்படுவதும் விந்தைதான்!

கிருஷ்ணனின் மனைவியாக ஜமுனா ஜம்மென்று நடிக்கிறார். அவருக்கு அது மிகவும்பொருத்தமான பாகம்.

ருக்மிணியின் தந்தையாக வரும் எஸ். வி. ரங்காராவின் இயல்பான நடிப்பு, பெண்ணைப் புருஷன் வீட்டுக்கு அனுப்பும்போது அருமையாக வெளிப்படுகிறது. சாரங்கபாணி நகைச்சுவை நாயகமாக விளங்குகிறார்.




வசனங்களின் உதவியில்லாமலே, படத்தின் ஓட்டத்திலிருந்தே கதையை அறிந்து கொள்ளக்கூடிய படம் ''கைதி நெ. 911.'' சிறைச்சாலையிலும், சிறையதிகாரியின் இல்லத்திலும், திருடர்கள் கூட்டத்திலும் கதை வேகமாக நம்மை இழுத்துச் செல்லுகிறது.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட ஒருநிகழ்ச்சி சந்தர்ப்பக் கோளாறினால் ஒரு நல்ல மனிதனைக் குற்றவாளியாக்கிச் சிறையில் அடைக்கிறது. அவன்தான் கைதி நெ. 911. அவன் நம்பர்தான் தொள்ளாயிரத்துப் பதினொன்றே தவிர, ஆயிரத்தில் ஒருவரைக் கூட அவனைப் போன்ற நல்ல மனிதனைக் காண முடியாது!

தன் அருமைக் குழந்தையின் சாயலைச் சிறைச்சாலை அதிகாரியின் குழந்தையினிடம் கண்டு மனம் நெகிழ்ந்து போகிறான் கைதி. அந்தக் குழந்தையும் அவனிடம் அளவு கடந்த பாசம் கொள்ளவே இருவர் நேசமும் வளருகிறது. இந்த நேசத்துக்குக் குறுக்கே முளைக்கிறான், ஒரு வில்லன் சிறைச்சாலையிலேயே. சிறைச்சாலை அதிகாரியின் குழந்தையைக் கடத்திச் சென்று பழி கைதி நெ. 911 தலையில் விழும் படி செய்கிறான். அந்தக் குழந்தையை மீட்டுக் கொண்டுவர, கைதி நெ. 911



எடுத்துக் கொள்ளும் சிரமம் மகத்தானது. போலீஸ் இலாக்காவுக்கு 'டிமிக்கி' கொடுத்து மறைந்து திரிந்த பயங்கரக் கொள்ளைக்கூட்டத்தினரிடம் சிக்கியிருந்த குழந்தையைப் பல சாகசங்கள்புரிந்து காப்பாற்றிஅதன் தந்தை(சிறைச்சாலை அதிகாரி)யிடம் சேர்க்கிறான் கைதி.

குழந்தையை மீட்டுக்கொண்டு வருவதற்குக் கைதி தனக்கு இரண்டு நாட்கள் விடுதலையளிக்கக் கோரியபோது சிறைச்சாலை அதிகாரி மறுக்கவே, அவர் கண்ணெதிரிலேயே கைதி சிறைச்சாலையின் மதிற்சுவரைத் தாவிக் குதித்து வெளியேறிக் குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுகிறான். குழந்தை பெற்றோரிடம் வந்து சேர்ந்த பிறகு கைதி கடைசிக் காட்சியில் சிறைச்சாலை அதிகாரியிடம் இரண்டு கரங்களையும் நீட்டித் தன்னை ஒப்படைத்துக்கொள்ளுகிறான். அந்தக் கட்டம் உள்ளத்தை உருக்குகிறது.

இந்தப் படத்தில் டெய்ஸி இராணியைத் தவிரப் பிரசித்தி பெற்ற நட்சத்திரங்கள் இல்லையென்றே சொல்லலாம். வழக்கமான காதல் காட்சிகள் இல்லை, வசனம் மிகக் குறைவு. பாடல்களும் குறைவுதான். ஆனால் இதன் காரணமாகப் படத்தில் குறை கூறச் சிறிதும் இடம் இல்லை. கைதியாக நடித்திருப்பவர் அருமையாக நடித்திருக்கிறார். குழந்தையைக் கடிக்க வந்த பாம்பைக் காலால் மிதித்துத் தடுத்து அவன் கடியுண்ட கட்டம் உருக்கமாயிருக்கிறது. வில்லனின் சாகசமான நடிப்பும், பார்வையும் நம்மையே அச்சுறுத்துகின்றன.

உணர்ச்சியும், உருக்கமும் கொண்டு கூடவே சாகசங்களும் நிறைந்திருக்கும் 'கைதி நெ. 911' கதை சிக்கல் இல்லாமல் செல்லுகிறது. குழந்தை நட்சத்திரமான டெய்ஸி இராணி பெரிய நட்சத்திரங்களும் வியக்கும் வண்ணம் அருமையாக நடித்திருக்கிறாள். அவளுடைய நடிப்புத் திறமையைக் காண்பதற்காகவே ''கைதி நெ. 911'' இந்திப் படத்தை எல்லாரும் பார்த்து மகிழலாம்.



# படித்துப் பாருங்கள்

## வேலும் மயிலும்

கச்சியப்ப சிவாசாரியார் இயற்றிய கந்த புராணம் ஒரு பெரிய இலக்கியக் கடல். நூல்காவியமாகிய கவிதைக் கடலின் பெரும் பரப்பில் ஆழக் குளித்து முத்தெடுக்கும் ஆற்றல் யாவருக்கும் இருப்பது அருமை. அந்தக் கவிதைக் கடலில் ஆழக் குளித்து முத்துக்களை வெளிக் கொணர்ந்து உரை நடைக் கோவையாக்கிக் காட்டினால் அனுபவிப்பவர்களுக்கு எளிமையாக இருக்கும்.

தமிழ் இலக்கியச் செல்வர் பி. ஸ்ரீ. முருகன் கதையைக் கந்தபுராணக் கடலிலிருந்து எளிய முறையில் 'வேலும் மயிலும்' என்ற தலைப்பில் உரைநடையாக்கித் தந்திருக்கிறார். அவருடைய நூல் கந்தபுராணத்துக்கு ஒரு சுருக்கமான விளக்கமாகத் திகழ்கிறது.

ஆசிரியர் : பி. ஸ்ரீ. வெளியீடு : அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4 ; விலை ரூ. 3.

## அக்கினி வீணை

சும்பிரமான நடையில் சித்திரம் வரைந்து காட்டினாற் போல ஒரு அழகிய சம்பவத்தை ஆழமான கருத்தோடு சொல்கிற கதைகளைப் படிக்க வேண்டுமானால் இந்த அக்கினி வீணை என்ற சிறுகதைத் தொகுதியைப் படித்துவிடலாம். ஜெகசிற்பியன் எழுதிய இந்தத் தொகுதியில் பதினேழு சிறுகதைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு வகை அழகும் கருத்தும் மிளிர்கின்றன. காவிய நடையில் வளர்ந்து முடியும் 'தரிசனம்', கவியின் சோகக்கதையைப் பறவைகள் கூறுவதாக அமைக்கப்பட்ட 'ஜலசமாதி'-மனித இனத்து வளர்ச்சி நிலையை நன்கு சொல்லும் 'மூன்றாவது குரல்'- ஆகிய சிறுகதைகள் பன்முறை படித்தாலும் சுவை குன்றாதவை.

ஆசிரியர் : ஜெகசிற்பியன்; வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17; விலை ரூ. 2-50.

## கள்ளப் படகு

ஆர்வி எழுதிய பத்துச் சிறுகதைகள் அடங்கிய தொகுதி இது. ஒரு சிறுகதை ஆசிரியன் தன்னுடைய எழுத்தில் தானே தோய்ந்து எழுதுகிற தன்மையை அடையும் போது வளர்ச்சியும் உயர்வும் அடைய முடிகிறது. மனம் தோய்ந்து எழுதாத கதைகள் செயற்கையாகத் தோன்றும். ஆசிரியர் ஆர்வியின் கதைகளுக்கு நடுவே அவருடைய எழுத்தின் தன்மை இயற்கையாகத் தோய்ந்திருப்பதை உணரலாம். தாம் எழுதுகிற கதைகளில், கதாபாத்திரங்களில்,—அவற்றின் உணர்ச்சிகளில்—ஆர்வி தோய்ந்து நிற்பதை வாசகன் உணர முடிகிறது. இந்தத் தொகுதியில் தமிழ் நாட்டுப் பத்திரிகை ஏஜண்டு ஒருவரை அச்சு மாறாமல் படம் பிடித்துக் காட்டும் 'கருப்பூர் ஏஜண்டு' ஒரு நல்ல நடைச் சித்திரம். இது தவிரக் கள்ளப்படகு, கோழை என்னும் கதைகளும் மனத்தில் நின்று பதிகின்றன.

ஆசிரியர் : ஆர்வி ; வானதி பதிப்பகம் ; தி.நகர், சென்னை-17. விலை : ரூ 2-00





## ஸ்ரீ தியாகராஜ முசுகுந்த ஸஹஸ்ர நாமாவளி
## ஸ்ரீ சுந்தரமூர்த்தி அஷ்டோத்ர நாமாவளி
## ஸ்ரீ தியாகராஜ ஸஹஸ்ர நாமாவளி


தென்னாட்டில் பக்தியிலோ, கலையிலோ ஈடுபட்டவர் திருவாரூரைத் தெரியாமலிருக்க முடியாது. பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களுக்குள் திருவாரூர் மிகவும் முக்கியமானது. இங்குள்ள பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் தியாகராஜப் பெருமானுக்கும் நாயன்மார்களுக்கும், அதிலும் சிறப்பாய்ச் சுந்தரமூர்த்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தஞ்சை ராஜராஜ சோழ மன்னன் வழிபட்டு வந்த தெய்வமிது. பிற்காலத்தில் இவ்வூரிலேதான் கர்னாடக சங்கீத மும்மூர்த்திகள் தோன்றினர்.

ஆரூருக்குத் தியாகப் பெருமான் வந்து அங்கே கோயில் கொண்டதற்குக் காரணம் அவ்வூரில் ஆண்டுவந்த முசுகுந்தசக்கரவர்த்தி; அவரே தேவலோகத்திலிருந்து தியாகராஜமூர்த்தியைப் பூவுலகத்துக்குக் கொண்டு வந்து இங்கே ஸ்தாபித்தது. ஆகையால் திருவாரூர் தியாகேசனுக்கு நடக்கும் திட்டங்களில் வெகு விரிவாகச் செய்யப்படுவது முசுகுந்த சக்கரவர்த்தி பெயரில் ஏற்பட்ட ஸஹஸ்ர நாம அர்ச்சனை. இதைப் பல பக்தர்கள் சமீபத்தில் நடத்தி அனுபவித்திருக்கிறார்கள்.

தியாகேசன் முசுகுந்த சக்கரவர்த்தி மூலம் ஆரூர் வந்த ஐதிஹ்யத்தைத்தவிர அம்மூர்த்தியின் விசேஷங்களும், அக்கோயில், அவ்வூர் இவற்றைப் பற்றிய பல விசேஷங்களுமுண்டு. இவை ஆரூரில் தனி ஈடுபாடோ தொடர்போ உள்ளவருக்கே தெரியும். இவ்விசேஷங்கள் எல்லாம் முசுகுந்த ஸஹஸ்ரநாமாவளியில் அந்தந்த நாமங்களில் சொல்லப்படுகின்றன. ஆகையால் இந்த நாமாவளியை வெளியிட வேண்டுமென்று பல பக்தர்களுக்கு எண்ணம் இருந்தது. காலம் சென்ற பிக்ஷையாண்டார் கோயில் பண்ணையாளர் கோ. ராஜகோபாலப் பிள்ளை மூலமாய் இவ்வெண்ணம் உருவெடுத்தது. பிள்ளையவர்கள் திருவாரூர் சம்பந்தமாய்த் தியாகராஜ லீலை, கமலாலய மகாத்மியம், தத்துவம் முதலிய நூல்களை முதலில் வெளியிட்டார். அவருடைய கடைசிக் காலத்தில் அவர் இம்முசுகுந்த ஸஹஸ்ரநாமாவளியை வெளியிட ஏற்பாடு செய்தார்.

திருவாரூர் கோயிலிலிருந்தே சம்பாதித்த சுவடிகளைக் கொண்டு பரிசோதித்து இந்நூலை ஆரூரில் பிறந்தவரான டாக்டர் வே. ராகவன் அச்சிட்டு, முகவுரையில் பல நுட்பங்களை விளக்கி, வெளியிட்டுள்ளார். இப்புத்தகத்தில் தியாகேசனிடமிருந்து பிரிக்க முடியாத ஸ்ரீ சுந்தரமூர்த்தியின் 108 நாமாவளியும் தேவநாகரியிலும், தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஸரஸ்வதிமஹால் சுவடிகளிலிருந்து எடுக்கப்பட்டதும் வேத வேதாந்த மணம் கமழ்வதுமான மற்றோர் தியாகராஜ ஸஹஸ்ர நாமமும் இதில் வெளியாகியிருக்கிறது. பிரசுரம் : டாக்டர் வே. ராகவன், 7, ஸ்ரீ கிருஷ்ணபுரம், ராயப்பேட்டை, சென்னை-14.










காலையில் இருக்கும் புதுமலர்ச்சி
நாள் முழுவதும் இருக்க

# பாண்ட்ஸ்

ட்ரீம்ப்ளவர் டால்க்




நாள் முழுவதும் புதுமலர்ச்சியுடனும் குளுமையுடனும் இருக்க, ஸ்நானத்திற்குப்பின் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்!

பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் இன்பகரமான பரிமளமுள்ளது; மற்றும் வியர்வையை உறிஞ்சும் தன்மையுடையது. அது உங்களுக்கு நாள் முழுவதும் நீடித்திருக்கும் புத்துணர்ச்சியை அளிக்கும்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

# செய்யாமற் செய்த உதவி

## விக்கிரமன்

பாச்சா வெகு வேகமாக வந்தான். அவன் கையில் பெரிய பொட்டலம்.

"ருக்கு! ருக்கு!" என்று அழைத்தான். அவன் குரலின் அழுத்தத்தைக் கொண்டே ருக்கு காரியத்தின் அளவை அறிந்துவிடுவாள். இருபது ஆண்டுகளாக அவனுடன் பழகி இதைக்கூட அறிந்துகொள்ள அவளால் முடியாதா, என்ன?

ருக்கு வருவதற்குள் பாச்சா பொட்டலத்தைப் பிரிப்பதற்காக அதைக் கட்டியிருந்த கயிற்றைப் 'பட்பட்' என்று அறுத்தான். உள்ளே பட்டுப் புடவை மின்னியது.

ருக்குவின் கண்கள் மலர்ந்தன. அந்த வழுவழுப்பான ஸ்பரிசத்தை அனுபவித்து ஒரு நொடியில் மகிழ்ச்சியடைந்தாள். தலைப்பையும் பார்டரையும் வண்ணத்தையும் பார்த்து ஒரு முறை கணவன் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள். அந்தப் பார்வையில் 'திடீரென்று இவ்வளவு விலை கொடுத்துப் புடவை எதற்கு?' என்னும் பொருள் தொனித்தது.

"ஆச்சரியமாயிருக்கிறதா? புடவை 'பிஸினஸ்' ஏதாவது ஆரம்பித்து விட்டேன் என்று எண்ணுகிறாயா?" என்றான் பாச்சா புகையிலையைக் குதப்பியவாறு.

"பின் யாருக்கு இது?"—ருக்கு ஆச்சரியமும் சற்று ஏமாற்றமும் மிளிரக் கேட்டாள்.

"ஓகோ! காரியத்தைச் சொல்லவில்லையா?" என்று பாச்சா உரக்கக் கூறிச் சுற்றுமுற்றும் பார்த்து, "ஏய்! யாராவது கேட்டுவிடப் போகிறார்கள். நம்ப பத்மாவுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்து விட்டேன்" என்றான்.

ருக்குவுக்கு அதிசயமாகத்தான் இருந்தது. எனினும் வெளிக்குக் காட்டாமல், "பத்மாவுக்கா? எங்கே வரன்? மாப்பிள்ளை என்ன செய்கிறான்? எனக்குக்கூடச் சொல்லாமல் நிச்சயம் செய்து விட்டீர்களே!" என்று கூறி முடிப்பதற்குள் பாச்சாவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"ஊரெல்லாம் 'டாம் டாம்' போடச் சொல்கிறாயா? நல்ல வரன் கிடைத்தது என்றும் நழுவவிடாமல் அதை முடித்துவிட வேண்டியதுதானே? பொறுமைக் கழுகுகள் காத்துக் கொண்டே இருக்கக் கவ்வித்துவிட" என்று எதிர்வீட்டை நோக்கியவாறு கூறினான். கூறினான் என்பதைவிடக் கூவினான் என்று கூறி விடலாம்.

• • •

பத்து வீடுகள் எதிரும் புதிருமாகக் கொண்ட அந்தச் சந்தில் முதல்வீடு பாச்சாவினுடையது. எல்லாரும் அவன் பெயரோடு 'டகல்' என்ற அடைமொழியைச் சேர்ப்பார்கள். நாமும் ஏன் அப்படிக் கூறவேண்டும்? பாச்சா வீட்டின் எதிரே ரங்கசாமி குடியிருந்தார். நளபாகமாகச் சமைப்பதில் கெட்டிக்காரர். அவரைப் பார்க்கும் போது பாச்சாவுக்கு ஏனோ எரிச்சல் பொத்துக் கொள்ளும்.

அவர் கல்யாண வீட்டில் நான்கு நாட்களும் இடுப்பு ஒடிய வேலை செய்து விட்டு வரும் போது கொஞ்சம் பட்சணங்களைக் கட்டி வந்து குழந்தைகளுக்குக் கொடுப்பார். பாச்சாவின் பெண் பத்மாவும் வாயிற்படியருகே நின்று கொண்டிருப்பாள்.

"ஏ, குட்டி! எப்போ இதுபோல் எனக்கு உன் கல்யாணப் பட்சணம் கொடுக்கப் போகிறாய்? போனால் போகிறது, இதை ருசி பார்!" என்று கூறிக் கொடுப்பார்.

பாச்சா அப்போதுதான் தூங்கி எழுந்து வருவான். "ஓய்! கண்ட எண்ணெயில் செய்தது உடம்புக்கு ஆகாதுங்காணும். பத்மாவுக்குச் சாயங்காலம் வரும்போது காசி பவனிலிருந்து அரை வீசையாவது தித்திப்பு வாங்கிவரணும். நேற்றே அகல்மல் சேட், 'சுவாமி! இந்தாரும் பால்கோவா; எடுத்துப் போங்கோ' என்றான். இனாமாக வாங்குவது நமது ஜாதகத்தில் கிடையாதே! வேண்டாம் என்று கூறிவிட்டேன்" என்று குத்தலாகவும், அதே சமயம் தன் பிரதாபத்தை அளப்பது போன்றும் கூறுவான். ரங்கசாமி அவன் பேச்சைப் பொருட்படுத்த மாட்டார். அவன் பேச்சில் எவ்வளவு சதவிகிதம் ஏற்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும். இருந்தாலும் தம் பேச்சுத் திறமையைக் காட்டாமல் இருக்க மாட்டார்.

"பாச்சா! நீர் என்ன சாதாரண மனுஷரா? மகாராஜா மனசு வைத்தால் காசி பவனையே கொண்டு வந்து விடுவீர். ஆனால் உம் கவனம் பத்மாவிடம் மட்டும் திரும்பவில்லை. இந்த வருஷமாவது கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யப் போகிறீரா, இல்லையா?" என்று கேட்பார். அவருக்குப் பாச்சாவின் போக்கு பிடிக்காவிடினும் மகாலட்சுமிபோல் விளங்கும் பத்மாவுக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆக வேண்டும் என்பதுதான் அவர் அவா. பாச்சாவின் குணத்துக்கு அவனுக்கு வாய்த்த மகளும் மனைவியும் மகளும் பூர்வ ஜன்ம பூசையின் பலன்தான் என்று கூறிக் கொள்வார். "என் பிள்ளையாண்டான் ஒழுங்காக ஓரிடத்தில் நிலையாக இருந்து சம்பாதிச்சிண்டிருந்தான்னா நானே நேரிடையாகப் பத்மாவை என் பிள்ளைக்கு முடித்துவிட மாட்டேனா?" என்று அவர் அடிக்கடி பாச்சாவின் மனைவியிடம் கூறத் தயங்க மாட்டார்.

• • •

திடீரென்று தன் கணவன் பத்மாவுக்கு வரன் நிச்சயப்படுத்திக் கொண்டு வந்தது ருக்குவுக்கு ஆச்சரியமாக இருந்தது. கணவன் சொல் அவளுக்கும் தெரியும் என்றாலும், கல்யாணச் செலவுக்கென்று காலணாக்கூடச் சேர்த்து வைக்காதவர் என்ன செய்யப் போகிறார் என்ற கவலையும்கூட....

"பெரிய காரியத்தை இழுத்து விட்டுக் கொண்டிருக்கிறீர்களே! பணத்துக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று ருக்கு

துணிந்து கேட்டு விட்டாள். அவளுக்குத் தெரியும், குடும்பக் காலட்சேப ரகசியம். வீட்டின் செலவுக்கென்று, 'இந்தா ஐம்பது ரூபாய்' என்று அவன் இந்த இருபது வருட காலத்தில் கொடுத்தது கிடையாது. ஆனால் பாச்சாவின் பேச்சு என்னவோ ஆயிரம் பதினாயிரமாகத்தான் இருக்கும்.


ஒரு தடவை பெரிய 'எஸ்டேட்' விற்பனையில் முழுசாக ஆயிரம் ரூபாய் கிடைத்தது. அதில் ருக்குவுக்கு நாலு பவுனில் சங்கிலி செய்தான். ஆறு மாதங்கள்தான் அது ருக்குவின் கழுத்தை அலங்கரித்தது. பிறகு என்ன ஆனதோ! அவசரம் அவசரமாக வாங்கிக் கொண்டு சென்றவன் பிறகு அதைப் பற்றிப் பேசவே இல்லை.

"செலவுக்கா? என்ன செய்யப் போகிறேன் என்று கேட்கிறாயா?" என்று கூறி 'ஹோ' என்று சிரித்தான் பாச்சா. "இந்தக் கலியாணமே எப்படி நிச்சயம் ஆனது என்கிறாய்? அதுவே பெரிய கதை" என்று ஆரம்பித்தான் பாச்சா.

பாச்சாவின் கதை என்றால் அதில் முக்கிய அம்சம் புளுகும், ஏமாற்றுமே 'ஸஸ்பென்ஸ்'. ஊரிலே எப்படி எப்படிப் பேசிக் கொண்டிருந்தார்களோ—ருக்கு தன் வரையில் எட்டிய செய்தியிலேயே அயர்ந்து போய் வருத்தப்பட்டிருக்கிறாள். ஒருவர் தம் மகளுக்குக் கல்யாணம் ஏற்பாடு செய்துவிட்டார். பாச்சா வீட்டின் மீது கடனுக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறியிருந்தான். அவரிடம் செலவுக்குப் பணம் பெற்றுக் கொண்டான். பாச்சாவின் பேச்சை நம்பி அந்த மனிதர் எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்து விட்டார். 'இதோ அதோ' என்று பாச்சா சொன்னானே யொழிய, பணம் ஏற்பாடு ஆகவில்லை. வடக்கே எங்கோ அவசரக் காரியம் என்று போனவன், இரண்டு மாதங்கள் கழித்துத் திரும்பி வந்தான். அந்தக் கிருஹஸ்தர் சபித்த சாபம். ருக்கு அதை அறிந்து கண்ணீர் விட்டாள். வேறு என்ன செய்ய முடியும்? அவர் தந்தை ஏமாந்து போனதை விடவா? தான் ஒரு பி. ஏ. என்று கூறி நடித்து அவன் ருக்குவை மணந்தான். விவரம் தெரிந்து விட்டதால் ருக்கு கணவனுடைய செய்கைக்காக அவனை வெறுக்கவில்லை. அவன் முகம் கோணாமல் குடும்பம் நடத்தி வந்தாள். இப்போது பத்மாவுக்குக் கல்யாணம்!

• •

"விட்டலாபுரம் சின்னப் பண்ணைக்கு அவசரமாக ஐம்பதாயிரம் ரூபாய் தேவையாயிருந்தது. அதை 'அரேஞ்ச்' செய்யப் போனேனா? அங்கேதான் பத்மாவுக்கு வரனைப் பிடித்தேன். விட்டலாபுரம் பண்ணையாருக்குக் காரியத்தை வெற்றிகரமாக முடித்தேன். பேச்சுவாக்கில் அவர் என் சகதுக்கங்களை விசாரித்தார். நான் பத்மாவைப் பற்றிச் சொன்னேன். கமிஷன்கூட வேண்டாம்; என் பெண் பத்மாவின் கல்யாணப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றேன். 'பூ! இவ்வளவு தானே? டேய், கூப்பிட்டுண்டு வாடா, நம்ம வரதனை' என்றார். அந்த மனுஷர் வரும்போதே தமது பிள்ளையையும் அழைத்து வந்



தார். பிள்ளையாம் பிள்ளை! ராஜவாட்டம் இருக்காண்டி! அடி ருக்கு! நம்ம பத்மா பாக்கியசாலி. நீ அதிர்ஷ்டம் செய்தது போல் உன் பெண்ணும்....''

ருக்கு இங்கே முகத்தைச் சுளுக்கிக் கொண்டு, ''சரி முழுச் சமாசாரத்தையும் சொல்லுங்கோ. கல்யாணம் என்றால் இன்னும் எவ்வளவோ காரியம் இருக்கு'' என்று கணவனின் அறுவயிப் பேச்சை வெட்டினாள்.

''அந்தப் பையன்-அதுதான்மாப்பிள்ளை-பேரு என்னவோ சொன்னார்களே!''

''பெயர், குலம், கோத்திரம் தெரியாமலா நீங்கள் நிச்சயம் செய்தீர்கள்?''



தஞ்சை பொன்னையா நாட்டியக் கல்லூரியின் ஆண்டு விழா ஜில்லா ஜட்ஜ் திரு ஆர். லக்ஷ்மணன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் பள்ளி மாணவிகள் நாட்டியம் ஆடிச் சபையோரை மகிழ்வித்தனர்.

''அட, சீ! உன்னைப் போல் நினைத்தாயா? சமையற்காரப் பிள்ளைக்குக் கொடுக்க வேண்டும் என்று தலைகீழாக நின்றாயே, அதற்கு ஒன்னும்...''

''சமையற்காரன் என்றால் மட்டமா? எதிர் வீட்டவர் பிள்ளைக்கு என்ன குறைவு? நிரந்தர வேலை ஒன்னு ஆயிட்டா கண்ணை மூடிண்டு கொடுக்கலாம்.'

''கொடுக்கலாம், கொடுக்கலாம். உன் பெண்ணும் மாமனுக்கு உதவியாக மாவு அரைச்சுக் கொடுப்பாள்.''

''சரி, சரி, வாயை மூடுங்கோ. அவர்கள் காதிலே விழப் போகிறது. மேலே சமாசாரத்தைச் சொல்லுங்கோ. யாரையோ முனியனையோ, கப்பனையோ நிச்சயம் செய்து விட்டீர்கள், இல்லையா?''

''கப்பனும் இல்லே; முனியனும் இல்லே. நான் இப்போ ஒன்னும் சொல்ல மாட்டேன். நல்ல இடமாப் பார்த்து ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன். நீ தமுக்கு எடுத்து அடித்து விடமாட்டாயா? முதலில் அந்தச் சமையற்காரன் காதுக்கு எட்டும். முதல் வேலையாக அவன் போய் வரனைக் கலைத்து விடுவான்.''

''அப்படிச் சொல்லாதீர்கள். அவர் ஒன்னும் அப்படிப்பட்டவர் இல்லே. அவர் பிள்ளைக்கும் வரன் வருகிறது. பத்மா கல்யாணத்துக்கு முன்பே நடந்து விடும், பாருங்கோ. சரி! சரி! வரன் விஷயமா மீதியையும் சொல்லி விடுங்கோ!''

பாச்சா ருக்குவைக் கம்பீரமாகப் பார்த்து, ''விட்டலாபுரம் பண்ணையார் கூப்பிட்டவுடன் சம்பந்தியாக வரப் போகிறவர் வந்தாரா? அந்தப் பண்ணையாருக்கு என்ன செல்வாக்கு என்கிறாய்? ஒரே அதட்டல்தான். 'இவர் யார் தெரியுமோ? பட்டணத்திலே பெரிய புள்ளி. பாச்சா என்று சொன்னால் நடுங்கும். மந்திரி முதல் மாந்தோப்புக் காவல்காரன்வரை இவருக்குச் செல்வாக்கு. மனுஷன் இருபது வருஷமா புரோக்கர் பிஸினஸ். சுமார் அரை லட்சமாவது சேர்த்திருப்பார். உம்ம பிள்ளையை அவர் பெண்ணுக்குக் கல்யாணம் செய்துக்கக் கசக்கிறதோ? உம், பிள்ளையாண்டான் இப்போது என்ன செய்கிறான்? சர்க்கார் வேலைதானே! பின்னே என்ன ஐயா? வரதட்சிணை என்று அதிகமாகக் கேட்காதீர். கையிலே ஐந்நூறு தரேன். அதுவும் நான்தான் தரப் போகிறேன். எனக்கு அவர் செய்திருக்கிற உதவிக்கு எத்தனையோ தரலாம். உமக்கு நான் செய்திருப்பது குறைச்சலா? அந்த ரூபாயை வாங்கிக்கிங்கோ. அதைத் தவிர, கல்யாணமெல்லாம் பிரமாதமாகச் செய்வார். என்ன சரிதானா?' என்றார். அந்தச்சம்பந்தி மனுஷர் பண்ணையார் சொன்னதற்கு அப்படியே ஒப்புக் கொண்டு விட்டார். பண்ணையார் கிழித்த கோட்டை அவர் தாண்டுவது கிடையாதாம். அவருடைய ஒரே பிள்ளை படித்து வேலைக்குச் சென்றதே பண்ணையார் கிருபையால்தானாம். நானும் அவரும் ரொம்பவும் மனம் விட்டுப் பேசினோம். என் பையிலே நம்ம குட்டி பத்மாவின் புகைப்படத்தைத் தான் எப்போதும் வைத்திருப்பேனே! அதை மாப்பிள்ளைப் பையனிடம் காட்டினேன். அவனுக்குக் கசக்குமோ? சேச்சுப் பாட்டியின் நாத்தனாரின் உடன்பிறந்தான் மச்சினனுக்குப் பத்து நாட்கள் தாயாதியாம். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. பண்ணையாரிடமிருந்து ஐந்நூறு வாங்கினேன். நல்லவேளையாகப் பார்த்து நிச்சயதார்த்தமும் செய்துவிட்டேன். மாப்பிள்ளைக்கு லீவு கிடைப்பது அபூர்வமாம். கல்யாணத்தை அடுத்தவாரம் வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டான். இனிமேல் ஏற்பாடுதான் பெரிய


உங்கள்
கேசத்திற்கும்
தலைக்கும்
ஆரோக்கியத்தையும்
போஷாக்கையும் அளியுங்கள்!
கால்கேட் ஹேர் டானிக் லெனோலின் என்ற ஓர் அற்புதமான எண்ணெய்யுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது தலையில் இயற்கையாக உண்டாகும் எண்ணெய்களை வற்றாது புதிப்பித்து... கேசத்தை ஆரோக்கியத்துடனும், சேர்த்தியாகவும் இருக்க உதவுகிறது.
COLGATE
HAIR TONIC
Lanolin
புதிய கால்கேட்
ஹேர் டானிக்
லெனோலின் கலந்தது


Exide
சேவையில்
சிறந்ததென
நிரூபிக்கப்
பட்டது
ஸில்வர்
எக்ஸைட்
குளோரைட் & எக்ஸைட் பாட்டரீஸ் (ஈஸ்டர்ன்) பிரைவேட் லிட்.
சென்னை, ஆந்திரா, கேரளா & மைசூர் ராஜ்யங்களுக்கு முக்கிய ஏஜெண்டுகள்
ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஆப் இந்தியா
பிரைவேட் லிமிடெட் — — சென்னை-2
கிளைகள்: கோயமுத்தூர், பெங்களூர், செகந்திராபாத்

காரியம். வெளியே எல்லோரிடமும் ஆயிரத்தைந்நூறு ரூபாய் வரதட்சிணை ; சீர் ஆயிரம்; செலவு ஆயிரம் என்று கூறியிருக்கிறேன். நீ 'ராபணு' என்று குட்டை உடைத்துவிடாதே. முக்கியமாக எதிர்வீட்டுக்காரரிடம் ஆயிரத்தைந்நூறு என்றே சொல்லி வை. எப்படியும் நமக்குக் கல்யாணச் செலவுக்கு ஆயிரம் ரூபாய் தேவை. எங்கே போவது என்றுதான் தெரியவில்லை...''

பாச்சா முதலில் கூறி வந்தபோது ருக்கு நம்பாத முறையிலேயே கேட்டு வந்தாள். பிறகு கவனத்துடன் கேட்கலானாள். தன் கணவன் பொறுப்புடன் பெண் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்திருப்பது குறித்துப் பெருமையடைந்தாள். 'கல்யாணம், கல்யாணம்' என்று அவள் வருவோர் போவோரிடம் பெருமையாகக் கூறினாள். எதிர்வீட்டு வரத மாமாவிடம் ருக்கு கலியாணம் நிச்சயமானதைக் கூறினாள்.

அவர் ஏதும் கூறவில்லை. தம் பிள்ளைக்கும் வரன் ஏற்பாடாகி வருவதாகக் கூறியதோடு, பத்மாவின் கலியாணத்தன்று சமையல் பொறுப்பைத் தாம் ஏற்பதாகவும் கூறினார். பாச்சாவுக்கும் அதில் பெருமைதான். அவரை விடத் தான் உயர்ந்தவன் என்பதை இந்த வகையில் காட்டிக் கொள்ளலாமல்லவா? ஆனால் அவன் அதிசயப்படும்படியான செய்தி ஒன்று கிடைத்தது. அவரது மகன் முந்நூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு கம்பெனியின் மானேஜராக அமர்ந்து விட்டான் என்ற செய்தியே அது. பாச்சா ஒருகணம் திகைத்தான். சமையற்காரன் மகனுக்கு அடித்த அதிர்ஷ்டத்தையே ஒரு நாள் முழுவதும் நினைத்து ஏங்கினான். பிறகு தன் மகள் கல்யாண மும்முரத்தில் அதை மறந்தான்.

எங்கெங்கோ அலைந்து ஐந்நூறு ரூபாய் சேகரித்து விட்டான். இன்னும் ஐந்நூறாவது வேண்டும். தன் கணவனின் கவலையும், கஷ்டமும் அறிந்த ருக்மிணி எதிர் வீட்டுச் சமையற்கார மாமாவையே அணுகினாள். விவரம் முழுவதும் கூறினாள். பத்மாவுக்கு நல்ல இடம் கிடைத்தது குறித்துச் சந்தோஷப்பட்டார். அவருடைய முயற்சியில் ஐந்நூறு ரூபாய் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

• • •

கலியாண ஏற்பாடு வெகு மும்முரமாக நடைபெற்றது. சத்திரம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மேளக்காரனுக்கு அட்வான்ஸ்; வரதன் தம் நம்பிக்கைக்கு உகந்தவர்களைச் சமையலுக்கு ஏற்பாடு செய்து முதல் நாள் மாலையே வந்து விட்டார். மாப்பிள்ளை எப்படி இருப்பாரோ என்ற கவலை ருக்குவுக்கு. பத்மாவுக்கு அந்தக் கவலையில்லை. பொதுவாகக் கல்யாணம் என்ற குதூகலம் அவள் மனத்தில். வரதனுக்கு மட்டும் அவளைக் காணும்போது, அவளைத் தம் மருமகளாக ஏற்கும் பாக்கியம் ஏற்படவில்லையே என்று சொல்லமுடியாத வருத்தம்.

பாச்சா ஒருமுறை விட்டலாபுரம் சென்று சம்பந்தி வீட்டாரைப் பார்த்து வந்தான். கல்யாண ஏற்பாடு வெகு தடபுடல் என்பதைக் கூறினான், ரயில் செலவைப் பற்றிச் சம்பந்தி கேட்டார். ஊருக்குப் போய் அனுப்புவதாகக் கூறி வந்தான். ரயில் செலவுக்குச் சம்பந்தி வீட்டார் பணம் கேட்டார் என்றால் கேலி செய்யப் போகிறார்கள் என்று மனைவியிடம் கூட அந்தச் செய்தியை ஒளித்து எங்கோ கடன் வாங்கிப் பணம் அனுப்பினான்.

கலியாண நாளுக்கு முதல் நாள் காலையிலேயே சத்திரத்துக்கு எல்லோரும் வந்து விட்டனர். வரதனின் மகனும் ஊரிலிருந்து வந்திருந்தான், தந்தையிடம் தன் புது உத்தியோகத்தைப் பற்றிக் கூறுவதற்காக. பாச்சாவுக்கு அவனைப் பார்க்கும்போது ஏனோ எரிச்சலாக இருந்தது. ஆனால் அவனே பத்மாவின் கல்யாணத்துக்கு வேண்டிய வேலைகளைத் தானே மேலெடுத்துக் கொண்டு செய்யலானான்.

மாலை நான்கு, ஐந்து, ஆறு என்று நேரம் ஓடிக் கொண்டிருந்தது. தெற்கே இருந்து வரும் வண்டி காலையிலேயே வந்துவிட்டது. மாலை வண்டியும் வந்துவிட்டது. மாப்பிள்ளை வீட்டாரைக் காணவில்லை. ரயில்வே ஸ்டேஷனுக்கும் வீட்டுக்குமாகப் பாச்சா அலைந்த வண்ணம் இருந்தான்.

''எப்பொழுது வருவதாகக் கூறினார்கள்?''

''காலை வண்டிக்குத்தானே வருவதாகக் கூறினார்கள்?''

''எல்லாம் நீங்கள் சரிவரத் தெரிந்து கொண்டீர்களோ?''

''கலியாணத்துக்கு எல்லோரும் கூடி விட்டார்களே! கல்யாணம் நின்று விட்டால் என்ன செய்வது?'' என்றெல்லாம் பாச்சாவைப் பலர் கேட்ட வண்ணம் இருந்தனர். மாப்பிள்ளை அழைக்கும் நேரம் தவறியது. மாப்பிள்ளை அழைக்காவிட்டால் என்ன முகூர்த்த நேரத்துக்கு வந்தால் கூடப் பரவாயில்லை என்று வரதன் கூறினார்.

அன்று இரவு பாச்சாவுக்குத் தூக்கமே வரவில்லை. பயங்கரக் கனவுகள் வந்து போயின. ஊரார் எதிரே தலைஉயர்ந்து நிற்குமளவுக்குக் கல்யாண காரியங்கள் செய்து விட்டுக் கல்யாணம் நடக்காது போவதென்றால்?... எல்லோரும் என்ன நினைப்பார்கள்? எதிர்வீட்டுச் சமையற்கார வரதன் என்ன நினைப்பார்? அவர் எதிரே மிகவும் உயர்தரமாக நடக்க எண்ணிய தனக்கும் இப்படியா? ஒரு வேளை சம்பந்தி வீட்டார் வராமலே போய் விட்டால்...அதை நினைக்கவே முடியவில்லை.

ருக்குவுக்கு இரவெல்லாம் வேலை இருந்தது. கூடவே வேதனையும் இருந்தது. சமையல் நடக்கும் இடத்துக்குச் சென்று வரதனிடம் நடக்க வேண்டியதைப் பற்றிக் கேட்க எண்ணினாள். பரிசாரகர்கள் காய்கறி நறுக்கிக் கொண்டும், பட்சணம் செய்து கொண்டும் பேசிய வண்ணம் இருந்தனர்.

''நாளைக்குக் கல்யாணம் நடக்குமா? நின்று விடுமா, மாமா?'' என்று அரட்டைக் கல்லி ஒருவன் வரதனைக் கேட்டான்.

கரண்டியை ஓங்கியவாறு, ''ஏண்டா, நிற்கிறது? உன்னைப் பிடித்து மணையில் உட்கார வைத்து விட்டால் போகிறது!'' என்றார். எல்லோரும் 'குபீ'ரென்று சிரித்தனர். ருக்குவுக்கு வேதனை தாங்கவில்லை. திரும்பி வந்து மூலையில் உட்கார்ந்து விம்மி விம்மி அழு

தான். பத்மா நிஷ்களங்கமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். பாச்சா புரண்டு படுத்த வண்ணம் இருந்தான். வரதனுடைய மகன் ஸ்டோர் ரூமிலிருந்து சாமான் எடுத்துக் கொடுத்தவாறு இருந்தான். மேளக்காரர்கள் ஒரு மூலையில் தூங்கினர்.

* * *

பொழுது புலர்ந்தது. மேளக்காரன் வாசிக்கவில்லை. இரவெல்லாம் விழித்துச் சமையலுக்கு ஆவன செய்தவண்ணம் இருந்த வரதன் அவர்களைத் தட்டி எழுப்பி மங்கள வாத்தியம் வாசிக்கத் தூண்டினார். கல்யாண வீட்டில் கசாமுசா பேச்சு. பாச்சா முகத்தில் ஈயாடவில்லை. எல்லோரும் அவனை விசாரித்த வண்ணம் இருந்தனர்.

"நீங்கள் விவரம் தெரிஞ்சுதானே நிச்சயம் செய்தீர்கள் ?"

"நாலு பேரை வைத்துக் கொண்டுதானே ஏற்பாடு செய்தீர் ?"

"சம்பந்தி வீட்டார் பலே பேர்வழி போலிருக்கிறது."

"இப்படி ஒரு கூட்டம் கிளம்பி விட்டது போலிருக்கிறது."

"எவ்வளவு ரூபாய் பாச்சா? உன் சக்திக்கு ஆயிரத்தைந்நூறு லட்சம் ரூபாய்க்குச் சமம் இல்லையா ?" என்றெல்லாம் விசாரித்த வண்ணம் இருந்தனர் அனைவரும்.

பாச்சாவுக்கு அழுகையே வந்து விடும் போலிருந்தது. வரதட்சிணை கொடுத்தது ஆயிரத்தைந்நூறு இல்லை ; வெறும் ஐந்நூறு தான் என்று கூறிவிட வேண்டும் என்று அவனுக்குத் துடித்தது.

முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொருவராக நழுவிக் கொண்டிருந்தனர். கல்யாணம் நின்றுவிட்டால் சாப்பாடு கிடைக்காமல் போய் விடுமோ என்று அவசரம் அவசரமாகச் சிலர் சாப்பிட்டு விட்டுப் போய்க் கொண்டிருந்தனர்.

வரதன் தம் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தார். ருக்குவுக்கும், பாச்சாவுக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ருக்கு தான் வரதனிடம் ஓடினாள். அடுப்பின் செஞ்சுடர் அருகே வியர்வை முத்துமுத்தாக அரும்ப வடை போட்டுக் கொண்டிருந்த அவர் அவளைத் திரும்பிப் பார்த்தார்.

ருக்கு 'கோ'வெனக் கதறி விட்டாள். "மாமா! இனி எப்படி ஊர் முகத்தில் விழிப்பேன்? இப்படி ஏமாறுபவர்களும் உண்டா? இந்தக் கல்யாணம் தட்டி விட்டால் பத்மாவின் கதி என்ன? அவளை மணக்க வருபவர்கள் யோசனை செய்ய மாட்டார்களா? ஆயிரம் ரூபாய் கல்யாணச் செலவு வேறு வீணாகிறதே, மாமா !" என்று விம்மினாள் ருக்கு.

பாச்சா குனிந்த தலையுடன் நின்றிருந்தான். கர்வம் ஒடுங்கிய நிலைதான் அது.

வரதன் தம் முகத்தைக் கைத்துண்டால் துடைத்துக் கொண்டார்.

"ஏனம்மா கவலைப்படுகிறீர்கள்? முகூர்த்தத்துக்கு வேண்டியதைப் பாருங்கள். போய் மணையில் பெண்ணை உட்காரச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு, "டேய், செல்லப்பா !" என்று கூப்பிட்டார்.

"ஏனப்பா ?" என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தான் அவர் மகன்.

"சீக்கிரம் ஸ்நானம் செய்துவிட்டு முகூர்த்த வேஷ்டியை உடுத்திக் கொள். மணையில் போய் உட்கார். என்ன செய்வது? கடைசியில் சமையற்காரன் பிள்ளைதான் பத்மாவுக்கு வாய்த்திருக்கிறான். மாமனுக்கு உதவியாக இருக்க மாட்டானா?" என்றார்.

செல்லப்பா பறந்தான்.

"மாமா !" என்று ருக்குவும் பாச்சாவும் ஏக காலத்தில் கூவினர். இருவர் கண்ணீரும் அவர் பாதத்தை நனைத்தன.

* * *

"கெட்டி மேளம், கெட்டி மேளம்" என்ற குரல். வாழ்த்தொலி முழங்கப் பாச்சாவின் செல்வக் குமாரத்தியைச் சமையற்காரன் மகன் மணந்தான்.

ஆனால் பாச்சா ஒரு வாரம் கழித்துக் கல்யாணம் விசாரித்தவர்களுக்குச் சொன்ன வார்த்தை :

"விட்டலாபுரத்தில் ஒரு வரன் ஏற்பாடு செய்து அட்வான்ஸும் கொடுத்தேன். நம்ப வரதனின் பிள்ளை ஐந்நூறு ரூபாய்ச் சம்பளம் வாங்கும் மானேஜராம். 'உன் பெண்ணுக்குப் பண்ணிக்கிறயாடா' என்றான். "சரி அந்த அட்வான்ஸ் போனாலும் போகிறது என்று விட்டு விட்டேன் !"—ருக்கு இதைக் கேட்டுத் தன் தோள்பட்டையில் முகத்தை இடித்துக் கொண்டாள் !

கல்கி

# மாவட்டச் சிறுகதைப் போட்டி

**முதற் பரிசு ரூ. 200** **இரண்டாவது பரிசு ரூ. 100**

★

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும், எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

**நான்காவது போட்டி**

## வடஆற்காடு மாவட்டம்

### விதிகள்

1. கதைகள் வடஆற்காடு மாவட்டத்தின் சூழ்நிலை எல்லாவகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், தொழில் வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப்போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் "கல்கி" ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துப் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற, கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. வடஆற்காடு மாவட்டப் போட்டிக்கான கதைகள் செப்டம்பர் 30-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்துசேர வேண்டும்.

9. போட்டி முடிவு அக்டோபர் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், தலைப்புக்களிலும் "கல்கி வடஆற்காடு மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:—வடஆற்காடு மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி

# காதலித்தார் நெஞ்சம்

வாசவன்



"காதலிக்கத் தெரியாத நீயும் ஒரு பெண்ணு?"

கேட்டவன் தோழியாக இருந்திருந்தால் சிரித்திருப்பேன். யாரோ ஒரு பித்துக்குளிப் பையன் கேட்டிருந்தால் இழுத்து நாலு கொடுத்திருப்பேன் கன்னத்தில். கேட்டவனோ யார் கேட்கக் கூடாதவனோ அவன்! நான் ஒழுங்காக இருப்பதில் யார் கவலைப்பட வேண்டுமோ, அவனே கவலை இல்லாமல் கேட்டான்.

காலம்கெட்டுவிட்டது. 'வாழ்க்கை' என்ற வசீகர மோகினியின்வலைப் பட்ட மனிதர்களால் தர்மம் கெட்டு விட்டது. தவறான அரசியல்வாதிகளால் ஒழுக்கம் கெட்டு விட்டது. ஆனால் பெற்ற தாயின் மனம் கூடவா இப்படிக் கெட்டுப் போக வேண்டும்? எதனாலும் கலரக் கூடாத தாய்மை இப்படிக் கலவரப்பட்டு நிற்பதும் காலக் கொடுமைதானே?

அப்பொழுது உணர்ச்சிகள் நிறைந்த ஒரு பெண் என்பதை நான் காட்டிக் கொண்டிருந்தால் அம்மாவை வார்த்தையால் பிய்த்துப் பிய்த்து எடுத்திருப்பேன். கல்லைப்போல், மண்ணைப்போல், மரம்போல் ஜடமாகத்தான் விரும்பினேன். ஆனால் அம்மா விடவில்லை.

"ஏண்டி! செக்கு உலக்கையைப் போல் நிற்கிறாய்? இப்படி வாயில் கொழுக்கட்டை வைத்துக் கொண்டிருந்தால் நீ வாழ்ந்து குப்பை கொட்டுவது தான் எப்படி?"

அம்மா கல்லைப் பிசைந்து களியாக்கி விட்டாள். மண்ணைக் குழைத்து உணர்ச்சியாக்கி விட்டாள். நான் சாடி விழும் சடைமழை யாவதைத் தவிர வேறு வழி இல்லையே! ஆனால் நிதானத்தோடு நிறுத்தலாகத் தான் தொடங்கினேன்: "என் அம்மா, சொல்லும்? குப்பையைக் கொட்டுவதற்குக் காதல் எதற்கு? கூடையிருந்தால் போதாதா?"

"போதுமடி உன் அசட்டு நியாயம்! ஒரு வாரமாக வராத பிள்ளை வந்து நம் வீட்டில் தங்கியிருக்கிறான். அவனுடைய பிரியத்தைச் சம்பாதித்து ராஜாத்தி வாழ்க்கையைத் தேடிக் கொள்வாயா? இல்லை, உன் அப்பாவைப் போல் எதிலும் ஒட்டாமல் குட்டிச் சுவராகப் போவாயா?"

அப்பொழுதும் நான் கொட்டும் மழையாக வில்லை. "அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"உலகத்து இளம் பெண்களைப் போல் நடந்து கொள்ளவேண்டும் என்கிறேன். இருக்கிற நல்ல புடவைகளை உடுத்திக் கொண்டு பளிச்சென்று இருக்கக் கூடாதோ? வேண்டும் என்றே கிழிசல்களைத் தேடிப் பிடித்து அணிந்து கொள்கிறாய். ஆயிரம்

பதினாயிரத்தை அநுபவித்து இழந்து விட்டவள் போல் அழுது வடிகிறாய்...''

''சிரித்து வடிய என்ன வந்து விட்டது?''

''என் அண்ணா பிள்ளை வந்திருக்கிறான்! லட்சாதிபதியின் ஒரே பிள்ளையடி அவன்! பெரிய வியாபார ஸ்தாபனத்தைக் கட்டும் இளையுமாகப் பெருக்கும் புத்திசாலி. மன்மதனின் மறு அவதாரம் அவன்.''

''பேஷ், பேஷ்! சாப்பாட்டில் சூரர்; பணத்தில் ரொம்பக் கெட்டி - இப்படி யெல்லாம்கூட வர்ணிக்கலாம். இல்லையா? இதற்காக நீ சிரித்தால் போதாதா?''

''ஐயோ மூடமே!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள். ''நான் சிரித்த சிரிப்புக்குத்தான் உன் அப்பாவிடம் வந்து சீரழிந்து நிற்கிறேனே! இனிமேல் சிரிக்க வேண்டியவளும், அதனால் சீரான வாழ்க்கையைப் பெற வேண்டியவளும் நீ தான்'' என்றாள்.

''அதெப்படி முடியும்? சிரித்தால் சீரழிந்தல்லவா போக வேண்டும்? நீ சிரித்துச் சீரழிந்து நிற்கிறதைப் பார்த்த பிறகும் எனக்குச் சிரிக்கப் பைத்தியமா என்ன?''

அம்மா என்னை எப்படிப் பார்த்தாள்? அந்தப் பார்வை அவள் சின்ன மனுஷியாகி விட்டதை அப்பட்டமாகக் காட்டியது. 'சபலம் எத்தனை சீக்கிரமாகச் சின்னத்தனமாக்கி விடுகிறது?' என்பதற்கு ஓர் உதாரணமாக அம்மா பொங்கிக் கொண்டிருந்த பொழுது, நான் மௌனத்தின் மூலம் ஒரே கணத்தில் பெரிய மனுஷியாகி விட்டேன்.

அம்மா என்னுடைய உயர்ந்த நிலையைக் கண்டு பொறுமைப்படுபவள் போலச் சீறினாள். ''உருப்படாத பரம்பரை!''

நான் சிரித்தேன்.

அம்மா எரிந்து விழுந்தாள்: ''எதற்காகச் சிரிக்கிறாய்? பெற்றவளைப் பேயாக்குவது நல்லதில்லை.'' சிறிது நேரத்தில் அம்மா தணிந்த குரலில் கூறினாள்: ''அசட்டுப் பெண்ணே! எதற்காக நான் அடித்துக் கொள்கிறேன் என்பதைக் கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாயா? நீ வளர்ந்து செழித்து நிற்கிறாய். ஒழுங்கான இடத்தில் உன்னைப் பிடித்துக் கொடுக்கக் குடும்பத்தில் ஏதாவது வழியுண்டா? உன் அப்பாதான் வழியாக இருக்கிறாரா? ஊமைக் கோயிலில் திருவுளம் கேட்கப் போன கதையாக, 'எனக்கு என்ன வழி செய்கிறாய்?' என்று கேட்கிறது உன் வயசு. இந்தச் சமயத்தில் கடவுளே அனுப்பி வைத்தது போல் சபாபதி வந்திருக்கிறான்...'' அம்மாவுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. இன்னும் தொடர்ந்து பேசப் பிரயாசைப் படுபவள் போல் உதடுகளைநெளித்தாள்.

இப்படிப்பட்ட சமயங்களில் அவளைப் பேசவிட்டு விடுவதே நல்லது என்பது எனக்குத் தெரியும். அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்.

அவள் என் உள்ளத்தில் சின்னஞ்சிறு விதை ஒன்றைப் போட்டுப் பெரிய ஆலமரத்தை உடனே உண்டுபண்ண விரும்பியவள் போலப் பேசினாள்: ''சபாபதிக்குப் பெண் கொடுக்க ஆயிரம் பேர்கள் அவன் வீட்டு வாசலில் காத்து நிற்கிறார்கள். என் அண்ணாவுக்கும் சமதையான இடத்தில் பெண் கொள்ள வேண்டும் என்ற ஞாபகம். சபாபதிக்கு மட்டும் உறவுதான் பெரிது. இல்லா விட்டால் வியாபார காரியமாக வந்த பிள்ளைக்கு வசதியாகத் தங்க ஆயிரம் ஹோட்டல்கள் இல்லையோ?''

''ஹோட்டல் ஜாபிதாவைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? நீ சொல்வதை அப்படியே நம்புகிறேன்!''

''நம்பி நீ நாசமாய்ப் போனாய்'' என்று சீறியவள் கண்களில் எங்கிருந்துதான் இரண்டு அருவிகள் கொட்டினவோ தெரியவில்லை. ''குதிர் போல வளர்ந்து நிற்கிறாயே என்று நான் கவலைப்பட்டுச் சாகிறேன். நீ கவுனி மதம் கொண்டாடுகிறாய். பெண்ணைப் பெற்ற மனுஷன் ஓடாத வாழ்க்கையைச் சீட்டாட்டத்தில் விட்டு வீசுகிறார். நீயானால் இருபது வயதாகியும் குழந்தையாக இருக்கிறாய்.''

''நான் குமரிப் பெண்ணாகி விட்டதற்காக என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

''சபாபதியோடு நீ சரளமாக நடந்து கொள்ள வேண்டும். அடிக்கடி மாடிக்குப் போய் அவனோடு மனம் விட்டுப் பழக வேண்டும்.''

''மனம் விட்டுப் பழகி...?''

''அவனைக் காதலிக்கச் செய்ய வேண்டும்.''

''காதலிக்கச் செய்து...?''

''அவனை நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். தர்மா! அவன் உன்னைக் காதலித்தால்தான் இந்தச் சம்பந்தம் ஏற்பட வழியுண்டு. இல்லா விட்டால் எனக்குப் பிறந்த வீட்டு உறவு போய் விடும்; உனக்கு வசதியான வாழ்க்கை கிடைக்காமல் போய் விடும். யாரோ ஓர் ஏழைப் பையனைத்தான் நீ கட்டிக் கொண்டு சீரழிந்து நிற்க...''

''நிறுத்தம்மா!'' என்ற என் கூச்சலைக் கேட்டு அம்மா நடுங்கிப் போனாள். ''ஓர் ஆணுடன் தன் பெண்ணை மானத்தை விட்டு மாடியில் கொட்டம் அடிக்கும்படி சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை? உங்களுக்கு என்னைப் பிடித்துத் தள்ளுவதற்கு ஓர் ஏழைப் பையன் கிடைக்காவிட்டால் கிணறு கூடவா இல்லாமல் போய் விட்டது? ஆயிரம் காலம் நான் கன்னியாக இருந்தாலும் மானத்தை விட மாட்டேன்.''

''மானத்தை யாரடி விடச் சொன்னார்கள்? அவனைக் காதலிக்கும்படி தூண்டத்தானே சொன்னேன்?'' அம்மாவுக்குத் தன் முட்டாள்தனம் புரிந்திருக்க வேண்டும். இல்லையானால் சாட்டையைப் போலச் சொடுக்கும் அவள் குரல் இப்படியா செத்த தனமாய்ப் புலம்பி இருக்கும்?

''காதலிக்கும்படி தூண்டுவதா? நீ காதல் என்று சொல்வதற்குச் சரியான பெயர் என்ன தெரியுமா? கிளர்ச்சி. மோகவலை விரித்து இளமையின் பூரிப்பைக் கிளறி விடுவதற்குப் பெயர் காதல் அல்ல. தூண்டினால் எரிவது திரி. தூண்டாமல் எரிவது காதல். அந்தக் காதலின் பவித்திரமான லட்சியத்தைச் சிதைத்து வீணாக்கத்தானா என்னைப் பெற்றாய்? இப்படியொரு உபதேசத்தைச் செய்ய உனக்கு வெட்கமாக இல்லை?''

# மேலான வாழ்க்கையை நடத்த விரும்பினால் இதைப் படித்துப் பாருங்கள்



இன்றைய உலகில் மேலான வாழ்க்கை நடத்த எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன. ஆனால் எவ்வளவோ பேர்கள் பழங்கால மூடக்கொள்கைகளைக் கடைப்பிடித்துக்கொண்டு இந்த வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தாமல் விலக்கிக் கொள்ளுகிறார்கள்.

உதாரணத்திற்கு உணவின் விஷயத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். திடகாத்திரமாகவும் ஆரோக்கியத்துடனும் இருக்க ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு குறைந்தபக்ஷம் இரண்டு அவுன்ஸாவது கொழுப்புச் சத்து தேவைப்படுகிறது என்று விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். இந்தக் கொழுப்பு வனஸ்பதி மூலம் எளிதில் கிடைக்கும். இருந்தும், பலபேர்கள் வனஸ்பதியில் சமையல் செய்ய அச்சப்படுகிறார்கள். இந்த சத்துள்ள தாவரக்கொழுப்பு ஏதோ இந்தியாவில் மட்டுமே தயாரிக்கப்படுகிறது என்பது இவர்கள் எண்ணம். ஆனால் உண்மை என்னவென்றால் உலகெங்கும் ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துபவர்கள் சமையலுக்கு வனஸ்பதியையே உபயோகிக்கிறார்கள். டென்மார்க், ஹாலந்து, அமெரிக்கா போன்ற வெண்ணெய் ஏராளமாக உற்பத்தியாகும் தேசங்களில்கூட வெண்ணெயைவிட அதிக அளவில் வனஸ்பதி போன்ற கொழுப்பு களையே உபயோகிக்கிறார்கள். ஏனென்றால் வனஸ்பதி போன்ற தாவரக்கொழுப்புகள், பால்க் கொழுப்புகளைப் போலவே போஷாக்கு வாய்ந்தவை, ஆரோக்கியமளிப்பவை, மற்றும் மிக்க மலிவானவை என்று அவர்களுக்குத் தெரியும்.

**சுத்தமும் போஷாக்கானது — முக்கிய விட்டமின் சேர்ந்தது**

வனஸ்பதி, கடலை எண்ணெய் மற்றும் எள்ளெண்ணெயிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இந்த எண்ணெய்களை சுகாதாரத் தேவைப்படி சுத்தமான நவீன தொழிற்சாலைகளில் கண்டிப்பான கட்டுப்பாடுகளின்கீழ் சுத்தம்செய்து வனஸ்பதி தயாரிக்கப்படுகிறது. ஆகவே அது தூய்மையாகவும் போஷாக்கு வாய்ந்ததாகவும் உங்களுக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம். மேலும், ஒவ்வொரு அவுன்ஸ் வனஸ்பதியிலும் 700 இன்டர்நேஷனல் யூனிட் விட்டமின் 'ஏ' சேர்க்கப்பட்டுள்ளது. விட்டமின் 'ஏ' வினும் சரும ஆரோக்கியத்திற்கும் கூர்மையான பார்வைக்கும் இன்றியமையாதது.

மேலான வாழ்க்கை நடத்துபவர்கள் சமையலுக்கு வனஸ்பதியையே உபயோகிக்கிறார்கள். மேலான வாழ்க்கை நடத்த விரும்பும் நீங்களும் வனஸ்பதியை உபயோகிக்கத் தொடங்கலாமே!

**வனஸ்பதி — இல்லாளுக்கு வரப்பிரசாதம்**

*தி வனஸ்பதி மான்யுபாக்சரர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்டது*


6666
DRY DISTEMPER
Feltona
LUSTROL
SUPERLAC
Synthetic Enamel
Ready Mixed Paint
WOODKOTE
Duradol
... கடைசியாக, சகோதர சகோதரிகளே,
சாமான்கள் பளபளப்புடன், அதிக நாள் உழைப்
பதற்கு, பல வித ரகங்களில், எவ்வித வேலை
களுக்கும், ஷாலிமார் பெயின்ட்கள் கிடைக்
கின்றன என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.
SPW 496 TAM
SHALIMAR
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO. PRIVATE LTD.

அம்மாவின் முகத்தில் கூடிக் குவிந்தது கலவரக் கூட்டம். அவளின் உதைபட்ட நெஞ்சத்தின் வேதனைப் புலம்பல்தானோ அவள் விட்ட பெரு மூச்சு?

''அத்தை! கொஞ்சம் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமே!'' மாடிப்படியில் கேட்பது அத்தான் குரல் அல்லவா?

''இதோ அனுப்புகிறேன்'' என்று உற்சாகத்துடன் எதிரொலித்தாள் அம்மா. ஒரே கணத்தில் எப்படி வேதனையை உதறி எறிந்து விட்டாள்? நடிகன் வேஷத்தை மாற்றுவதைப் போல் உணர்ச்சிகளை உடனுக்குடன் மாற்றிச் சந்தர்ப்பத்தை ஏமாற்றும் வித்தை இவளுக்கு எப்படி வந்தது?

நான் ஆச்சர்யத்தால் ஓர் அதிவாளியா வதை விரும்பாதவள் போல் அம்மா, என் தோளில் கைவைத்து அழுத்தினாள். ''உன் அத்தானுக்கு தண்ணீர் வேண்டுமாமே. கொஞ்சம் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருகிறாயா?'' என்றாள்.

''நான் எதற்காகக் கொடுக்க வேண்டும்? அவரைக் கிளர்ச்சி கொள்ளச் செய்யவா? நான் சௌக்கியமாக வாழவேண்டும் என்ற ஆசையில் நீ எத்தனை கீழ்த்தரமான முறையில் என்னைத் தூண்டியிருக்கிறாய், தெரியுமா? அந்த முறையில் குபேர சம்பத்தே வந்தாலும் எனக்கு வேண்டாம்'' என்று இரைந்து விட்டு அந்த இடத்தில் நான் நிற்கவில்லை.

போய் விழுந்தேன் என் அறையில். கொக்குக்கு ஒரே மதி என்பார்கள். அதைப்போல் வயதுவந்த தன் பெண்ணுக்கும் வாலிபம் பற்றிய ஒரே மதி என்று நினைத்துவிட்டாள் அம்மா! நான் கொடுத்துவந்த சூடு அவளுக்கு ஏழு ஜன்மத்துக்குப் போதும். ஆனால் அவள் இந்த ஜன்மத்தின் பொறியைத் தொலைக்கக் 'குதிராக வளர்ந்து' நிற்கும் நான் ஒருத்தி போதாதா?

அவளுக்கு ஏற்கனவே ஆயிரம் கவலைகள். கட்டிய புருஷன் வழி இல்லை. அம்பாரமாக வாழ்ந்த குடும்பம்தான். அப்பா பிறக்கும் போது சீட்டுக் கட்டோடு பிறந்திருக்கா விட்டால் குடும்ப நிலை 'பானை படுத்தால் குதிரை மட்டம்' என்பது போலவாவது இருந்திருக்கும். அப்பாவுக்குச் சீட்டுத்தான் வாழ்க்கை. அந்த வாழ்க்கைக்காகக் குடும்பத் தொந்தத்திலிருந்து விடுபட்டு ஓடிக்கொண்டிருந்தார். கிடைத்தது கடன். ராஜாங்கத்தைப் போன்றது எங்கள் வீடு. ஐயாயிரம் ரூபாய்களை அதன் பேரில் கடன்தர எவன் மறுக்கப் போகிறான்? வீட்டுக் கூரையைத்தான் அவர் அடமானம் வைத்தார் என்றும் வீட்டுக்குள்ளேயாவது ஒரு பிடிமானம் வேண்டாமா? அவர் பிடிமானம் எல்லாம் சீட்டு முனையில் போய் விட்டது.

இப்படி அவலமான ஆண்பிள்ளைகளுக்குத்தான் கெட்டிக்கார மனைவி வாய்ப்பாள். என் அம்மாவும் அப்படித்தான். இல்லா விட்டால் இந்த வீட்டில் இன்னும் விளக்கு எரியுமா? வாடகை, முறை வாசல், மின் விளக்கு என்ற வகையில் மாதம் நூறு ரூபாய் வரும். இந்த ரூபாய்க்குள் குடும்பத்தின் ஓட்டையை வெளியே தெரியாமல் அடைத்து,



குற்றவாளி: என்னைப் பாக்கணும்னு சொன்னீர்களாமே!

சூதாடிக் கணவனைச் சமாளித்து, எனக்கும் மூன்று பவுனில் சங்கிலி பண்ணிப் போட்டிருக்கிறாள்.

அவளால் சாத்தியமானது அவ்வளவுதான். அராபிக் குதிரைபோல் நான் வளர்ந்து விட்டதற்காகப் பாவம், அவள் என்ன செய்வாள்? ஆயினும் பதினாயிரத்தைக் கொட்டிக் கொடுத்து ஒரு மகராஜன் கையில் என்னைப் பிடித்துக் கொடுக்க அவள் எங்கே போவாள்?

வறுமையைப் போலப் பலஹீனமானது எதுவுமே இல்லை. அம்மாவும் ஒரு பணக்காரியாக இருந்தால் தன் மகளை அலங்காரம் செய்துகொண்டு ஓர் ஆடவனுடன் சரளமாகப் பழகச் சொல்வாளா? 'அரிது அரிது, மானிடராய்ப் பிறப்பது அரிது' என்னும் உண்மையை, 'பணம்' என்னும் உயிரற்ற ஜடம் எத்தனை அற்பப் புழுவாக ஆக்கி விடுகிறது?

அம்மா அற்பப் புழுவானது உண்மை. ஆனால் எனக்காக என்பதுதான் இங்கே இருக்கும். அவளை நான் கொத்திப் பிடுங்கியது தவறு என்பது புரிகிறது. ஆனால் அவள் கூற்றை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லையே! காதல் என்னும் மகத்தான தத்துவம் அம்மாவின் புத்துரைப்படி எவ்வளவு பெரிய சாக்கடையில் விழுந்து விட்டது?

ஓர் உண்மையை இத்தனை வந்ததுக்கு அப்புறம் சொல்லித்தானாக வேண்டும். அம்மாவிடம் வாயடி கையடி அடித்திருந்தாலும்கூட அத்தானிடத்தில் எனக்கு நிஜமாகவே காதல் உண்டு. அவருக்கு நான் மனைவியாகிவிட வேண்டும் என்று வேண்டாத தெய்வம் இல்லை. ஆனால் அத்தானைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் எல்லோரிடமும் பேசினார். என்னிடமும் பேசினார். ஆனால் இரண்டுக்கும் துளி வித்தியாசம் கூட இல்லை. நான் வித்தியாசத்தைத்தானே எதிர்

பார்த்தேன்? உண்மையான காதல் ஏக காலத்தில் தோன்றுவதே சத்தியம் என்றால் இருவரிடத்தும் ஒரே சமயத்தில் தான் காதல் மலர்ந்திருக்க வேண்டும். பிறகு ஏன் மறைத்துக் கொண்டு இருக்கிறார்? அவர் ஊருக்குப் புறப்படுவதற்கு முன்னால் விட்டுக் கேட்டுவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அம்மா விரும்புவது போலப் பருவத்தைக் கௌரி விட்டல்ல. உள்ளத்தால் எழுப்பிக் கொள்ள வேண்டிய வாழ்க்கைக்குப் பகட்டு உடனா அஸ்திவாரம்? அல்ல!

இந்தப் புரிபடாத தத்துவத்தை அப்பாவும் விளங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தது என் முட்டாள்தனம். இரவுக்குள் சந்தர்ப்பப்பட்டால் அம்மாவுக்குச் சாதகமாக எதையாவது சொல்லி வைக்க வேண்டும். பெற்ற மனம் கொதித்தால் ஒன்றும் உருப்படாதாமே!

மாலையில் ஏதோ ஜோலி என்று அம்மா வெளியே போய் விட்டாள். கீழே நான். மாடியில் அத்தான். ஓர் ஆணையும் பெற்ற பெண்ணையும் தனியே விட்டுவிட்டு அவளுக்கு அப்படி என்னவாம் பிரமாத ஜோலி? எக்கேடோ கெட்டு, எப்படியோ சொத்தும் போகாமல் நான் உயர்ந்த இடத்தில் வாழ்ந்தால் போதும் என்று நினைத்து விட்டாளா? ஆனால் உருப்படியாக வாழ நான் ஏன் இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது! அத்தானிடம் இப்பொழுதே விட்டுக் கேட்டு விடுகிறேன்.

நான் மாடிப்படியில் ஏறக் கால் வைத்த போது. அத்தான் மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார். ஒரு கையில் பெட்டி. ஒரு கண்ணில் ஆழ்ந்த அமைதியின் ஜீவ ஒளி; மற்றொரு கண்ணில் தோய்ந்த துயரத்தின் இருள் பின்னல். இதெல்லாம் என்ன? இரட்டை உணர்ச்சிகளைக் கொண்ட இரட்டை மனிதர்களா ஓர் அத்தானுக்குள் குடிபுகுந்திருக்கிறார்கள்?

படியில் இருந்த என் காலைக் கீழே இழுத்துக் கொண்டேன். இறங்கி வந்த அவர் என் முன்னால் வந்து நின்றார்.

அவர் என்னை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. விழிகள் தொலை தூரத்தில் மிதந்து கொண்டிருந்தன. அவருடைய செயல் என் மனத்தை அகழ்ந்து எடுத்தது. "எங்கே கிளம்பி விட்டீர்கள்?" கிணையின் முன்னால் அமர்ந்திருப்பவனை 'என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்பதைப் போல் இருந்தது என்னுடைய கேள்வி.

"ஊருக்கு."

"திடீரென்று கிளம்பினால் என்ன அர்த்தம்?"

"மனிதனுடைய வரவும் போக்கும் எந்தக் கணமே தீர்மானிக்கப்பட்டவை அல்ல. பல உண்மைகளின் நியாயமான விளக்கம் திடீரென்று கிடைப்பதுதான்."

'நான் எதையோ கேட்கிறேன்."

"நீ எதைக் கேட்டாலும் பதில் இதே தான்!" என்று கூறி விட்டுக் கையிலிருந்த பெட்டியைக் கீழே வைத்தார். பாக்கெட்டிலிருந்து ஓர் உறையை எடுத்தார். என்னிடம் கொடுத்தார். "இதை நீ எப்பொழுது வேண்டுமானாலும் படிக்கலாம். அத்தைக்கும் மாமாவுக்கும் என் நமஸ்காரத்தைச் சொல்லு!" விறுவிறென்று வேகமாக நடந்தார். சில விநாடிகளுக்குப் பிறகு வாசல் அவரை மறைத்துக் கொண்டது.

எதையும் செய்யச் சக்தியை இழந்திருந்தவள், பின்னர் மர்மச் சக்தி ஒன்றைப் பெற்றவள் போலக் கையிலிருந்த உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

"சகோதரி தர்மாவுக்கு,

இன்று என்னை ஓர் உன்னதப் பணிக்கு ஆளாக்கி விட்ட புண்ணியத்தைக் கட்டிக் கொண்டு விட்டாய். எப்படி என்று கேட்க விரும்புகிறாயா? நான் உன்னைக் காதலித்தேன்! நீ இல்லாமல் வாழ முடியாது என்ற நிலைக்கு நான் வந்து விட்டதால்தான் ஒரு வேலையும் இல்லாமல் இந்த வீட்டில் பல நாட்கள் பழியாகக் கிடந்தேன். இன்று காலை வரை என்னைப் போல் நீயும் காதலிக்கிறாய் என்று நினைத்திருந்தேன். அதைத் தெரிந்து கொள்ளும் வரை உன்னிடம் என் உள்ளத்தை வெளிப்படுத்தக் கூடாது என்று என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் நீ என்னைக் காதலித்ததற்கு அறிகுறியாக ஒரு சம்பவ சாட்சியும் கிடைக்கவில்லை. இருந்தாலும் உன்னிடம் கேட்டு விடுவது என்று சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தேன்.

"இன்று காலையில் நான் கேட்காமலே உன் பதிலைச் சொல்லி விட்டாய். உனக்கும் உன் அம்மாவுக்கும் நடந்த உரையாடலை மிக மிகக் கவனமாகக் கேட்டேன். என்னிடம் உனக்குக் காதல் இல்லை என்று தெரிந்து கொண்டேன் அதன் மூலம். பாவம். அத்தை! என் பணத்துக்காகத் தானே அத்தை என்னோடு உறவாடச் சொன்னார்? உறவாட வேண்டாம். என் சொத்துச் சேமிப்புத் தொகை ரூபாய் இருபதாயிரத்தையும் உனக்கு முழு மனத்துடன் வழங்கும் செக்கை இத்துடன் அடக்கம் செய்திருக்கிறேன்.

'எனக்குக் கிடைக்காத வாழ்க்கை உனக்குக் கிடைக்கட்டும். எனக்குக் கிடைத்த முடிவு எந்த ஒரு காதலனுக்கும் கிடைக்க வேண்டாம். நீ இல்லாத வாழ்க்கையை இந்த வீட்டோடு உதறி விட்டுப் போகிறேன். இனி நான் எங்கோ ஒரு மூலையில் துறவற வாழ்க்கையை மேற்கொண்டிருப்பேன். அத்தை அமர்க்களம் பண்ணுவார். அதனால் அவர் இல்லாத சமயம் விடை பெற்றுக் கொள்கிறேன். இனி நீ ஒரு குமாஸ்தாவைக் கட்டிக் கொள்ள வேண்டாம். இருபதாயிரம் ரூபாய்க்கு ஓர் ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளையே கிடைப்பான். சகல சௌபாக்கியவதியாய் வாழ என் ஆசீர்வாதம்.

சபாபதி"

கடிதம் பறந்தது; செக் பறந்தது. அதோடு என் வாழ்க்கையும் பறந்தது. பறக்க முடியாத இந்தச் சடலம் மட்டும் பூமிக்குப் பாரமாய் அழுத்திக் கொண்டிருந்தது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras 10
Managing Editor: T. Sadasivam


வியப்பூட்டும் சலவைப் பவுடர்
Surf
AMAZING BLUE POWDER
FOR THE CLEANEST WASH EVER!
விலை பெரிய சைஸ் ரூ. 2/19 ந.பைசா, சாதாரண சைஸ் ரூ. 1/12 ந. பைசா; (பிரதேச வரிகள் உள்பட)
நீலநிற ஸர்ப்
உங்கள் துணிகளின் வெள்ளைவெளேரென்ற சலவைக்கு
கற்பனே செய்திருக்க மாட்டீர்கள் அற்புத சலவைப் பவுடராகிய ஸர்ப் போன்று மகத்தான வெண்மை தரும் பவுடர் ஒன்றை!
பார்த்திருக்க மாட்டீர்கள் இது போன்று அற்புத நுரை கொழிக்கும் சாதனம் ஒன்றை! எத்தகைய நீரிலும் வெள்ளவெளக் கொழித்தெழும் நுரைவளம்!
உணர்ந்திருக்க மாட்டீர்கள் சலவை இவ்வளவு எளிதென்று! சிரமமேயில்லை யாது: ஊறவிட்டுக் கசக்கி அலசினலே காரியம் ஆயிற்று!
அடைந்திருக்கவே மாட்டீர்கள் உங்கள் பணத்திற்கு இதுபோன்ற அற்புதமான ஈடு! உங்கள் குடும்பத்தின் எல்லா துணிகளுக்கும் உகந்தது!
வெள்ளைவெளேரென்ற சலவைக்கு—ஸர்ப்
இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு
SU. 25-X29 TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

